769
04/07/07

Issued 26-3-2007

வெளியீடு 26-3-2007

14 ஜூலை
600 008
எழும்பூர்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

04/07/07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஆகஸ்ட் 30, 2006—தொகுதி 15—எண் 3

Wednesday, the 30th August, 2006 —Volume 15—No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

...slative Assembly Secretariat, Chennai - 600 009

V 2006, 3, P
Vol. 15-3
227435

[Price Rs. 3.00

**30–8–2006**

## உள்ளடக்கம்

*பக்கங்கள்*


**1. இரங்கற் குறிப்பு—**

*முன்னாள் உறுப்பினர் மறைவு* 583-584

**2. வினாக்கள்–விடைகள்—**

*உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 4)* 584-615

**3. கவன ஈர்ப்பு—**

*தாராபுரம் தொகுதி, கள்ளிப்பாளையம், ஆதி திராவிடர் காலனி மக்களுக்கு அடிப்படை வசதிகள்* 615-621

**4. அறிவிப்பு—**

*தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)* 621

**5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

*தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006* 621-622

பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2006-2007, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

கோரிக்கை எண் 22 – உள் துறை–காவல்
கோரிக்கை எண் 23 – உள் துறை–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்
கோரிக்கை எண் 37 –மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை
— தொடர்ச்சி 622-761

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 654,701-734, 737

*திரு. ஆர். ஞானதாஸ் 622-628, 746,754

திரு. ஜி.கே. மணி 628-632, 638-640, 643-645, 657-666, 694, 734-735, 743, 749,757

*திருமதி டி. யசோதா 666-676

திரு. ஓ. பன்னீர்செல்வம் 647-649, 676-691, 693-699

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 761


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 14, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037
## 2006 ஆகஸ்ட் 30, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்*
*நீங்கா நிலனாள் பவர்க்கு"*

காலம் தாழ்த்தாத, விரைவான நடவடிக்கைகளும், அறிவுடைமையும், துணிவும், நாடாளுகின்றவர்களுக்குத் தேவையானவையும், நீங்காமல் நிலைத்திருக்க வேண்டியவையுமான பண்புகளாகும்.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. கு. பெரியசாமி அவர்கள் 29-8-2006 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. கு. பெரியசாமி அவர்கள், அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டம், கொடவாசல் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1971 முதல் 1976 வரை திறம்படப் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[பேரவைத் தலைவர்] [2006 ஆகஸ்ட் 30

மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227435
சென் ... 600 008

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்
### (பட்டியல் 4)@

1—

### மின் கம்பிகள்

**வினா எண் ...—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, புதுப்பட்டினம், உய்யாலிகுப்பம் பகுதியில் பழுதடைந்துள்ள மின் கம்பிகளை மாற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, புதுப்பட்டினம், உய்யாலிகுப்பம் பகுதியில் பழுதடைந்துள்ள மின் கம்பிகளை மாற்ற மதிப்பீடு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. வெகு விரைவில் மின் கம்பிகள் மாற்றப்படும்.

2—

### கரும்பு வெட்டும் தொழிலாளர்கள்

**வினா எண் 38—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல், அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2006 ஆகஸ்ட் 30]

உடுமலைப்பேட்டை, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் சிறப்பு பட்டத்தில் கரும்பு வெட்ட ஆட்கள் பற்றாக்குறையைப் போக்க இயந்திரத்தின்மூலம் கரும்பு வெட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

உடுமலைப்பேட்டை, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் சிறப்பு பட்டத்தில் கரும்பு வெட்ட ஆட்கள் பற்றாக்குறையைப் போக்க இயந்திரத்தின்மூலம் கரும்பு வெட்ட அரசு முன்வராது. ஏனெனில், இயந்திரத்தின்மூலம் கரும்பு வெட்டுவதற்கு அதற்காகப் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய செலவினம் மிக அதிகமாகும். மேலும், தற்போதுள்ள கரும்பு நடவு முறையில் அறுவடை இயந்திரம் பயன்படுத்துவது சிரமம். எனவே, கரும்பினை வெட்டுவதற்கு கரும்பு வெட்டும் தொழிலாளர்களின் பற்றாக்குறையைப் போக்க உரிய வழிமுறைகள் மேற்கொண்டு ஆலை அரைவை பாதிக்காதவாறு முழு முயற்சி மேற்கொள்ளப்படும்.

3—

### சுமைப் பணித் தொழிலாளர்கள்

**வினா எண் 988—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகில் உள்ள வேளாண் வணிக வளாகத்தில் சுமைப் பணித் தொழிலாளர்கள் உடை மாற்ற, உணவருந்த இடம் ஒதுக்கித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

மதுரை, மாட்டுத்தாவணி வணிக வளாகத்தில் நெல், மலர், இடுபொருள் வணிகர்கள் மற்றும் அலுவலக உபயோகப் பயன்பாட்டிற்கும் சேர்த்து மொத்தம் 314 கடைகள் கட்டப்பட்டுள்ளன. வணிக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள கடைகளில் இதுவரை 127 நெல் வணிகர்களுக்கும், 44 இடுபொருள் வணிகர்களுக்கும் கடைகள்

ஒதுக்கீடு செய்யப்பட்டு, பயன்படுத்தி வருகின்றனர். இதர கடைகளை முன்பணம் செலுத்தியுள்ள சம்பந்தப்பட்ட வணிகர்களுக்கு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அனைத்துக் கடைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு காலியாக இடம் இருப்பின் அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்தாலோசித்து சுமைப் பணித் தொழிலாளர்களுக்கு இடம் ஒதுக்குதல் குறித்து பரிசீலனை செய்யப்படும்.

**4—**

## உற்பத்தி செய்தல்

**வினா எண் 3228—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தேவைக்கேற்ப கரும்பு, பருத்தி உற்பத்தி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தேவைக்கேற்ப கரும்பு உற்பத்தி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளது. தமிழகம் பல வருடங்களாக கரும்பு உற்பத்தித் திறனில் முதலிடம் வகிக்கிறது. சுமார் 2.75 முதல் 3.00 இலட்சம் எக்டேரில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது.

நமது மாநிலத்தில் தேவையான 55 முதல் 60 இலட்சம் பொதிகள் பருத்திக்கு மாறாக தமிழகத்தில் 5 சதவீதம் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் உள்ளூர் சந்தை தேவைக்கும், உற்பத்திக்கும் இடையில் இடைவெளி ஏற்பட்டுள்ளது. பருத்தி விலையில் உள்ள ஏற்ற இறக்கங்களும், சாகுபடி செலவு அதிகரிப்பும், குறைந்த செலவில் பயிரிடக்கூடிய மக்காச்சோளம், கம்பு போன்ற சிறு தானியப் பயிர்களை மாற்றுப் பயிராக சாகுபடி செய்ய விவசாயிகள் விரும்புவதும் இதற்குக் காரணங்களாக உள்ளன என்றும், மாநிலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு விரிவாக்கப்பட்ட பணிகளைத் தீவிரப்படுத்துவதன்மூலமும், தரமான இடுபொருட்களை வழங்குவதன்மூலமும், விலை வீழ்ச்சி ஏற்பட்டதால் மத்திய அரசுமூலம்





கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுப்பதன்மூலமும் பருத்தி சாகுபடிப் பரப்பினை உயர்த்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**5—**

## ஆசிரியர் பணியிடங்கள்

**வினா எண் 4098—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மண்டலத்தில் கல்லூரிகளில் 33 சதவீதம் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

அரசுக் கல்லூரிகளில் காலியாக உள்ள விரிவுரையாளர் பணியிடங்களில், 1,020 விரிவுரையாளர்களை ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் நியமனம் செய்ய அரசு ஏற்கெனவே ஆணையிட்டுள்ளது. அவ்வாறே, அரசு உதவிபெறும் கல்லூரிகளில் 600 விரிவுரையாளர்களை நியமனம் செய்ய சம்பந்தப்பட்ட கல்லூரி மேலாண்மைகளுக்கு அரசு அனுமதியளித்துள்ளது.

**6—**

## வங்கி நிதி உதவி

**வினா எண் 2883—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சுனாமி பாதித்த பகுதிகளில் நிவாரணப் பணிகள் மேற்கொள்வதற்காக ஆஸ்திரேலிய வங்கி நிதி உதவி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

7—

## சுற்றுலாத் தலம்

**வினா எண் 454—திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையை சுற்றுலாத் தலமாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் தொடங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது சுற்றுலாத் துறையின்மூலம் எந்தவொரு பகுதியையும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அறிவிப்பதில்லை. ஆனால், சுற்றுலாத் தலத்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, அப்பகுதியின் முக்கியத்துவம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடன் குடிநீர் வசதி, உணவகம், சாலை வசதி, தங்கும் வசதி, போக்குவரத்து, நிலச்சீரமைப்பு, வாகன நிறுத்துமிடம், பொருட்கள் பாதுகாப்பு அறை, கழிவறை போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்த சுற்றுலாத் துறையின்மூலம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறையின்மூலம் கொல்லிமலையில் கட்டமைப்பு வசதிகள் (கழிப்பறை, உடை மாற்றும் அறை, குடிநீர்த் தொட்டி பழுதுபார்த்தல், சாலை மேம்பாடு, இளைஞர் விடுதி பழுதுபார்த்தல், குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள் போன்றவை) ஏற்படுத்துவதற்காக ரூ.20.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது. மேற்காணும் வேலைகள் மாவட்ட ஆட்சித் தலைவரால் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. 2005-2006 ஆம் ஆண்டில், கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் திட்டத்தின்கீழ் கொல்லிமலையில் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த ரூ.7.00 இலட்சம் (சுற்றுலாத் துறை பங்கு ரூ.3.50 இலட்சம் + மாவட்ட நிர்வாகப் பங்கு ரூ.3.50 இலட்சம்) ஒப்பளிக்கப்பட்டது.



8—

## சுற்றுலாத் தலம்

**வினா எண் 1088—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் மலைப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

சுற்றுலாத் துறை எந்தவொரு பகுதியையும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அறிவிப்பதில்லை. ஆனால், சுற்றுலாத் தலத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, அப்பகுதியின் முக்கியத்துவம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடன் உரிய கருத்துரு கிடைக்கப்பெற்றால், குடிநீர் வசதி, உணவகம், சாலை வசதி, தங்கும் வசதி, போக்குவரத்து, நிலச்சீரமைப்பு, வாகன நிறுத்துமிடம், பொருட்கள் பாதுகாப்பு அறை, கழிவறை போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்த சுற்றுலாத் துறையின்மூலம் நிதி உதவி பெற்று, கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் மலைப் பகுதியில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

9—

## படகுத் துறை

**வினா எண் 1094—திரு. கு. சின்னதுரை:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, 74 கிருஷ்ணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த குக்கிராமமான வலசகல்பட்டி ஏரியை சுற்றுலாத் தலமாக அறிவித்து படகுத் துறை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்நிதியாண்டில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்ச**

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது சுற்றுலாத் துறையின்மூலம் எந்தவொ
பகுதியையும் சுற்றுலாத் தலத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த பகுதியா

அறிவிப்பதில்லை. ஆனால், சுற்றுலாத் தலத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, அப்பகுதியின் முக்கியத்துவம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடன் குடிநீர் வசதி, உணவகம், சாலை வசதி, தங்கும் வசதி, போக்குவரத்து, நிலச்சீரமைப்பு, வாகன நிறுத்துமிடம், பொருட்கள் பாதுகாப்பு அறை, கழிவறை போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்த சுற்றுலாத் துறையின்மூலம் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. தலைவாசல் தொகுதி, 74 கிருஷ்ணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த வலசகல்பட்டி ஏரியில் படகுத் துறை அமைக்கக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கலந்து பரிசீலிக்கப்படும்.

**10—**

## சுற்றுலா மையம்

**வினா எண் 1577—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதியிலுள்ள பெட்டமுகிலாளம் என்னும் 3,500 அடி உயரம் கொண்ட பசுமையான இயற்கை எழில் கொண்ட இடத்தைச் சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலா மையம் என அறிவிப்பதில்லை. எனினும், சுற்றுலாப் பகுதிகளுக்கு வரும் பயணிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அடிப்படை வசதி ஏற்படுத்தித் தருகிறது.

**11—**

## சுற்றுலா மையம்

**வினா எண் 1578—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேன்கனிக்கோட்டை வட்டம், தேவர்பிட்டா கிராமத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஈஸ்வரன் கோயிலைச் சுற்றுலா மையமாக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**மிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

ற்றும் (ஆ) தேன்கனிக்கோட்டை வட்டம், தேவர்பிட்டா ல் வரலாற்றுச் சிறப்புமிக்க ஈஸ்வரன் கோயிலைச் சுற்றுலா கும் உத்தேசம் எதுவும் தற்பொழுது சுற்றுலாத் துறையிடம் ஆனால், சுற்றுலாத் தலத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் கை, அப்பகுதியின் முக்கியத்துவம் மற்றும் மாவட்ட ஆட்சித் ன் பரிந்துரையுடன் குடிநீர் வசதி, உணவகம், சாலை வசதி, ம், தங்கும் வசதி, போக்குவரத்து, நிலச்சீரமைப்பு, வாகன ம், பொருட்கள் பாதுகாப்பு அறை, கழிவறை போன்ற ட வசதிகளை ஏற்படுத்த சுற்றுலாத் துறையின்மூலம் நிதி ங்கப்படுகிறது.

## சுற்றுலா மையம்

**எண் 1790—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை ர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

ரால்பாறை, ஆழியாறு அணைப் பகுதி மற்றும் புல்மலைப் ள சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு முன்வருமா?

ம் எனில், எப்போது?

**புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

மிழ்நாடு சுற்றுலாத் துறை எந்தவொரு பகுதியையும் சுற்றுலா துவம் வாய்ந்த பகுதி என அறிவிப்பதில்லை.

ழவில்லை.

## படகுப் போக்குவரத்து

**எண் 1935—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சுற்றுலாத் மைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஆகஸ்ட் 30

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி அணையில் படகுப் போக்குவரத்து ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது சுற்றுலாத் துறையின்மூலம் அமராவதி அணையில் படகுப் போக்குவரத்து ஏற்படுத்த திட்டம் சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

**14—**

**தங்கும் விடுதி**

**வினா எண் 1937—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதியில் அமைந்துள்ள அமராவதி, திருமூர்த்தி அணைகளில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் தங்கும் விடுதிகள் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) இதுபோன்ற திட்டம் எதுவும் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் தற்போது இல்லை.

(ஆ) எழவில்லை.

**15—**

**கேளிக்கை மையம்**

**வினா எண் 2141—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரத்தில் சுற்றுலா கேளிக்கை மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2006 ஆகஸ்ட் 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

மாமல்லபுரத்தில் சுற்றுலா கேளிக்கை மையம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

**16—**

**படகுக் குழாம்**

**வினா எண் 2572—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு படகுக் குழாமை மேம்படுத்த அரசிடம் புதிய திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு படகுக் குழாமை மேம்படுத்த எவ்வித செயற்குறிப்பும் தற்போது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் இல்லை.

**17—**

**ரோப் கார் வசதி**

**வினா எண் 3070—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் ஆழியாறு அணை, பரம்பிக்குளம் அணை, சோலையாறு அணை, டாப்சிலிப் பகுதியின்மேல் மற்றும் புல்மலைக்குமேல் ஆகிய இடங்களில் ரோப் கார் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில் ஆழியாறு அணை, பரம்பிக்குளம் அணை, சோலையாறு அணை, டாப்சிலிப் பகுதியின்மேல் மற்றும்

புல்மலைக்குமேல் ஆகிய இடங்களில் ரோப் கார் அமைத்திட எவ்வித செயற்குறிப்பும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

18—

## சுற்றுலாப் பேருந்து வசதி

**வினா எண் 3253—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள சுற்றுலா இடங்களைப் பார்வையிட சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் பேருந்து வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் நடத்தப்படும் பயணத் திட்டங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படும் பயணத் திட்டங்கள் யாவும் சென்னையிலிருந்துதான் நடத்தப்படுகின்றன. சுற்றுலாப் பயணத் திட்டங்களை நடத்த 21 சொகுசுப் பேருந்துகள் உள்ளன. எனவே வால்பாறை தொகுதியிலுள்ள சுற்றுலா இடங்களைப் பார்வையிட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் பயணத் திட்டம் (tour) நடத்த இயலாது. எனினும், வால்பாறையில் உள்ள சுற்றுலாப் பயணத் திட்டம் நடத்துபவர்கள் முன்வருவார்களேயானால், அவர்களை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஊக்குவிக்கும்.

19—

## உடற்பயிற்சி நிலையம்

**வினா எண் 1684—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் பெண்களுக்குத் தனியாக உடற்பயிற்சி நிலையம் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் பெண்களுக்குத் தனியாக உடற்பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள திறந்தவெளி விளையாட்டு அரங்கத்திலும், பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடத்திலும் பெண்களுக்குத் தனியாக நேரம் ஒதுக்கித் தர வாய்ப்புள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

20—

## நூலகம் அமைத்தல்

**வினா எண் 1686—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில், விளையாட்டு தொடர்பாக நூலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். காஞ்சிபுரம் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில், விளையாட்டு தொடர்பாக நூலகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2006 ஆகஸ்ட் 30

**21—**

## நவீனப்படுத்துதல்

**வினா எண் 1687—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதியிலுள்ள விளையாட்டு அரங்கத்தை நவீனப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் தொகுதி, விளையாட்டு அரங்கம் ஏற்கெனவே நவீனப்படுத்தப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

(i) மாநில அரசின் மானியம் பெற்று மழை நீர் வடிகால் வசதி ஏற்படுத்துதல், கூடைப்பந்து மற்றும் கைப்பந்து களத்தை செப்பனிட்டு மேம்படுத்துதல் போன்ற பணிகள் ரூ.8.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

(ii) விளையாட்டு அரங்கத்தில் உள்ள கேலரி பழுதடைந்ததால் அது ரூ.6.35 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

(iii) காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் ரூ.5.00 இலட்சம் செலவினத்தில் ஸ்குவாஷ் ஆடுகளம் அமைக்கப்பட்டுள்ளது.

(iv) காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் ரூ.2.00 இலட்சம் செலவினத்தில் குத்துச் சண்டை மேடை மற்றும் விளையாட்டு உபகரணங்கள் யாவும் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

(v) காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் ரூ.14.00 இலட்சம் செலவினத்தில் செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.



2006 ஆகஸ்ட் 30]

**22—**

## மேய்ச்சல்

**வினா எண் 1178—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி, மகேந்திரகிரி அசம்பு (பூதப்பாண்டி, அழகியபாண்டியபுரம், வீரப்புலி) ஆகிய வனச் சரகங்களில் ஆடு, மாடுகள் மேய்ச்சலுக்கு அனுமதி வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி, வன உயிரின சரணாலயமாக அறிவிக்கப்பட்டுள்ள கன்னியாகுமரி வனக் கோட்டத்திற்கு உட்பட்ட பகுதியாகும். சரணாலயப் பகுதிக்குள் மேய்ச்சல் உட்பட வனம் சாரா அனைத்து செயல்களுமே தடை செய்யப்பட்டுள்ளன. எனவே, அப்பகுதியில் ஆடு, மாடுகளை மேய்ச்சல் செய்ய அனுமதிக்க இயலாது.

**23—**

## நஷ்ட ஈடு

**வினா எண் 1695—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதியில் காட்டு யானைகளால் ஏற்பட்ட பயிர்ச் சேதத்திற்கும், உயிர்ச் சேதத்திற்கும் இவ்வரசு உடனடியாக நஷ்ட ஈடு வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதியில் காட்டு யானைகளால் ஏற்பட்ட உயிர்ச் சேதத்திற்கு உடனடியாக நிவாரணத் தொகை ரூ.25,000/– இறந்தவரின் குடும்பத்தாருக்கு தற்போது நடைமுறையில் உள்ள அரசு

ஆணையின்படி வழங்கப்படுகிறது. மீதித் தொகை ரூ.75,000/- உரிய சான்றிதழ்கள் வாரிசுதாரர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றதும் வழங்கப்படுகிறது. அதேபோல் காட்டு யானையால் ஏற்படும் பயிர்ச் சேதாரத்திற்கு பாதிக்கப்பட்ட விவசாயிகளிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு, சேதாரத்திற்கு ஏற்றவாறு நிவாரணத் தொகை, முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகிறது.

**24—**

## சிறுத்தைப் புலி நடமாடுவதைத் தடுத்தல்

**வினா எண் 1889—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, வில்லோனி கீழ் குடியிருப்புப் பகுதிகளில் சிறுத்தைப் புலி நடமாடுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை, வில்லோனி கீழ் குடியிருப்புப் பகுதிகளில் சிறுத்தைப் புலிகள் நடமாடுவதைத் தடுக்க, தடுப்பு நடவடிக்கையாக தொடர்ந்து வனப் பணியாளர்கள் இரவில் சிறுத்தையின் நடமாட்டத்தைக் கண்காணித்து ரோந்துப் பணி செய்து வருகின்றனர். அதனைப் பிடிக்க ஆங்காங்கே கூண்டுகள் வைத்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், இரவு நேரங்களில் யாரும் தனியே காட்டிற்குள் செல்ல வேண்டாமென அப்பகுதி மக்களுக்குத் தகுந்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**25—**

## மரக் கன்றுகள்

**வினா எண் 2060—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை இந்திரா காந்தி வன உய்விட வனப் பகுதியில் புதிய மரக் கன்றுகளை வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். வன உயிரினங்கள் வாழும் இடங்களை, அவை வாழ்வதற்கு உகந்ததாகச் செய்வதற்கு தேவைப்படும் இடங்களில் மட்டும் புதிய மரக் கன்றுகள் நடப்படும். அப்பணிகள் 2006–2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

**26—**

## மின் வேலி

**வினா எண் 2061—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை ஒன்றியம், கல்லாபுரம் ஊராட்சி காட்டுப் பகுதியில் யானைகள் வருவதைத் தடுக்க மின் வேலி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை ஒன்றியம், கல்லாபுரம் ஊராட்சி, காட்டுப் பகுதியில் யானைகள் வருவதைத் தடுக்கும்பொருட்டு மின் வேலி அமைத்திட தேவையான நிதி கோரி உரிய பிரேரணை 2007–2008 ஆம் ஆண்டிற்கான திட்டப் பிரேரணையில் சேர்க்கப்படும். இதற்கான ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் 2007–2008 ஆம் ஆண்டில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

**27—**

## தடுப்பணை

**வினா எண் 2062—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஆகஸ்ட் 30

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, இந்திரா காந்தி வன உயிரின உய்விடமாக உள்ள வனச் சரகத்தில் மிருகங்கள் குடிநீர் அருந்துவதற்கு தடுப்பணை கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வன உயிரினங்கள் குடிநீர் அருந்துவதற்கு தடுப்பணை கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான நிதி ஒதுக்கீடு ஏதும் சேர்க்கப்படவில்லை. 2007–2008 ஆம் வருடத்திய திட்டப் பிரேரணையில் இவ்வேலைகளைச் செய்வதற்கு நிதி கோரப்பட்டு, அதற்கான நிதி கிடைக்கப்பெற்றதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**28**—

## மரங்கள் அபிவிருத்தி

**வினா எண் 2251—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வளர்க்கப்படும் மரங்களை அதிகரிக்க அரசு முன்வருமா?

**விடை**—

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில், வனத் துறையின் எரிபொருள் தேவையினைப் பூர்த்தி செய்யும்பொருட்டு பண்ணைக் காடுகள் திட்டம் 1961 முதல் 1981 வரை செயல்முறைப்படுத்தப்பட்டு, இதன்மூலம் தமிழ்நாட்டில் சுமார் 1,30,000 எக்டேர் பரப்பளவில் ஏரி, குளக்கரைகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிலங்களில் கருவேல மரங்கள் வளர்க்கப்பட்டன.

இதற்குப் பிறகு, தமிழ்நாடு வனத் துறையில் ஸ்வீடன் சர்வதேச வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் சமூகக் காடுகள் திட்டம் 1981–1982 முதல் 1985–1986 ஆம் ஆண்டு வரை முதற்கட்டமாகவும், பின்னர் 1987–1988 முதல் 1995–1996 ஆம் ஆண்டு வரை இரண்டாம் கட்டமாகவும் செயல்படுத்தப்பட்டு சுமார்



2006 ஆகஸ்ட் 30]

பரப்பளவில் ஏரி மற்றும் குளக்கரைகளில் கருவேல மரங்கள் வளர்க்கப்பட்டன. ஸ்வீடன் சர்வதேச நிறுவனம் இத்திட்டத்திற்கான நிதியுதவியினை மார்ச் 1996–உடன் நிறுத்திக்கொண்டதால், 1996–1997 ஆம் ஆண்டு தமிழக அரசின் நிதியுதவியுடன் செயல்முறைப்படுத்தப்பட்டது. இதற்குப் பிறகு நிதியுதவி ஏதுமில்லாமையினால் மீண்டும் தொடர இயலவில்லை. எனவே, சமூகக் காடுகள் திட்டம் 1996 வரை மட்டுமே செயல்முறைப்படுத்தப்பட்டது. இதற்குப் பிறகு சமுதாயக் காடுகள் அபிவிருத்தித் திட்டத்தின்மூலம் தமிழக அரசின் நிதியுதவியுடன் 2003–2004 முதல் 2005–2006 ஆம் ஆண்டு வரை ஏரி மற்றும் குளக்கரைகளில் 9,280 எக்டேர் பரப்பளவில் ஒரு ஏக்கருக்கு 1,100 கருவேலச் செடிகள் வீதம் வளர்க்கப்பட்டன.

நடப்பாண்டிற்கும் தமிழ்நாட்டில் 2,880 எக்டேர் பரப்பளவில் எக்டேர் ஒன்றுக்கு 1,100 கருவேலச் செடிகள் வீதம் ஏரி மற்றும் குளக்கரைகளில் நடவு செய்யத்தக்க கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**29**—

## புதுப்பித்தல்

**வினா எண் 2681—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள வில்லோனி கீழ் டிவிஷனில் உள்ள பள்ளியையும், சத்துணவுக் கூடத்தையும் யானைகள் இடித்துத் தள்ளிவிட்டதால் அவற்றைப் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

**விடை**—

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள வில்லோனி கீழ் டிவிஷனில் உள்ள பள்ளியையும், சத்துணவுக் கூடத்தையும் யானைகள் இடித்துத் தள்ளிவிட்டதால் அது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து மனுக்கள் பெறப்படுமானால், மேற்காணும் சேதாரத்தை ஆய்வு செய்து, அவற்றைப் புதுப்பித்துத் தர அரசு முன்வரும். மேலும், யானைகள் வராமல் தடுக்க வனக் காவலர்களால் ரோந்துப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

30—

## இலவச தையல் இயந்திரம்

**வினா எண் 480—திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரம் பகுதியிலுள்ள மகளிர் முன்னேற்றத்திற்காக இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தில் விதவைகள், ஆதரவற்றோர், கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் உடல் ஊனமுற்றோர் ஆண், பெண் ஆகிய இனங்களில் உள்ள நபர்களுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது இத்திட்டத்தின்கீழ் ஓர் ஆண்டிற்கு 5,500 தையல் இயந்திரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவையின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

2005–2006 ஆம் ஆண்டிற்கு, சட்டமன்றத் தேர்தல் அறிவிப்பினால் நாமக்கல் மாவட்டத்தில் ஒப்பந்தப்புள்ளி நடைமுறை நிறுத்தப்பட்டு தையல் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்படவில்லை. 2006–200 ஆம் ஆண்டிற்கும் மேற்குறிப்பிட்டுள்ளவாறு ராசிபுரம் தொகுதியில் மகளிர் முன்னேற்றத்திற்காக இலவச தையல் இயந்திரம் வழங்கு திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

31—

## கடனுதவி

**வினா எண் 1293—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நல துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உடல் ஊனமுற்றவர்களுக்கு சி தொழில் செய்ய கடனுதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்த நிதி ஆண்டில் 2006–2007–ல் சிறு தொழில் செய்ய ரூ.3,000/– அரசு மானியத்தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் கடனுதவியும், ரூ.5,000/– மானியத்தில் பெட்டிக் கடை வைக்க கடனுதவியும், தாட்கோ நிறுவனத்தின்மூலம் ஆதி திராவிட ஊனமுற்ற மக்களுக்கு கடனுதவியும், SGSY திட்டத்தின்மூலம் தனிநபர் சுய வேலைவாய்ப்புக் கடனுதவிகளும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கோவை மாவட்டத்தில் மொத்தம் இதுவரை 134 கடனுதவி விண்ணப்பங்கள் வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. வால்பாறை பகுதியில் இதுவரை மொத்தம் 4 விண்ணப்பங்கள் மட்டும் பெறப்பட்டு, வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. மேலும், வால்பாறை பகுதிகளில் கடனுதவி பெற்ற ஊனமுற்ற நபர்கள் அதிக அளவு பயன்பெறும் வகையில், அதிக விண்ணப்பங்கள் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஊனமுற்றோருக்கு சிறு தொழில் செய்ய குறைந்த வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கவென தேசிய ஊனமுற்றோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் திட்டம் முனைப்புடன் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்க முன்வரும் பட்சத்தில் தேவையான ஆலோசனைகளும், உதவிகளும் நல்கப்படும்.

32—

## உதவித் தொகை

**வினா எண் 1331—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள வயது முதிர்ந்தவர்கள் மற்றும் உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்**

(அ) வால்பாறை சட்டமன்றத் தொகுதியில், வால்பாறை வட்டப் மற்றும் பொள்ளாச்சி வட்டத்தில் உள்ள முதியோர் மற்றும் உடல்

ஊனமுற்றவர்களுக்கு உதவித் தொகை மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. ஜூன் 2006-ல் வால்பாறை வட்டத்தில் 762 முதியோர்களும், 164 உடல் ஊனமுற்றவர்களும், பொள்ளாச்சி வட்டத்தில் 3,413 முதியோர்களும், 795 உடல் ஊனமுற்றவர்களும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்றுள்ளனர்.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**33—**

## பெட்டிக் கடைகள்

**வினா எண் 1338—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் றை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் விதவைகள் மற்றும் உடல் ஊனமுற்றவர்களுக்கு பட்டிக் கடைகள் வைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**டை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள விதவைகள் சுய வலைவாய்ப்பின்மூலம் வாழ்க்கையைத் தொடர்வதற்கு சத்தியவாணி த்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரங்கள் வழங்கும் ட்டத்தின்கீழ் தையல் இயந்திரம் இலவசமாக வழங்கப்படுகிறது. தியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் விதவைகளுக்கு மாதந்தோறும் தவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. பொது இடங்களில் பெட்டிக் டை வைத்து சுய தொழில் புரிய விரும்பும் ஊனமுற்றோருக்கு பெட்டிக் டை வாங்கவென ஏற்படும் செலவில் மூன்றில் ஒரு பங்கு அல்லது 5,000/–, இதில் எது குறைவோ, அது மானியமாக வழங்கப்படுகிறது. தற்கென தமிழகம் முழுவதும் 50 ஊனமுற்ற நபர்கள் யனடையும்வண்ணம் அரசால் ரூ.2.50 இலட்சம் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.





**4—**

## தையல் இயந்திரம்

**வினா எண் 2299—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு சமூக நலத் றை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதியில் ஏழை எளிய க்களுக்குத் தையல் இயந்திரம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு ள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதியில் ஏழை எளிய மக்களுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கோவை மாவட்டத்திற்கு 2001 முதல் 2003 வரை 800 தையல் இயந்திரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதில் 2 ஊனமுற்றவர்களுக்கும், கணவனால் கைவிடப்பட்ட ஒருவருக்கும், ஏழைகள் 16 நபர்களுக்கும், ஆக மொத்தம் 19 நபர்களுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டிற்கு 150 தையல் இயந்திரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் விதவைகள் 3 நபர்களுக்கும், இதர வகுப்பினர் 6 நபர்களுக்கும், ஆக மொத்தம் 9 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**35—**

## கால்நடை கிளை மருத்துவமனை

**வினா எண் 1170—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், ஆவரைக்குளம் கிராமத்தில் கால்நடை கிளை மருத்துவமனையை மீண்டும் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2006 ஆகஸ்ட் 30

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், ஆவரைக்குளம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் துவக்க அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**36—**

## பசும்புல் வளர்ப்பு

**வினா எண் 2217—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

செங்கல்பட்டு தொகுதியில் பசும்புல் வளர்க்கும் திட்டத்தின்கீழ் பசும்புல் வளர்க்கப் புதிய இடங்களைத் தேர்வு செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதியினை உள்ளடக்கிய செம்பாக்கம், தென்மேல்பாக்கம் கிராமங்களில், ஒவ்வொரு கிராமத்திலும் 10 ஏக்கர் நிலப்பரப்பில் பசும்புல் உற்பத்தித் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உதவியுடனும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிதி உதவியுடனும் செயல்பட்டு வருகிறது. பசும்புல் வளர்ப்பு குறித்துப் புதிய இடங்கள் தேர்வு செய்வது குறித்து அரசின் திட்டம் ஏதும் இல்லை. திட்டம் அங்கீகரிக்கப்படும்போது முன்னுரிமையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.

**37—**

## கால்நடை மருந்தகங்கள்

**வினா எண் 2218—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —



2006 ஆகஸ்ட் 30]

(அ) செங்கல்பட்டு தொகுதியில் உள்ள கால்நடை மருத்துவமனைகள் மற்றும் துணை நிலையங்களில் போதிய மருந்துகள் உள்ளனவா?

(ஆ) கடந்த ஆண்டு எவ்வளவு கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது என அரசு அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஒவ்வோர் ஆண்டும் இத்துறை கால்நடை நிலையங்களுக்கெனத் தேவைப்படும் மருந்துகளை தமிழ்நாடு மருத்துவப் பணிக் கழகம்மூலம் கால்நடை நிலையங்களுக்கென நிர்ணயம் செய்யப்பட்டுள்ள உச்சவரம்பின்படி கொள்முதல் செய்து வழங்கி வருகிறது. செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் கீழ்க்கண்டவாறு கால்நடை நிலையங்கள் செயல்படுகின்றன:

| | | |
|---|---|---|
| (1) பிரதம மருத்துவமனை | — | 1 |
| (2) கால்நடை மருந்தகங்கள் | — | 3 |
| (3) கால்நடை கிளை நிலையங்கள் | — | 7 |

மேற்கண்ட செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் செயல்படும் கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடை கிளை நிலையங்களுக்கு ஆண்டு முழுவதும் போதுமான அளவில் மருந்துகள் இருப்பில் உள்ளன.

(ஆ) செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் செயல்படும் கால்நடை நிலையங்களில் கடந்த ஆண்டு 58,092 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளன.

**38—**

## ஆடுகள் வளர்ப்பு

**வினா எண் 2219—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியில் ஆடுகள் வளர்ப்பை ஊக்குவிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[2006 ஆகஸ்ட் 30

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதியில் ஆடுகள் வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் கால்நடை பராமரிப்புத் துறைமூலமாக எவ்விதத் திட்டமும் அரசின் செயல்பாட்டில் இல்லை.

**39—**

## கால்நடை மருத்துவ நிலையம்

**வினா எண் 2220—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கால்நடைத் துறையில் இயங்கும் கால்நடை மருத்துவ நிலையங்கள், துணை நிலையங்கள் எத்தனை?

(ஆ) அனைத்து நிலையங்களிலும் போதிய கால்நடை மருத்துவர்கள் உள்ளார்களா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கால்நடைத் துறையின் 2 கால்நடை பெருமருத்துவமனைகளும், 1 கால்நடை மருத்துவமனையும், 39 கால்நடை மருந்தகங்களும், 81 கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) இதில் 5 கால்நடை மருந்தகங்களிலும், 47 கால்நடை கிளை நிலையங்களிலும் கால்நடை மருத்துவர் பதவிகள் காலியாக உள்ளன. ஏனைய நிலையங்களில் கால்நடை மருத்துவர் பதவிகள் நிரப்பப்பட்டுள்ளன.



2006 ஆகஸ்ட் 30]

**40—**

## புதிய கட்டடம்

**வினா எண் 2634—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, பொன்விளைந்தகளத்தூர் கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதி, பொன்விளைந்தகளத்தூர் கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

**41—**

## புதிய கட்டடம்

**வினா எண் 2635—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, நெரும்பூர் கால்நடை கிளை நிலையத்தின் கட்டடம் முழுவதும் சிதிலமடைந்துள்ளதால் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

[2006 ஆகஸ்ட் 30

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

ஆம். செங்கல்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த, முழுவதுமாக சிதிலமடைந்துள்ள நெரும்பூர் கால்நடை கிளை நிலையக் கட்டடத்தை தமிழ்நாடு கால்நடை உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆர்.ஐ.டி.எப். 12 திட்டத்தின்கீழ், நபார்டு வங்கி உதவியுடன் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**42—**

## கட்டமைப்பு வசதி

**வினா எண் 2638—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள கால்நடை மருத்துவ நிலையங்களை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டத்தில், நபார்டு வங்கி நிதியுதவியுடன் RIDF-X (பகுதி-I) திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கட்டடங்கள்:

1) வாலாஜாபாத், பெருங்குடி, அகரம்தென் ஆகிய மூன்று கால்நடை மருந்தகங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

2) மதுராந்தகம் களப் பணி அலுவலகம் கட்டப்பட்டு வருகிறது.

3) மதுராந்தகம் கால்நடை மருந்தகத்தில் புறநோயாளி சிகிச்சைக் கூடம் கட்டப்பட்டு வருகிறது.

4) நான்கு உள்நோயாளிகள் கூடங்கள் கீழ்க்கண்ட இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன:



2006 ஆகஸ்ட் 30]

1. சென்னை 2. சிட்லப்பாக்கம் 3. செங்கல்பட்டு 4. காஞ்சிபுரம்.

மேலும், மேற்படி காலநடை நிலையங்களுக்கு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த கட்டடம், உபகரணங்கள், தளவாடங்கள் மற்றும் அறையணிகள் ஆகியன நபார்டு-2 (RIDF-XII) திட்டத்தின்கீழ் வாங்கி வழங்கப்படும்.

**43—**

## தரம் உயர்த்துதல்

**வினா எண் 2639—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் கால்நடை மருத்துவ நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த, திருக்கழுக்குன்றம் கால்நடை மருநதகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**44—**

## மருத்துவர் ஒதுக்கீடு

**வினா எண் 3380—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, த. மேலக்காடு ஊராட்சியில் உள்ள கால்நடை மருத்துவமனையில் மருத்துவர் இல்லாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து தெரிவுப் பட்டியல் பெறப்பட்டதும் காலியிடத்தை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**45—**

## கட்டப்பட்ட வீடுகள்

**வினா எண் 2227—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில், மீன்வளத் துறையின்மூலம் கடந்த ஐந்தாண்டுகளில் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதிக்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தம் 460 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் இதுநாள் வரையில் 366 வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. நிலுவையிலுள்ள 94 வீடுகளில், 30 வீடுகள் அடித்தளம் வரையில் கட்டப்பட்டு பணி முன்னேற்றத்திலுள்ளது. மீதமுள்ள 64 வீடுகள் சுனாமி பேரலை தாக்குதல் காரணமாக பிற மாவட்டங்களுக்கு மறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**46—**

## டீசல் மானியம்

**வினா எண் 2228—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் உள்ள மீனவர்களுக்கு டீசல் மானியம் ஏதேனும் வழங்கப்பட்டதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதியில், மீன்பிடி விசைப் படகுகள் ஏதும் இல்லை. டீசல் மானியம் வேண்டி கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை. எனவே, டீசல் மானியம் செங்கல்பட்டு தொகுதியில் உள்ள மீனவர்களுக்கு வழங்கப்படவில்லை.

**47—**

## இறால் வளர்ப்புத் தொழில்

**வினா எண் 2640—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இறால் வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

இன்றைய தேதியில் சென்னை தவிர, தமிழ்நாட்டின் 12 கடலோர மாவட்டங்களில் 3,331 எக்டேர் நிலப்பரப்பில், 883 இறால் பண்ணைகளுக்கு நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தால் அனுமதி/அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், 124.15 எக்டேர் பரப்பளவில், 51 இறால் பண்ணைகள் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் அனுமதி பெற்று செயல்பட்டு வருகின்றன. ஆணையத்தின் அனுமதி பெறாமல் செயல்பட்டு வரும் அனைத்து இறால் பண்ணைகளையும் வரன்முறைப்படுத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**48—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 2676—திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம் திருவாவடுதுறை ஊராட்சி, புதுத் தெரு, இந்திரா காலனியிலுள்ள

உள்நாட்டு மீனவர்களுக்கு, மீனவர் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், திருவாலடுதுறை ஊராட்சி, புதுத் தெரு, இந்திரா காலனியில் உள்ள உள்நாட்டு மீனவர்களுக்கென தனியாக இலவச வீடு கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் முறையாகத் தீர்மானம் இயற்றி சம்பந்தப்பட்ட மீன் துறை உதவி இயக்குநர் வழியாக விதிமுறைகளின்படி விண்ணப்பித்தால், தகுதி இருப்பின் 2005-2006-க்கான மீனவர் இலவச வீடு கட்டும் திட்டத்தின்கீழ் பரிசீலிக்கப்படும்.

**49—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 2677 திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஒன்றியம், அணைக்கரையிலுள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு மீனவர் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஒன்றியம், அணைக்கரையில் உள்ள உள்நாட்டு மீனவர்களுக்கென தனியாக இலவச வீடு கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் முறையாகத் தீர்மானம் இயற்றி, சம்பந்தப்பட்ட மீன் துறை உதவி இயக்குநர் வழியாக விதிமுறைகளின்படி விண்ணப்பித்தால், தகுதி இருப்பின் 2005-2006-க்கான இலவச வீடு கட்டும் திட்டத்தின்கீழ் பரிசீலிக்கப்படும்.



**50—**

## பால் விற்பனை நிலையம்

**வினா எண் 3136 திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில் புதிய பால் விற்பனை நிலையங்கள் துவங்கும் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

தற்போது வால்பாறை தொகுதியில் நாளொன்றுக்கு சுமார் 600 லிட்டர் பால் வால்பாறையைச் சுற்றி அமைந்துள்ள 10 மையங்கள்மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இது தவிர, இரண்டு ஆவின் விற்பனையகங்கள்மூலம் ஒன்றியத்தின் பால் மற்றும் பால் உபபொருட்களும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. எனவே, புதிய பால் விற்பனை நிலையங்கள் துவக்க அவசியமில்லை.

**[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. கவன ஈர்ப்பு

### தாராபுரம் தொகுதி, கள்ளிப்பாளையம், ஆதி திராவிடர் காலனி மக்களுக்கு அடிப்படை வசதிகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா ஆகிய இருவரும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா அவர்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, இராமகிருஷ்ணன்?

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியம் என்பது முக்கியமானதாகும். அதில் எங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், இராமகிருஷ்ணன். *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* வேறு business எடுத்தாகிவிட்டது, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உறுப்பினரை உட்காரச் சொல்லுங்கள். அப்புறம் பேசலாம். உட்காருங்கள்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாராபுரம் தொகுதி, கள்ளிப்பாளையம் ஆதி திராவிடர் காலனியில் வசிக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகள் இல்லாமையால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கு மிக அருகில் இருக்கிற அந்தக் கிராமம், பொங்கலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டது குண்டடம் ஊராட்சி ஒன்றியத்திலே, கொழுமங்குழி ஊராட்சியிலே இருக்கிற கள்ளிப்பாளையம் என்ற அந்த ஊரிலே, சுமார் ஐம்பது குடும்பங்கள் வசித்து வந்தன. அடிப்படை வசதிகளுக்காக கடந்த ஆட்சிக் காலத்திலேயெல்லாம் போராடிப் பேசி, அங்கே கிணறு தோண்டுகிறபோது, flouride water வருகிறது. வீதி விளக்குகள் இல்லை. சாலைகள் இல்லை. அடிப்படை வசதிகள்கூட இல்லை. இந்த நாடு விடுதலை பெற்று 60 ஆண்டுகளை நோக்கி நடைபோட்டுக்கொண்டிருக்கின்ற நாளில் அடிப்படை வசதிகளே இல்லையென்ற வேதனை, விரக்தியின் காரணமாக ஐம்பது குடும்பங்கள் —ஒரு வருட காலத்திற்கு முன்புகூட ஓரிருவர் இருந்தார்கள்—போன ஆடி மாதம் 18 ஆம் தேதிக்குப் பிறகு, அந்தக் குடும்பத்தினர் குடிபெயர்ந்து சென்றிருக்கிறார்கள்.



**மாண்.புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், கேள்வியை மட்டும் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 9–35*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது:

## அறிக்கை

*கள்ளிப்பாளையம் குடியிருப்பில் சுமார் 50 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அவற்றில் கீழ்க்குறிப்பிட்ட ஆறு குடும்பங்கள் இந்து ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள். மேற்படி குடியிருப்பில் தற்போது யாரும் வசிக்கவில்லை.*

1. பெரியபழனி
2. முத்தன்
3. சுப்பன்
4. கந்தன்
5. கருப்பன், த/பெ. நாச்சி
6. கன்னி, க/பெ. கருப்பன்

மேற்படி ஆறு குடும்பங்களில் இளம் வயதினர் அனைவரும் வேலை வாய்ப்பிற்காக திருப்பூர் சென்றுவிட்டதாகவும், அக்குடும்பங்களில் இருந்த முதியவர்கள் அவர்களது வாரிசுகள் இருக்கும் ஊரான குப்பிச்சிபாளையம், கன்னாங்கோயில், காஞ்சிபுரம் முதலான ஊர்களில் வசிப்பதாகவும் தெரிய வருகிறது. வரிசை எண் 1 முதல் 3 வரையுள்ள குடும்பத்தினர் தங்களுடைய சொந்தக் காரணங்களுக்காக 10 ஆண்டுகளுக்கு முன்பே வீரப்பன்சத்திரம் நகராட்சிக்கு உட்பட்ட சம்பத் நகர் பகுதியில் தங்கள் உறவினருடன் வசித்து வருவதாகவும், வரிசை எண் 4 முதல் 6 வரையுள்ள 3 குடும்பத்தினர் கள்ளிப்பாளையம் அருகிலுள்ள குப்பிச்சிபாளையம மற்றும் கன்னாங்கோயில் ஆகிய பகுதிகளில் உள்ள தங்களுடைய உறவினர்களுடன் சேர்ந்து வாழ்ந்து வருவதாகவும் தெரிய வருகிறது.

மேற்படி குடியிருப்பினைவிட்டு ஆதி திராவிட மக்கள் தங்கள் சொந்தக் காரணங்களுக்காகவும், தங்களுடைய உறவினர்களுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாகவுமே குடியிருப்பினைவிட்டு காலி செய்து சென்றுள்ளனர் என்பது தெரிய வருகிறது. பத்திரிகைச் செய்தியில், அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தினாலும், குடிநீர்ப் பற்றாக்குறை காரணமாகவும் காலி செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது முற்றிலும் தவறான, உண்மைக்குப் புறம்பான தகவலாகும். இக்கிராமத்திற்குப் போதுமான அளவு குடிநீர் வசதி, சாலை வசதி, தெரு விளக்கு வசதி மற்றும் போக்குவரத்து வசதி ஆகியவை செய்யப்பட்டுள்ளன. எனவே, அடிப்படை வசதிகள் குறைவு என்பது தவறான தகவலாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் படித்துப் பார்த்தேன். அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் நிலத்தடி நீரில் flouride கலந்திருப்பதால் குடிக்க, குளிக்க மற்றும் சமையலுக்கு அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதே நிலை, இராசிபாளையம், அழகியபாளையம் ஆகிய ஊர்களிலும் நீடிக்கின்றது. இந்த மக்களின் ஒரே நீர் ஆதாரம் அமராவதி-காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டமாகும். குடிநீர் வரும் வழியில் உள்ள பைப்புகள் உடைபட்டிருப்பதால், கள்ளிப்பாளையம் கிராமத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கக் குடிநீர்த் தொட்டிக்கு, ஏதோ ஓரளவிற்கு, சிறிது அளவிற்கு வந்துகொண்டிருந்த நீர்கூட, கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக வராத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், அந்த மக்கள்— இது ஒரு நான்கு மாதப் பிரச்சினை இல்லை. ஒன்றரை வருடத்திற்கு முன்னாலேயே அந்த மக்கள் பல போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். கலெக்டரிடத்திலே அவர்கள் குறை கேட்கின்ற நாளன்று மனுக்களைக் கொடுத்திருக்கின்றார்கள். எதற்குமே பயனில்லை என்கின்றபோது, அந்தக் குண்டடம் என்கின்ற ஊராட்சி ஒன்றியத்தை முற்றுகையிட்டிருக்கிறார்கள். அதற்கும் பதில் இல்லாத சூழ்நிலையில் தாங்கள் அலட்சியப்படுத்தப்பட்டுவிட்டோம் என்கின்ற நிலையை உணர்ந்து, தங்களுக்கு எதுவுமே கிடைக்காது என்கின்ற எண்ணத்தின் அடிப்படையிலே அவர்கள் அந்த ஊரிலேயிருந்து போக வேண்டிய நிலைமை ஏற்பட்டது.





குடிதண்ணீர் கொண்டு வர வேண்டுமென்றாலும்கூட ள்ளிப்பாளையத்திற்கு நொச்சிப்பாளையம், நல்லிமட்டத்திலிருந்து ராகனம்மூலமாகத்தான் கொண்டு வர முடியும். அதற்கும் அவர்களுக்கு வசதி இல்லாத காரணத்தினால், அந்த மக்கள் அந்த ஊரைவிட்டு வெளியேற வேண்டிய ஒரு அவல நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், ம்முடைய அறிக்கையிலே என்ன கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அப்படிப்பட்ட பிரச்சினைகள் இல்லை, வேலைக்காக அவர்கள் வெளியூர்களுக்குப் போய் இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியே இருந்தாலும்கூட, ஆறு சொல்லியிருக்கிறார்கள். 50 குடும்பங்கள் பேரைத்தான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அங்கே காலி செய்து போய் இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் கொண்டு அந்த மக்கள் திரும்பவும் அந்த ஊருக்கு வந்து அவர்கள் பழையபடி இருப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று உங்கள்மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டத்திற்குட்பட்டிருக்கக்கூடிய (குறுக்கீடு) இல்லை, இல்லை. குண்டடம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்திருக்கக்கூடிய கள்ளிப்பாளையம் என்ற கிராமம். அந்தக் கிராமத்திலே சுமார் 50 குடும்பங்கள் வசித்து வந்துகொண்டிருக்கிறார்கள். அதிலே குறிப்பிட்டிருக்கக்கூடிய வகையில் ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த 6 குடும்பங்கள் தற்போது அங்கே இல்லை என்பது உண்மைதான். என்ன காரணம் என்று கேட்டால், அந்தக் குடும்பத்தைச் சார்ந்திருக்கக்கூடிய இளைஞர்களுக்கு திருப்பூரிலே வேலை கிடைத்து, அங்கே வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அதனால், அந்தக் குடும்பத்திலே இருக்கக்கூடிய உறவினர்களும், பெரியவர்களும் அருகிலே இருக்கக்கூடிய, உறவினர்களின் ஊர்களாக இருக்கக்கூடிய குப்பிச்சிபாளையம், கன்னாங்கோயில், காஞ்சிபுரம், அதேபோல, ஈரோடு நகராட்சிக்கு பக்கத்திலே இருக்கக்கூடிய வீரப்பன்சத்திரம் நகராட்சிக்கு உட்பட்டிருக்கக்கூடிய சம்பத் நகர் பகுதியிலே போய் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதுதான் உண்மை. ஆகவே, ஏதோ அடிப்படை வசதிகள் இல்லை என்ற காரணத்தால் அங்கேயிருந்து காலி செய்து போய்க்கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி உண்மைக்குப் புறம்பான செய்தியாகும்.

அதுமட்டுமல்ல, இந்தச் செய்தி வந்தவுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலும், அதேபோல திட்ட அலுவலர் அவர்களிடத்திலும் தொடர்புகொண்டு இது குறித்து விவாதித்தபோது அவர்கள் நேரடியாக அங்கே போய் ஆய்வு செய்து, அந்தப் பத்திரிகையிலே வந்திருக்கக்கூடிய செய்தியைத் தந்திருக்கக்கூடியவர் ஈஸ்வரன் என்பவர்; அவரிடத்திலே போய்க்கூட விசாரித்திருக்கிறார்கள். நான் அதுபோல ஒரு செய்தியைத் தரவில்லை என்று அவரே எழுதிக் கொடுத்திருக்கிறார். ஆக, உண்மை இதுதான். ஆக, அவர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெறக்கூடிய வகையிலே திருப்பூருக்குச் சென்ற காரணத்தாலேதான் அங்கேயிருந்த உறவினர்கள் எல்லாம் போய் இருக்கிறார்களே தவிர, வேறு அல்ல. அதேபோல, அந்தக் கிராமத்திற்குப் போதுமான அளவிற்கு குடிநீர் வசதி, சாலை வசதி, தெரு விளக்கு வசதி அதுமட்டுமல்ல போக்குவரத்து வசதிகள்கூட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்தக் குடியிருப்பிலே 7 தெரு விளக்குகள் நல்ல முறையிலே இயங்கி வருகின்றன. அதில் 6 தெரு விளக்குகள் இதர குடியிருப்புகளிலும், ஒரு தெரு விளக்கு ஆதி திராவிடர் குடியிருப்புக்கு அருகிலும் அமைக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 9-40

அதேபோல குடியிருப்பிற்கு குடிநீர்க் குழாய்கள் வரும் பகுதிகள் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் சொன்னதுபோல P.M.G.S.Y. திட்டத்தின்கீழ் சாலைகள் அமைத்தபோது பழுதுபட்டன. இந்தப் பழுதுபட்ட குடிநீர்க் குழாய்கள் 2005-2006 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மூன்றரை இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே சரிசெய்யப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதேபோல, இக்குடியிருப்புப் பகுதிகளில் இருக்கக்கூடிய நீரில் flouride அதிகம் உள்ள காரணத்தினால், காங்கேயம்-அமராவதி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, குடிநீர் தவிர, பிற உபயோகங்களுக்காக, அமராவதி ஆற்றில் தண்ணீர் வரத்து இல்லாத காலங்களில் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்காகவும் கள்ளிப்பாளையம் அருகே ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு, குடிநீர் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



**திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

## 4. அறிவிப்பு

### தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2006-2007, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 22-உள் துறை-காவல்**
**(ஆ) கோரிக்கை எண் 23 உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்**
**(இ) கோரிக்கை எண் 37-மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை**
—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 29-8-2006 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதமும், வாக்கெடுப்பும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன், யார் பேசுகிறார்கள்? (குறுக்கீடு) ஞானதாஸா? சரி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ், ஐந்து நிமிடம்.

***திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள் துறை-காவல் மானியக் கோரிக்கைமீது பேச அனுமதி அளித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். காவல் துறை, குடிமக்கள் வாழ்வு மற்றும் உடைமைகளைப் பாதுகாக்கும் அமைப்பாகும். ஆகையால்தான், மராட்டியத்தின் முன்னாள் ஆளுநர், மறைந்த தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் "இந்தியாவின் சுதந்திரத்தையும், இறையாண்மையையும், ஜனநாயகத்தையும் கட்டிக் காத்து வருகின்ற அமைப்புகள், இராணுவமும், காவல் துறையும்" எனக் குறிப்பிட்டார். அத்தகைய காவல் துறையை மேம்படுத்த தமிழகத்தில் மூன்றாவது போலீஸ் கமிஷன் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.





R.A. Gopalasamy, I.C.S., P. Sabanayagam, I.A.S., ஆகியோரின் பரிந்துரைகள் தவிர, Rebeiro Committee, K. Padmanabiah Committee, தேசிய போலீஸ் கமிஷன், 1977, Kerala Police Re-organisation Committee, Kamalkumar Committee, 1981 மற்றும் வோரா கமிட்டி ஆகியவற்றில் பரிந்துரைக்கப்பட்டுள்ள நல்ல அம்சங்களையும் ஆய்வு செய்து அமல்படுத்த வேண்டும்.

தேசிய போலீஸ் கமிஷன், மாநில பாதுகாப்பு ஆணையம் State Security Commission—ஒன்றை அமைக்கப் பரிந்துரை செய்திருந்தது. ஆங்கிலேயர் ஆட்சியில் 1861 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட போலீஸ் சட்டம் சுதந்திரத்திற்குப் பின் உள்ள தற்காலச் சூழலுக்கு ஏற்ப திருத்தப்பட வேண்டும். தற்போதுள்ள Anglo-Saxon நீதி நிர்வாகத்தை மாற்றி, பிரான்ஸ் அல்லது ஐரோப்பிய நாடுகளில் உள்ள முறைக்கு மாற வேண்டும் என்ற பரிந்துரைகளை ஆய்வு செய்ய வேண்டும்.

பிரபல சட்ட நிபுணர் சோலி சொராப்ஜி தலைமையிலான போலீஸ் சட்ட வரைவு கமிட்டி கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் அமைக்கப்பட்டது. இங்கிலாந்து, அயர்லாந்து, தென் ஆப்பிரிக்கா, பாகிஸ்தான் மற்றும் இலங்கை போன்ற நாடுகளின் போலீஸ் சட்டங்களில் சமீபத்தில் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதை ஆய்வு செய்துள்ளனர். சட்டம்-ஒழுங்கு மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகிய இரண்டையும் தனித் தனியாகப் பிரிக்க வேண்டும் எனவும், Cyber Crime, பொருளாதாரக் குற்றங்கள், கொலை என பல்வேறு வகைப்பட்ட குற்றங்களை விசாரிக்கும் திறமை வாய்ந்த, பயிற்சி பெற்றவர்களைக் கொண்ட சிறப்புப் படை அமைக்கவும், போக்குவரத்துக் குற்றங்கள் போக்குவரத்துப் போலீசாரால் மட்டுமே விசாரிக்கப்பட வேண்டும் எனவும் பரிந்துரை செய்துள்ளது.

அமெரிக்காவில், The Neighbourhood Watch Scheme, Guardian Angels, The Portland Burglary Prevention Programme, Seattle Community Prevention Programme, Crime Stoppers போன்றவை மிகச் சிறப்பாகச் செயல்படுகின்றன. இங்கிலாந்து நாட்டிலும் காவல் துறை மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. ஜப்பான் நாட்டில் கோபன் system என்ற ஒரு system நன்கு செயல்படுவதாகக் கூறப்படுகிறது. இவற்றின் செயல்பாடுகளையும், திட்டங்களையும் ஆய்வு செய்து அமல்படுத்தலாம். இங்கிலாந்திலும், வேல்சிலும் ஒட்டாவா பல்கலைக்கழகத்தின் குற்றவியல் பேராசிரியர் டாக்டர் இர்வின் வேலர் ஓர் ஆய்வை மேற்கொண்டார். Youth Justice Board என்ற அமைப்பை உருவாக்கினால், குற்றங்கள் பெரிதும் குறையும் என்று கூறியுள்ளார். ஸ்வீடன்

தென் ஆப்பிரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் குற்றங்களைத் தடுப்பதற்கு நல்ல அமைப்புக்கள் உள்ளன. அவற்றையும் ஆய்வு செய்து பரிசீலிக்க வேண்டும்.

முற்பகல் 9–45

எல்லை தாண்டிய குற்றங்கள், மாநிலம் தாண்டிய குற்றங்கள், திட்டமிட்ட குற்றங்கள், குறிப்பாக சர்வதேச விளைவுகளை ஏற்படுத்தும் போதை மருந்துக் கடத்தல், சட்ட விரோதமாகப் பணத்தை வெளி நாட்டிற்குக் கடத்துவது ஆகிய குற்றங்களைத் தடுக்க Federal Police அமைப்பை ஏற்படுத்த தேசிய ஒருமைப்பாட்டு Council–ன் துணை Committee கூறியுள்ளது. தேசிய அளவிலும், மாநில அளவிலும் புலனாய்வு சேகரிப்பு அமைப்பை பலப்படுத்த காவல் துறையில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும் எனவும் கூறியுள்ளது.

அரியானா காவல் துறை, லத்தி, பேட்டன் போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தப் போவதில்லை என்றும், தண்ணீர் குண்டுகள், கண்ணீர்ப் புகை குண்டுகளை மட்டுமே கலகங்களில் பயன்படுத்தும் என்றும் அண்மையில் முடிவு செய்துள்ளதை நமது காவல் துறை கவனத்தில் எடுத்துக்கொள்ளலாம். நகரமயமாக்கல், தொழில் மயமாக்கல், மக்கள் தொகை அதிகரிப்பு போன்ற காரணங்களால் காவல் துறை சந்திக்க வேண்டிய சவால்களும் அதிகரித்துள்ளன. குற்றவாளியின் மனித உரிமைப் பிரச்சினைகள், மதம் சார்ந்த கலகங்கள், Cyber crime ஆகியவற்றைச் சமாளிக்க காவல் துறையின் ஆயுதங்களிலும், பயிற்சிகளிலும் நவீனமும், மாற்று முறைகளும் அவசியமாகின்றன. தற்போதுள்ள காவலர்களின் எண்ணிக்கை, அனுமதித்துள்ள எண்ணிக்கையைவிடக் குறைவாக உள்ளது. காவல் துறையின் சிறப்புப் பிரிவுகளின் பணிகளிலும் ஒரு புதிய பார்வை தேவைப்படுகிறது. பெண் காவலர்களின் பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டு, பயிற்சிகளையும், திட்டங்களையும் தீட்ட வேண்டும். காவல் துறைப் பயிற்சிகளில் மேலும் கவனம் செலுத்துவது அவசியம். காவலர்–மக்கள் தொடர்பு மேம்பட வழிகளை ஆய்வு செய்தல், விசாரணை முறைகளில் மனித உரிமைகள் மீறப்படாமல் கண்காணித்தல் போன்றவையும் மிக அவசியம்.

தீயணைப்பு, மீட்புப் பணிகள் மற்றும் முதலுதவி பற்றி மாணவர்களுக்கு பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிற்சி தர வேண்டும். காவல் நிலைய இறப்புகள், காவல் நிலைய கற்பழிப்புகள், பாலியல் பலாத்காரம் போன்றவை காவல் துறைக்கு அவப் பெயரைத் தரக்கூடியவை. இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் காவலர்கள்மீது கடும்



டவடிக்கை தேவை. குற்றத்திற்கு எதிராகப் போராட வேண்டிய ாவலர்களே குற்றவாளியாவது சரியல்ல. Bureau pulling, பெண்கள் ற்றும் முதியோர் தனியாக இருக்கும் இல்லங்களில் கொலை, கொள்ளை, காவலர் அல்லது கஸ்டம்ஸ் அதிகாரிகள்போல் நடித்து ஏமாற்றுதல், Cyber crime, வெளிநாடுகளுக்கு வேலைக்கு அழைத்துச் செல்வதாக போலி Passport, Visa–க்கள் என ஏமாற்றும் Agent–கள் எனக் குற்றங்கள் தினமும் நிகழ்ந்தவண்ணம் உள்ளன. இத்தகைய குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டும். இக்குற்றங்களைத் தடுக்க முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

பொதுவாக, அரசு அதிகாரிகளும், காவல் துறை அதிகாரிகளும் தகவல் திரட்டுபவர்களாக, கொள்கை முடிவெடுக்கத் துணையாக இருப்பவர்களாக, திட்டமிடுபவர்களாக, பல துறைகளை ஒருங்கிணைப்பவர்களாக, அரசுக்கு எச்சரிக்கை செய்பவர்களாக, எடுக்கும் முடிவுகளை நிறைவேற்றுபவர்களாக இருக்கின்றார்கள். ஆகையால்தான், இவர்களை ஆட்சியின் முதுகெலும்பு என்கின்றோம். எனவே, ஆட்சிகள் மாறும்போதெல்லாம் இவர்களை மாற்றுவது, அவர்களுக்கு மனச் சோர்வை ஏற்படுத்துவது மட்டுமல்ல, குடும்பச் சூழலையும் பாதிக்கக்கூடியது. இந்தியா முழுவதும் ஆய்வு செய்ததில், 450 மாவட்ட S.P.–க்களில் 10 சதம் S.P.–க்கள்கூட மூன்று ஆண்டுகள் ஒரே இடத்தில் பணி செய்யவில்லை எனத் தெரிய வந்துள்ளது. I.G. மற்றும் D.I.G. போன்றவர்களின் சதவிகிதம் இதைவிடக் குறைவு.

அரசின் உயர் அதிகாரிகள், தனது ஆதரவாளர்களாக இருந்தால்தான் அரசின் திட்டங்களைச் சரிவரச் செய்ய முடியும் என்ற எண்ணம் அமெரிக்காவின் மூன்றாவது அதிபர் தாமஸ் ஜெபர்சன் காலத்தில்தான் முதன்முதலில் உருவானது. முந்தைய நியமனங்களை மாற்றி, தனக்கு வேண்டியவர்களை நியமிப்பதை "the spoil system" என்று அழைக்கிறார்கள். 1828–ல் அமெரிக்க அதிபராக இருந்த ஆண்ட்ரூ ஜாக்சன் காலத்தில் இந்த வழக்கம் உச்சக்கட்டத்தை எட்டியது. 1881–ல் அதிபராக வந்த கரிபீல்ட் என்பவரை, இந்த spoil system–ஆல் பாதிக்கப்பட்ட ஒருவர் படுகொலை செய்துவிட்டார். 1883–ல் பென்டில்டன் சட்டம் என ஒரு சட்டம் இயற்றப்பட்டு ஒரு தீர்வு காணப்பட்டது. ஆனால், நாடாளுமன்ற ஜனநாயக முறையின் தாய் என அழைக்கப்படும் இங்கிலாந்தில் பொது நிர்வாக நெறிமுறை, அமெரிக்க முறைக்கு நேர்மாறானது. அங்கு ஆட்சி மாறும்போது, அரசு உயர் அதிகாரிகள் பெரும்பாலும் மாற்றப்படுவதில்லை. 1924–ல் இங்கிலாந்து நாட்டின் வெளி விவகார அமைச்சராக இருந்த கர்சன்

பிரபுவின் அந்தரங்கச் செயலாளர், கர்சன் பிரபுவிற்குப் பிறகு வந்த மெக் டொனால்டுக்கும் தொடர்ந்து அந்தரங்கச் செயலாளராகப் பணியாற்றினார். அதேபோல் இரண்டாம் உலகப் போரின் இறுதியில் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் இங்கிலாந்து தலைவர்கள் போர்ட்ஸ்டாம் எனும் மாநாட்டில கலந்துகொண்டபோது, இங்கிலாந்து அதிகாரிகள் அளித்த கருத்துகளை அமெரிக்க அதிகாரிகளுக்கு ஏற்க மனமில்லை. ஏனென்றால், அப்போது இங்கிலாந்தில் பொதுத் தேர்தல் நடக்க இருந்தது. ஒருவேளை ஆட்சி மாறினால்... (மணியடிக்கப்பெற்றது) ஒருவேளை ஆட்சி மாறினால், அதிகாரிகளும் மாறிவிடுவார்கள் என்று அமெரிக்கர்கள் நினைத்தனர். அவர்கள் நினைத்ததுபோல் ஆட்சி மாறியது. சர்ச்சில் தோல்வியடைந்தார். கிளமண்ட் அட்லி பிரதமரானார். அந்த போர்ட்ஸ்டாம் மாநாட்டின் அடுத்த கட்டக் கூட்டத்திற்கு வந்த அமெரிக்க அதிகாரிகளுக்கு ஓரே அதிர்ச்சி. காரணம், சர்ச்சிலோடு வந்திருந்த அதே அதிகாரிகள்தான் கிளமண்ட் அட்லியுடனும் வந்திருந்தனர். எனவே, நாடாளுமன்றம், சட்டமன்றம், அரசு அலுவலகங்களில் இன்றும் நாம் கடைப்பிடிக்கும் இங்கிலாந்து நாட்டின் நெறிமுறைகளை அரசு அதிகாரிகளை இடம் மாற்றும் விஷயத்திலும் கடைப்பிடிக்க முயற்சிக்க வேண்டும்.

முற்பகல் 9–50

காவல் துறை ஊழியர்களுக்கு எப்போதும் இல்லாத அளவிற்கு இப்போது பணிச்சுமையும், பணி அழுத்தமும் அதிகமாக உள்ளது. காவலர்களின் குறைகளைத் தீர்க்க Police Council முறையை ஏற்படுத்தலாம். இங்கிலாந்து நாடு, 1919–ல் Whitley Council முறையில் Police Council–ஐ அமைத்தது. 1953–56 ஆம் ஆண்டுகளில் அதன் பணிகளை ஆய்வு செய்து 1964–ல் சட்டபூர்வமான அங்கீகாரம் அளித்தது. இதையும் ஆய்வு செய்ய வேண்டும்.

காவலர்கள் மக்களின் நண்பர்கள் என்ற நிலை உருவாக வேண்டும். அரசரின் காவல் நன்றாக இல்லை என்றால், 'மாதவர் நோன்பும் மடவார் கற்பும் அழிந்துவிடும்' என்றார் சீத்தலைச் சாத்தனார். காவல் துறையினருக்கு சிறந்த பயிற்சி, நல்ல ஊதியம், சிறப்பான முறையில் குறைகள் களைதல் இருத்தல் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 5 நிமிடங்கள் என்று சொன்னேன், 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.



**திரு. ஆர். ஞானதாஸ்:** அந்த நிலை ஏற்படும்போதுதான் மாங்குடி மருதனார், மதுரைக் காஞ்சியில் கூறுவதுபோல,

"வயக்களிறு பார்க்கும் வயப்புலி போல
துஞ்சாக் கண்ணர், அஞ்சாக் கொள்கையர்
அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர், செறிந்த
நூல்வழிப் பிழையா நுணங்குநுண் தேர்ச்சி
ஊர்காப் பாளர், ஊக்கருங் கணையினர்"

என்று விளங்குவார்கள். இதன்பொருள், பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் காவலர்கள் கடமை உணர்ச்சியையும், அஞ்சா நெஞ்சத்தையும், அறிவுத் தேர்ச்சியையும், செயல் திறனையும் பெற்றிருந்தனர் அதன் காரணமாக, இரவில் மதுரை மக்கள் நிம்மதியாகக் கண்ணுறங்க முடிந்தது என்கிறார் மாங்குடி மருதனார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி தொகுதியில் ஆலங்குளத்தில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை உள்ளது. அதைச் சுற்றிலும் பட்டாசுத் தொழிற்சாலைகள் மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் உள்ளன. அங்கு ஒரு தீயணைப்பு நிலையம் தேவைப்படுகிறது. அதை அமைத்துத் தர வேண்டுமென்று கோருகிறேன். வெம்பக்கோட்டை காவல் நிலையக் கட்டடம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது. மிகவும் மோசமான, இடிந்து விழும் நிலையில் உள்ளது. எனவே, அங்கு ஒரு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அங்கு காவலர்களுக்கு வசதிகள் கொண்ட குடியிருப்புகளும் தேவையாக உள்ளன.

மேலும், விருதுநகர் மாவட்டத்தில் காவல் நிலையங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வாகனங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. பெரும்பாலான இடங்களில் பொது மக்களே தள்ளி, start செய்ய வேண்டிய சூழல் உள்ளது. அவற்றையும் மாற்றி புதிதாக வாகனங்களைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதுபோக, மாதா மாதம் வழங்குகின்ற டீசல் limit–ம் மிகவும் குறைவாக உள்ளது. அவர்களுக்கு அந்த limit–ஐயும் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். கடைசியாக... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** அரசியல் நாகரிகத்தைப் பற்றிப் பேசுகின்றோம். மரபு, மாண்பைப் பற்றியும் சிலாகித்துப் பேசுகின்றோம். தமிழரின் நாகரிகத்தையும், கலாச்சாரத்தையும் தரணி எங்கும் பரப்புகின்றோம். ஆனால், அரசியல் நாகரிகத்தை அனாதையாக்கிவிட்ட சம்பவம் ஒன்று, அதுவும் அரசியல் நாகரிகத்தைப் போற்றிய அண்ணாவின் பெயரில் உள்ள அண்ணா நகரில் நிகழ்ந்தது. தேர்தல் வாக்கு எண்ணுகின்ற நேரத்தில் எங்கள் பொதுச் செயலாளர் மக்கள் தலைவர் வைகோ அவர்களின் வீட்டிற்கு முன்பு அநாகரிகமான சம்பவம் ஒன்று நடந்தது. யார், யார் அந்தச் சம்பவத்தில் ஈடுபட்டனர் என்ற விவரங்களைப் பொதுச் செயலாளர் பத்திரிகைகள்மூலம் பேட்டி கொடுத்துள்ளார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானதாஸ், 11 நிமிடங்கள் ஆகிவிட்டன, நான் உங்களுக்குக் கொடுத்தது 5 நிமிடங்கள்தான், தெரிகிறதா? உரையை முடியுங்கள், ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** எங்கள் பொதுச் செயலாளரின் வீட்டின் முன்பு அன்று நடந்த சம்பவம் வன்மையான கண்டனத்திற்குரியது. எவர் வீட்டின் முன்பும், (குறுக்கீடு) எவர் வீட்டின் முன்பும், குறிப்பாக அரசியல் கட்சிகளின் தலைவர்களின் வீடுகளின் முன்பு இத்தகைய செயல்கள் நிகழாவண்ணம் தடுப்பது ஜனநாயகத்தின் மாண்பைக் காப்பாற்றுவதற்கு உதவும். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று உள் துறை–தமிழ்நாடு காவல் துறை, உள் துறை–தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே கூற விழைகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாடு எந்தத் துறையில் முன்னேறி இருந்தாலும்கூட, அந்த நாட்டிற்குக் காப்பாளர்களாக, பாதுகாப்பு அரணாக இருப்பது அந்த நாட்டினுடைய காவல் துறை என்று எல்லோரும் சொல்கிறார்கள்.

முற்பகல் 9–55

அந்த வகையில் நம்முடைய வள்ளுவப் பெருந்தகை அவர்கள் குறிப்பிடுவது:



*"ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்*
*நீரினும் நன்றதன் காப்பு"*

என்று சொல்கிறார். பயிர்த் தொழிலிலே ஈடுபடுபவர்கூட உழுது, எரு இட்டு நடுகிறார்கள். நட்டு, நீர் பாய்ச்சுகிறார்கள். இப்படி உழுவது, பயிரிடுவது, எரு இடுவது, நாற்று நடுவது, தண்ணீர் பாய்ச்சுவது என்று பல நிலைகள் இருந்தாலும்கூட, அவற்றுக்கெல்லாம் சிறப்பாக இருப்பது, அதைக் காப்பாற்றுவது. ஆகவே, உழவுத் தொழிலுக்கே, காப்பாற்றுவது சிறந்தது. அதைப்போல, நாட்டுக்கு நல்லது, காப்பது என்பதுதான். அடுத்து அவர் சொல்கிறார்,

*"உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்*
*வெறுக்கையு ளெல்லாம் தலை"*

என்று சொல்கிறார். ஆகவே, எல்லாவற்றுக்கும் தலைசிறந்த அமைப்பாக இருக்கிற காவல் துறையைப் பற்றி நான் இங்கே குறிப்பிடுகிற வேளையில், காவல் துறை, விருப்பு, வெறுப்பில்லாமல், யாருடைய தலையீடும் இல்லாமல், தன்னாட்சி பெற்ற அதிகாரமும் கொண்ட ஓர் அமைப்பாகச் செயல்பட வேண்டும் என்பதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால், அப்படி வலியுறுத்தி வந்தாலுங்கூட, காவல் துறை, சிலரின் கைப்பாவையாகச் செயல்பட்டு வந்திருக்கிறது என்பதை நான் இங்கே சில ஆதாரங்களோடு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், காவல் துறை இன்றைய காலக்கட்டத்தில் ஒரு சாதாரண மனிதனைக்கூட கைது செய்வதற்கு அஞ்சி நிற்கிற நிலை. அப்படிப்பட்ட சூழ்நிலையில், கடந்த காலங்களில் இந்தத் தமிழ்நாட்டிற்கு நான்கு முறை முதலமைச்சராக இருந்தவர், தமிழ்நாட்டினுடைய மூத்த தலைவராக இருக்கிற ஒருவர், இந்திய நாட்டுத் தலைவர்களெல்லாம் போற்றக்கூடிய ஒரு தலைவரை நள்ளிரவிலே கைது செய்தார்கள். அப்படி நள்ளிரவிலே கைது செய்தார்கள் என்று சொன்னால், காவல் துறைக்கு அந்தத் தைரியமும், அதிகாரமும் எங்கிருந்து வந்தது என்பதுதான் என்னுடைய கேள்வி. அதுமட்டுமல்ல, அதே நேரத்தில் அந்தக் கைதைக் கண்டித்துப் பேரணி நடத்தி அதை எடுத்துச் சொல்வதற்கு ஜனநாயக நாட்டில் உரிமை இருக்கிறது. அதிலுள்ள உண்மையை வெளிக் கொணர வந்த நேரத்தில், அங்கே ஊர்வலமாகச் சென்றவர்கள்மீது அத்துமீறி காவல் துறை தடியடி நடத்தி, எவ்வளவோ கொடுமைப்படுத்திய காட்சி. அதே நேரத்தில், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள்,

தொலைக்காட்சி நண்பர்கள் செய்தி சேகரிக்கச் சென்ற நேரத்தில் அவர்கள்மீது எவ்வளவு தாக்குதல்? ஜனநாயகத்தின் நான்காவது தூண், அவர்கள்மீதும் தாக்குதல். இதையெல்லாம் நாம் பார்த்தோம். அதுமட்டுமல்ல, ஒரு முதலமைச்சராக இருந்தவர் கைது செய்யப்பட்டு, தரையிலே அமர வைக்கப்பட்ட காட்சியைப் பார்த்தோம். அவரைப் பார்ப்பதற்காகச் சென்றவர்கள் மத்திய அமைச்சர்கள், நாட்டு மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டவர்கள், இந்திய நாட்டுக்கு அமைச்சராக இருப்பவர்கள். அவர்களைக் காவல் துறை எப்படித் தாக்கியது? மத்திய அமைச்சர்களுக்கே அந்த நிலை. நான் வருத்தத்தோடு, வேதனையோடு சொல்கிறேன். யாராக இருந்தாலும் சரி, நம்முடைய மாண்பு நிறைந்த திராவிட இயக்கத்தின் வரலாற்றை உருவாக்கிய பெருமைக்குரிய அமரர் முரசொலி மாறன் அவர்களின் இறப்புக்கு அந்தக் காவல் துறையின் அடிதடி காரணம் என்பதை பல்வேறு காலக்கட்டங்களில் நிறையப் பேர் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இதையெல்லாம் குறிப்பிடுவதற்குக் காரணம்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? Mr. Sengottaiyan, இதிலே உங்களுக்கு என்ன இருக்கிறது?

**திரு. ஜி.கே. மணி:** நான் பேசிவிடுகிறேன், நீங்கள் பிறகு கேளுங்கள். பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசிவிடுகிறேன். பிறகு அவரைப் பேசச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கருத்தைச் சொல்கிறார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) It is his opinion. உட்காருங்கள். முதலில் மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். எல்லோரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் கூடாது. அமைதியாக உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதுமட்டுமல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்) நான் ஆதாரங்களைச் சொல்கிறேன். இன்னும் சில ஆதாரங்களைக் கொடுக்கிறேன். அவர்கள் மறுப்புச் சொல்ல வேண்டுமென்றால் தைரியமாக மறுப்புச் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) நான் பேசிய பிறகு மறுப்புச் சொல்லுங்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் உங்களைச் சொல்லவில்லை அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) உங்களைச் சொல்லவில்லை. திரு. மணி, நீங்கள் பேசுங்கள். உட்கார்ந்துகொண்டு யாரும் பேசக் கூடாது. உட்கார்ந்துகொண்டு பேசுவது அவை மரபல்ல.

**திரு. ஜி.கே. மணி:** தமிழ்நாட்டில் இருக்கிற பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள்மீது, சட்டமன்றத்திலே பேசினார்கள் என்பதற்காக-- நாட்டுப் பிரச்சினையைப் பொதுக் கூட்டங்களில் பேசினார்கள், பத்திரிகை வாயிலாக செய்திகளைச் சொன்னார்கள், அறிக்கையிலே சொன்னார்கள் என்ற காரணத்தால் இந்த நாட்டிலே இருக்கிற மூத்த தலைவர்களை, அதிலும் எங்களைப் போன்ற சாமானியர்களையெல்லாம் சேர்த்து அவதூறு வழக்குப் பதிவு செய்தார்கள். இன்னொன்றுகூட சொல்கிறேன். அதற்கும் மேலே ஒரு படி, மதிப்பிற்குரிய நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்றத் தலைவர் அன்பிற்குரிய நண்பர் திரு. செல்வம் அவர்கள்மீது கடந்த ஆட்சிக் காலத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. நான்கு வழக்குகள், உண்மைக்குப் புறம்பான அவதூறு வழக்குகள்.

(முற்பகல் 10-00)

அதற்குப் பிறகு அவரைக் குண்டர் சட்டத்திலே கைது செய்ததாக வழக்கு மாற்றப்பட்டது. ஆகவே, இது குண்டர் சட்டத்திற்கு ஏற்புடையதல்ல, இது அவதூறு வழக்கு என்று சொல்லி நீதிமன்றத்திலே-- காவல் நிலையத்திலே நேரடியாகவும் சொன்னார். யார் வழக்குத் தொடுத்தாரோ, அவரை வைத்தும் சொல்லச் சொன்னார், முடியவில்லை. பிறகு டெல்லிக்குச் சென்று அங்கே நியாயம் கேட்டார். என்மீது அவதூறாக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. எனக்கு நியாயம் வேண்டும், நீதி வேண்டும் என்று கேட்டார். அந்த நேரத்திலே எங்களுடைய நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள்கூட மத்திய அமைச்சர்களை, நாடாளுமன்ற உறுப்பினர்களை அனுப்பி வைத்து அவர்கூட அதை எடுத்துரைக்கச் செய்தார்கள். அதற்குப் பிறகு அங்கே அவர் C.B.I. விசாரணை தேவை என்று கேட்டார். எனக்கு நியாயம் வேண்டும், நீதி வேண்டும். ஆகவே, C.B.I. விசாரணை வேண்டும் என்று டெல்லியிலே முறையிட்டார். தமிழ்நாடு காவல் துறை, C.B.I. விசாரணை தேவையில்லை, நாங்களே விசாரிக்கிறோம் என்று சொல்லி, டெல்லிக்குச் சென்றும் அதற்குத் தடை விதித்தார்கள். ஆக, இவ்வளவு தலையீடுகள் வந்து, ஆளுங்கட்சித் தரப்பிலே எவ்வளவு பிரச்சினைகள் இருந்தாலும்கூட, அவற்றையெல்லாம் விட்டு

விட்டு, ஒரு தனி நபரை, சாதாரணமானவரைப் பழி வாங்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக அரசுத் தரப்பிலே, அரசின் தூண்டுதலின்பேரில் காவல் துறை இப்படி வரிந்து கட்டிக்கொண்டு செயல்படுவதனுடைய காரணம் என்ன?

இப்படியெல்லாம் செயல்பட்ட பிறகு, பாதிக்கப்பட்ட செல்வம் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே -- நேற்று எங்களுடைய அன்புக்குரிய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசினார்கள், திரு. சிவபுண்ணியம் பேசினார்கள். எல்லோரும் பேசிய பிறகும்கூட நம்முடைய செல்வம் அவர்கள் வாய் மூடி மௌனியாக அமைதி காக்கிறார். ஆனால், அதை நாட்டு மக்களுக்கும், எங்களுக்கும் வெளிப்படையாக அவர் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன். ஏன் அமைதி காக்கிறார் என்று தெரியவில்லை. இன்னும் பயப்படுகிறார். உறவு என்பது வேறு. உண்மையைச் சொல்ல வேண்டியதுதானே? கூட்டணியிலே இருந்தாலும்கூட, செல்வம் அவர்கள் அதை நாட்டு மக்களுக்கு, வெளியிலே கொண்டு வருவதற்கு ஏதாவது பதில் சொல்வாரா என அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

***திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய கூட்ட அலுவலிலும், இன்றும், என்னைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசி வருகிறார்கள். நான் மௌனமாக இருப்பதே, அது எல்லாம் உண்மை என்றுதான் பொருள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு மேல் ஏதோ விடுதலைச் சிறுத்தைகள் எல்லாம் நன்றி கெட்டவர்கள் போலவும், அப்போது நாங்களெல்லாம் உங்களுக்காகக் குரல் கொடுத்தோமே, இன்று நீங்கள் கூட்டணிக்காக அமைதி காக்கிறீர்களே என்ற தோரணையில் மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் ஜி.கே. மணி அவர்கள் பேசினார்கள். நான் தயவுகூர்ந்து இங்கே சொல்லிக்கொள்வதெல்லாம், விடுதலைச் சிறுத்தைகள் எப்போதும் நன்றி உள்ளவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றியை மறக்காதவர்கள். அந்தக் காலத்திலே நீங்களெல்லாம் எங்களுக்காகப் போராடியபொழுது நானும், எங்களுடைய பொதுச் செயலாளரும் நன்றி மடலை எல்லாம் உங்களுக்கு எழுதி இருக்கிறோம். அதையெல்லாம் நீங்கள் எப்படிப் பார்க்க வேண்டும் என்றால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். காவல் துறை அதிகாரிகளும் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். இந்த ஆட்சி, அந்த ஆட்சி என்று பார்க்க வேண்டாம் என்று இரண்டு நாட்களுக்கு முன் நம்முடைய மாண்புமிகு



முதல்வர் பெருந்தன்மையோடு இங்கே எடுத்துரைத்தார், பேசினார். அனைத்து உறுப்பினர்களும் அதை நாம் கவனித்துக்கொண்டிருந்தோம்.

காவல் துறை என்றாலே அரசப் பயங்கரவாதமாக மாறி வருகிறது. எத்தனையோ பயங்கரவாதத்தைப் பார்த்த மாண்புமிகு உறுப்பினர்கள், மூத்த அமைச்சர்கள், மாண்புமிகு முதல்வர் எல்லாம் சில காலங்களிலே காவல் துறை எப்படி மாறுகிறது என்பதை நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். ஆக, என்னால் இந்த உண்மையைப் பேசாமல் இருக்க முடியாது. உண்மையைப் பேசித்தான் ஆக வேண்டிய நிலையில் இன்று உறுப்பினர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஒன்றே ஒன்று மட்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று 1–30 மணி வரை நீங்கள்தான் எனக்குத் தலைவர். நான் உங்களுடைய உறுப்பினர். இங்கே கட்சி கிடையாது. கூட்டணி கிடையாது. எல்லா தர்மத்திற்கு மேலும், இந்த உறுப்பினர்களின் தலைவராக நீங்கள் இங்கே அமர்ந்திருக்கிறீர்கள். அதனால்தான், எந்த முன்னாள் உறுப்பினர்கள் இறந்தாலும், எந்தப் பாகுபாடுமின்றி, கட்சிப் பாகுபாடுமின்றி எழுந்து நாம் இரண்டு நிமிடம் மௌனமாக அவர்கள் மறைவுக்கு அஞ்சலி செலுத்துகிறோம். அந்த முறையிலே மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நேற்றைய விவாதத்திலும், இன்றைய விவாதத்திலும் நடந்த சில தகவல்களை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசப் பயங்கரவாதம் எப்படித் தோன்றுகிறது என்றால், காவல் துறையிலே ஏழையெளிய மக்கள் வரிப் பணத்திலே சம்பளம் வாங்குகிற காவல் துறை அதிகாரிகள்—நான் நேற்றே நினைத்தேன் இதைப் பற்றிப் பேச வேண்டாம், இதைப் பொத்தாம் பொதுவாகப் பேசினால் உண்மையான அதிகாரிகளும், மனசாட்சியுள்ள அதிகாரிகளும் சங்கடப்படுவார்கள் என்றுதான் நான் பேசவில்லை. காவல் துறையிலே அந்தக் காக்கிச் சட்டையை அணிந்தவுடன் அரசியல்வாதியாக மாறுகிறார்கள். ஊதுகுழலாக மாறுகிறார்கள், எப்படியெல்லாம் அவர்கள் ஆட்சியாளர்களைத் திருப்தி செய்ய முடியுமோ, பதவி உயர்வு பெற முடியுமோ அப்படித்தான் செய்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழக்கைப்பற்றி ஒரு மணித்துளியில நான் கூறி முடித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

எங்களுடைய பொதுச் செயலாளர் அமெரிக்காவிற்கு 2003 ஆம் வருடம் ஏப்ரல் 30 ஆம் தேதி செல்கிறார். அவரை விமான

நிலையத்திலே வழியனுப்பிவிட்டு 12 மணிக்கு நானும், எங்களுடைய நிர்வாகிகளும், என்னுடைய ஓட்டுநரும் திரும்பும்போது, காவல் துறை துணை ஆணையாளர் வரதராஜன், ஐ.பி.எஸ். அவர்களும், இணை ஆணையாளர், ஆணையாளர் எல்லாம் காரிலே உட்கார்ந்துகொண்டு, 500 காவல் துறையினரோடு வந்து என் வண்டியைச் சூழ்ந்துகொண்டார்கள். அப்போதுதான் பொடா எல்லாம் பாய்ந்து கொண்டிருக்கிறது. உன்னை நாங்கள் கைது செய்கிறோம் என்று இழுத்துப் போய் ஒரு பாழடைந்த மண்டபத்தில்-அதைக் காவல் துறையைச் சார்ந்த அலுவலகம் என்று சொன்னார்கள்-இரவு முழுக்க அடைத்து வைத்திருந்தார்கள். காலையிலே எனக்குச் சொன்ன தகவல், உன்னை நாங்கள் வெடிகுண்டு வழக்கிலே கைது செய்கிறோம் என்று சொன்னார்கள். நான் எங்கே வெடிகுண்டு வீசினேன் என்று கேட்டதற்கு, இன்று காலையில் 7-00 மணிக்கு நீங்கள் வெடிகுண்டு வீசினீர்கள் என்று சொன்னார்கள். என்னய்யா, 12-00 மணிக்குக் கைது செய்துவிட்டு, காலையில் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறேன், 7-00 மணிக்கு எப்படி நான் வெடிகுண்டு வீச முடியும் என்று சொன்னேன். இல்லை, இதையெல்லாம் நீங்கள் நீதிமன்றத்திலே சொல்லுங்கள் என்று சொல்லி சிறையில் அடைத்துவிட்டார்கள்.

சிறைக்கு வந்தவுடன் முதல் தகவல் அறிக்கை எல்லாம் எனக்கு வருகிறது அங்கே. படித்துப் பார்த்தால், நான்கு வழக்குகள், என்பெயரில் பொய்யான வழக்குகள் புனையப்பட்டிருக்கின்றன. உடனே என்னுடைய மனைவி, வழக்கறிஞர், என்னுடைய நிர்வாகிகளை எல்லாம் அழைத்து, அன்றைய ஆணையாளர் விஜயகுமார் அவர்களைச் சந்தித்து நடந்ததையெல்லாம்--ஒரு நியாயமான அதிகாரி என்று கேள்விப்பட்டிருக்கிறோம்—சொல்லுங்கள் என்று சொன்னேன். உடனே என்னுடைய மனைவி, குழந்தைகள் அனைவரும் ஆணையாளர் விஜயகுமார் அவர்களைச் சந்தித்தார்கள். அவரை நான் நியாயமான அதிகாரி என்று நினைத்திருந்தேன். என்னுடைய மனைவியும் அந்த நம்பிக்கையோடு அங்கு சென்றார். என்னென்ன நடந்தன சொல்லுங்கள் என்று என் மனைவியிடம் கேட்ட அந்த ஆணையாளர்—சார், நான்கு வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன.--ஒரு விநோதத்தைச் சொல்கிறேன். இரண்டு வழக்குகளிலே ஒரு வழக்கின் புகார்தாரராக Babu . S/o. Ramesh வருகிறார், இன்னொரு வழக்கிலே மகசர் witness–ஆக வருகிறார். ஒருவர் இரண்டு role play பண்ணியிருக்கிறார். அது என்ன என்று என்னுடைய வழக்கறிஞர்கள் அவரைப் பற்றி விசாரித்தால், ஏறக்குறைய 25 வழக்குகளுக்கு மேல் stock witness–ஆக அந்த நபர்



இருக்கிறார். இது ஒன்று போதாதா, இந்தப் பொய்யான வழக்கிற்கு? தயவுகூர்ந்து கேட்டுக்கொள்கிறோம், இதை நீங்கள் பொடாவாக மாற்றப் போகிறீர்கள், தேசிய பாதுகாப்புச் சட்டமாக மாற்றப் போகிறீர்கள், இல்லை குண்டர் தடுப்புச் சட்டத்திலே அடைக்கப் போகிறீர்கள், இதில் மூன்றில் ஏதோ உண்மை இருக்கிறது. மாண்புமிகு ஆணையாளர் இதில் தலையிட்டு இதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று இரண்டாம் தேதி கொடுக்கிறார்கள்.

அந்த ஆணையாளரிடம் ஒரு பெண், தமிழகத்தைச் சேர்ந்த பெண், ஒரு மனு கொடுக்கிறார். கணவனைக் காப்பாற்றும்படிக் கதறி அழுகிறார், கைக் குழந்தை கையில் இருக்கிறது. வாங்கி வைத்துக்கொண்டு, சிரித்து, நான் பார்க்கிறேன் என்று அனுப்பிவிட்டு, கீழே உள்ள அதிகாரிகளை அழைத்து, போடுவதைச் சரியாகப் போடவில்லையே, ஒரு நபர் இரண்டு வழக்குகளிலே வந்துவிட்டானே, நீதிமன்றம் காறித் துப்பும் என்று அறிவுரை கூறி, அந்த ஒரு வழக்கை வாபஸ் பெற்று, 1996-லே நடந்த வழக்கைக் குண்டர் தடுப்புச் சட்டத்திலே காட்டுகிறார்கள். 2003–லே நடந்த வழக்கை வாபஸ் வாங்குகிறார்கள். உடனடியாக, நீதிபதியாக இருக்கின்ற என்னுடைய போற்றுதலுக்குரிய வழக்கறிஞர் சந்துரு அவர்கள் என் மனைவியை வரச் சொல்லி, இதையெல்லாம் பார்த்து, ஜோடிக்கப்பட்டது, இவர்களைச் சும்மாவிடக் கூடாது, நான் இருக்கிறேன் தம்பிக்காக என்று அறிவுரை சொன்னார். அறிவுரைக் கழகத்திலே இதையெல்லாம் முறையிட்டோம், ஒரு துணை ஆய்வாளர் என்ன புகார் கொடுக்கிறார் என்றால், வேகமாகக் கார் ஓட்டினார், ஏன் வேகமாகக் கார் ஓட்டினாய் என்று கேட்டேன், பெரிய வெடிகுண்டை எடுத்து வீசினார், நான் அதிர்ஷ்டவசமாகத் தப்பினேன், அங்கிருந்த மக்கள் எல்லாம் சிதறி ஓடினார்கள் என்று இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு வழக்கை ஜோடனை செய்து வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு நீதிபதிகள், மூன்று நீதிபதிகள் கேட்டார்கள். சரி, இவ்வளவு வேகமாக வீசினாரே, வெடி சப்தம் கேட்டதே, மக்கள் எல்லாம் சிதறி ஓடினார்களே, எந்தப் பத்திரிகையிலாவது நீங்கள் கொடுத்தீர்களா? ஒரு chain பறிப்பு என்றால் ஆணையாளர் தினமும் பத்திரிகையாளர்களைச் சந்திக்கிறார். ஒரு வழிப்பறி என்றால் ஆணையாளர் தினமும் பத்திரிகையாளர்களைச் சந்தித்து, பெரிய செய்தி வருகிறது. இரண்டு நாட்களுக்கு முன்புகூட கோயம்பேடு பஸ் நிலையத்திலே ஒரு வெடிகுண்டு இருந்தது, அதை எடுத்துப் பார்த்து அலறியிருக்கிறார்கள் என்பதைப் படம் போட்டு காண்பித்திருக்கிறீர்களே, இவ்வளவு பெரிய சம்பவம் சென்னையிலே

மாநகரத்திலே நடந்திருக்கிறது, ஏன் நீங்கள் பத்திரிகையிலே சொல்லவில்லை என்று கேட்டுத்தான் என்னை விடுதலை செய்தார்.

உடனடியாக இன்றைய மாண்புமிகு நீதியரசராக இருக்கின்ற சந்துரு அவர்கள் என்னை அழைத்து, நீதிமன்றத்திலே முறையிட்டு, இந்த வழக்குகளை C.B.I.-க்கு மாற்ற வேண்டுமென்று மாற்றினார்கள். அன்றைக்கு அங்கிருந்த ஐ. சுப்பிரமணியம், Public Prosecutor மன்றாடிக் கேட்டுக்கொண்டதெல்லாம்–Open Court–லே நடந்த argument–நாங்கள் வழக்குகளையெல்லாம் வாபஸ் வாங்கிக்கொள்கிறோம், தயவுசெய்து, மத்தியப் புலனாய்வுத் துறைக்கு மாற்ற வேண்டாம் என்று சொன்னார்கள். அது மாற்றலாகிவிட்டது. இது வேறு. இடையில் மிரட்டல்கள், சுட்டுவிடுவேன் என்று சொன்னது, உன்னை kidnap செய்துவிடுவேன் என்று சொன்னது. விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தை அழித்துவிடுவேன் என்று சொன்ன காவல் துறை அதிகாரிகளும் இன்று தமிழகத்திலே உலா வந்துகொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களுடைய உறுப்பினர். நேற்றெல்லாம் பேசும்போது நான் எதற்காகச் சொல்லவில்லை என்றால், நியாயமான, உண்மையான, கடமை மேல் நம்பிக்கையுள்ள அதிகாரிகளும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட கருப்பு ஆடுகளும் இந்தத் துறையிலே இருக்கின்றன. நான் ஒரு தாழ்த்தப்பட்டவன். என்னுடைய தாயிடம், நான் தாழ்த்தப்பட்டவனாகப் பிறக்க வேண்டுமென்று மனு போட்டுப் பிறக்கவில்லை. நான் ஒரு தாழ்த்தப்பட்டவனாகப் பிறந்தவன். இந்தச் சமூகத்திற்காகத் தொண்டாற்ற வேண்டும் என்று நினைப்பதற்காக இந்தக் காவல் துறை அதிகாரிகள் இப்படிச் செய்வது நியாயமா? இப்போது C.B.I.–ல் விசாரித்து இருக்கிறார்கள். என்னை அழைத்த அந்த அதிகாரி, 3 வழக்குகள் பொய்யான வழக்குகள் என்று மேலிடம் முடிவு செய்து விட்டது, ஒரு வழக்கு Legal opinion–க்காகச் சென்று இருக்கிறது என்று சொன்னார்.

*முற்பகல் 10–10*

இடையிலே தன்னுடைய குட்டு எல்லாம் அம்பலம் ஆகிவிடும் என்று, உச்ச நீதிமன்றத்திலே Stay Order கேட்டார்கள். அங்கும் அது நிராகரிக்கப்பட்டுவிட்டது. எனக்குக் கிடைத்த தகவல் எல்லாம், 2004, 2005 ஆம் ஆண்டுகளிலே, இங்கு இருக்கிற காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகள், தன்னுடைய Batchmate எப்போதும் தமிழகத்திலே இருந்து deputation–ல் C.B.I.–க்கு மாற்றப்படுவார்கள். அவர்கள்மூலமாக



அணுகி, இந்த வழக்கை ஏதாவது திசை திருப்ப முடியுமா என்று முயற்சி செய்தார்கள் என்று சொல்லும்போதுதான், மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் கோ.க. மணி சொன்னதுபோல, அவருடைய நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்களைச் சந்தித்தோம். மதிப்பிற்குரிய C.P.I. தலைவர் பெரியவர் நல்லகண்ணு அவர்களைச் சந்தித்தோம். இவர்கள் எல்லாம், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மூலமாகப் பிரதமரைச் சந்திக்க ஏற்பாடு செய்தார்கள். மாண்புமிகு உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டீலைச் சந்திக்க ஏற்பாடு செய்தார்கள். என்னை அழைத்துக்கொண்டு போய் முறையிட்டார்கள். இப்போது இந்த நிலையில் இந்த வழக்கு இருக்கிறது.

நான் என்ன சொல்லிக்கொள்கிறேன் என்றால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசப் பயங்கரவாதத்தை நாம் எப்படி ஒழிக்கப் போகிறோம். இதெல்லாம் உண்மை. நான் உண்மையை என்றும் மறுக்கவில்லை. நடந்தது எல்லாம் உண்மை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராகத் தொடர்ந்து இப்படிப்பட்ட ஒரு அவல நிலை ஏற்படுகிறது. திட்டக்குடியிலே, எங்கள் பொதுச் செயலாளர் அண்ணன் திருமாவளவன் அவர்கள்மீது proclaimed offender என்று ஒரு வாசகம் எழுதப்பட்டிருந்தது. ஆட்சியாளர்களைப் பற்றிப் பேச வேண்டாம். நம் காவல் துறை அதிகாரிகளைப் பற்றி பேசலாம். மாண்புமிகு முதல்வர் நீதியரசராக இங்கே அமர்ந்து இருக்கிறார். அவரிடம் நான் முறையிட்டுவிட்டேன். அவரும் எனக்கு நீதி அளிக்கிறேன் என்று வாக்குறுதி அளித்து இருக்கிறார். இதிலே எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் நன்றி உள்ளவர்கள். இங்கே இருக்கிற கட்சித் தலைவர்கள் எல்லாம் புரிந்துகொள்ள வேண்டும். இன்றைய மாண்புமிகு முதலமைச்சரை அன்றையதினம் கைது செய்தபோதுகூட தமிழகத்திலே எந்தத் தலைவர் அழுதார் என்று தெரியாது. எங்களுடைய தலைவர் தேம்பித் தேம்பி சிறை வாசல் முன்பு அழுது தர்ணா செய்தார். நாங்கள் எல்லாம் அங்கே போராட்டம் நடத்தியவர்கள். நாங்கள் நன்றி கெட்டவர்கள் அல்ல. இதுதான் நடந்தது. இனி வருங்காலங்களிலாவது மாண்புமிகு முதலமைச்சர்--காவல் துறையிலே நல்லவர்கள், வல்லவர்கள் என்று பெயர் சொன்னவர்கள் எல்லாம் மான் தோலைப் போர்த்திய புலியாக உலா வந்துகொண்டு இருக்கிறார்கள். எல்லாத் தொழில் அதிபர்களிடமும் தொடர்பு வைத்து இருக்கிறார்கள். நான் ஒரு போராட்டத்திலே ஒரு தொழில் அதிபரைச் சந்திக்கும்போது, Can I talk

to Commissioner என்று சொல்கிறார். நான் ஒரு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறேன், பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கிறேன், அந்த Speaker Phone-லே போட்டுப் பேசுகிறார். நான் ஆணையாளரிடம் பேசட்டுமா, இணை ஆணையாளரிடம் பேசட்டுமா என்று அந்த அளவிற்குக் காவல் துறை சீர்கெட்டு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏற்கெனவே துணிச்சலாக, தைரியமாக, ஈரல் கெட்டுப் போன காவல் துறை என்று சொல்லி இருக்கிறீர்கள். உங்களால்தான் இதைச் சீர் செய்ய முடியும். எத்தனையோ வழக்குகளைச் சொல்லலாம். இங்கே நேரம் இல்லை. செல்லஞ்சேரி சிவகாமி, செங்கம்பேடு காந்திமதி, மணலூர் செல்வம், வழுதாவூர் ஆறுமுகம், சென்னகரம்பட்டி அம்மாசிவேலு, ஆலாங்காயம் இராஜேந்திரன், இப்படிப் படுகொலை நடந்து, இதுவரை எந்த விசாரணையும் இல்லை. இதில் யாரைக் குற்றம் சொல்வது, காவல் துறையை?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயங்கரவாதத்தைக் கண்காணிக்க நாம் குழு அமைத்து இருக்கிறோம். தீவிரவாதிகளைக் கண்காணிக்கக் குழு அமைத்து இருக்கிறோம். தயவுசெய்து மோசமான காவல் துறை அதிகாரிகளைக் கண்காணிக்க ஒரு குழு அமையுங்கள். பிரச்சினையே இங்கு இருந்துதான் ஆரம்பிக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் உறுப்பினர் நான், என்னுடைய முறையீட்டைச் சொல்லிவிட்டேன். இங்கு இருக்கிற தலைவர்களுக்கெல்லாம் என்ன நடந்தது என்பதையும் சொல்லிவிட்டேன். இனியும் இதையும் அரசியல் ஆக்காமல், இந்தப் பொறுப்பை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ஒப்படைத்துவிட்டேன். அவர் தீர்ப்பளிப்பார், எனக்கு நீதி கொடுப்பார், மத்திய அரசு உள் துறையிடம் பேசுவார் என்று கூறி, வேண்டி, விரும்பி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வம் அவர்கள் நீண்ட விளக்கம் அளித்திருக்கிறார்கள். ஆனால், அதில் ஒன்று மட்டும் அடங்கி இருக்கிறது. இவையெல்லாம் நடைபெறுவதற்கு யார் காரணம்? காவல் துறை அல்ல, காவல் துறையை இயக்கியவர், ஏவியவர் யார் என்பதை நமதுடைய செல்வம் அவர்கள் சூசகமாகச் சொல்லி இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல. (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதுமட்டுமல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாருங்கள். பின்னால் பாருங்கள். (குறுக்கீடுகள்) பின்னால் பாருங்கள் சார். (குறுக்கீடுகள்) உட்காரச் சொல்லுங்கள். உங்கள் உறுப்பினரை முதலில் உட்காரச் சொல்லுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அப்போதுதான் அனுமதி தருவேன். (குறுக்கீடுகள்) அது முடியாது. (குறுக்கீடுகள்) கட்டாயப்படுத்த முடியாது. (குறுக்கீடுகள்) அது முடியாது. (குறுக்கீடுகள்) கட்டாயப்படுத்த முடியாது. முதலில் உங்கள் உறுப்பினரை உட்காரச் சொல்லுங்கள். அதற்கு அப்புறம் பார்க்கலாம். அவர் பேசுவதா, வேண்டாமா என்பதை நான் முடிவு எடுப்பேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு படி மேலே சொல்லுகிறேன்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உங்கள் உறுப்பினரை உட்காரச் சொல்லுங்கள். அதற்கு அப்புறம் உங்களுக்கு அனுமதி கொடுப்பதா அல்லது வேண்டாமா என்பதை நான் முடிவு எடுக்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும்கூட சில உண்மைகளைச் சொல்லுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது இருக்கட்டும். அதைப் பற்றிப் பேச வேண்டுமென்றாலே, (குறுக்கீடுகள்) No. உங்கள் உறுப்பினரை முதலில் உட்காரச் சொல்லுங்கள். எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உறுப்பினர்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உட்காருங்கள் ஐயா. (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள் அவ்வளவு பேரும். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். அவரைப் பேச விடுவதா, வேண்டாமா என்பதற்கு நான் முடிவு எடுப்பேன். எல்லோரும் சேர்ந்து கேட்கக் கூடாது. முதலில் உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. எங்கள் கட்சி உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் சம்பந்தப்படாத,

சம்பந்தமில்லாத ஒரு வழக்கில் அவர் சேர்க்கப்பட்டு, அவரைக் காவல் துறை கைது செய்து... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, செங்கோட்டையன் சொல்லுங்கள். மணி, கொஞ்சம் உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு வாய்தான் பேச வேண்டும் இதிலே. 61 வாய்களும் பேசக் கூடாது மைக்கிலே. அமைதியாக உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் பேசுவதிலே நாங்கள் இடையிலே நுழையவில்லை. ஆனால், அவர் எங்களுடைய ஆட்சியைப் பற்றி, அதிகார துஷ்பிரயோகம் இருக்கிறது என்று சொல்கிறபோது, அதை எழுப்புவதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமையை நீங்கள் அனுமதிக்கவில்லை. ஆகவேதான் எல்லோரும் எழுந்தோமே தவிர, 61 பேர்களும்--60 பேர்களும் எழுந்து குரல் கொடுக்கவில்லை. நீங்கள் அனுமதிக்கவில்லை, அனுமதியளிக்காத காரணத்தால்தான் நாங்கள் எல்லோரும் எழுந்தோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது சபை ஆரம்பித்த தேதியிலிருந்து நடக்கக்கூடிய சம்பவம். இதை நீங்கள் ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இல்லை, இல்லை. சபையில் சபாநாயகர் நடந்துகொள்கிற முறை... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை நீங்கள் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பக்கம் அனுமதி அளித்துக்கொண்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், விஷயத்தைச் சொல்லுங்கள். முதலில்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகிறபோது காவல் துறை தன்னிச்சையாக இயங்கவில்லை என்று ஒரு குறிப்பைச்



சொல்லியிருக்கிறார்கள். ஆனால், காவல் துறைக்கு என்று சில விதிமுறைகள் இருக்கின்றன. பின்னாலே இருந்து இயக்கப்படுகிறார்கள் என்று சொல்வது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகிறபோது இன்றைக்கு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உங்கள் கருத்தைச் சொல்லி விட்டீர்கள் இல்லையா?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** சொல்ல விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** சொல்ல விடுங்கள். (குறுக்கீடு) இதே பாட்டாளி மக்கள் கட்சி இன்றைக்கு அங்கீகாரம் பெற்றிருக்கிறது என்று சொன்னால், புரட்சித் தலைவி அம்மா மட்டும் இல்லையென்று சொன்னால், இந்த அங்கீகாரத்தை அவர்கள் பெற்றிருக்க முடியாது. அந்த அங்கீகாரத்தைப் பெற்ற காரணத்தினாலே, இன்றைக்குக் கூட்டணி மாறுகிற காரணத்தால், இன்று எங்களை விமர்சனம் செய்து கொண்டிருக்கிற நிலையைப் பார்க்கிறபோது, அவருடைய கருத்துகளுக்கு எங்களுக்கு உடன்பாடு இல்லை. ஆனால், முன்னாலே இருந்த அரசைப் பற்றி (குறுக்கீடு) முன்னாலே உட்காரச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள் எல்லோரும். அந்தப் பகுதியில் உள்ளவர்கள் அனைவரும் உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** என்ன வேண்டுமாலும் சொல்லுவீர்கள். நாங்கள் அதைக் கேட்டுக்கொண்டு இருக்க வேண்டும் என்கிறீர்களா? நாங்கள் சொல்வதற்கு வாய்ப்பு (குறுக்கீடுகள்) உட்காருங்கள் என்றால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. கோ.க. மணி அவர்கள் பேசுவதற்கு கொறடா வந்து கேட்டு, கொறடாவும் துணைத் தலைவரைக் கேட்டு, நீங்கள் அனுமதித்து இருக்கிறீர்கள். அவர் பேசிக்கொண்டிருக்கிறார். ஆனால், பின்னால் இருக்கின்ற பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள், அதைப்போல நம்முடைய வைத்திலிங்கம் அவர்கள், வேலுசாமி அவர்கள் அங்கே சத்தம் போட்டுக்கொண்டேயிருந்தால் எப்படி? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சின்னசாமி, வைத்திலிங்கம் உட்காருங்கள் அமைதியாக. எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** உங்கள் கட்சியினுடைய கொறடாவுக்குப் பேச அனுமதி வழங்கப்பட்டிருக்கிறபோது, யார் பேசினால் என்ன? அவர் கருத்தைச் சொல்லட்டுமே? அவர் கருத்தைச் சொல்ல வேண்டியதுதானே? அதற்காக மற்ற எல்லா உறுப்பினர்களும் சத்தம் போட்டுக்கொண்டேயிருந்தால், அவர் பேச வேண்டாமென்று நீங்களே முடிவு செய்தால் எங்களுக்கு அதைப் பற்றி ஆட்சேபணை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பா.ம.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் கோ.க. மணி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே காவல் துறை பற்றியும், அதை இயக்கியவர்களைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். உடனே எதிர்க்கட்சிக்காரர்கள் அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும், மற்ற தோழமைக் கட்சித் தலைவர்களும், சட்டமன்றம் நடந்தபோது நியாயமான ஒரு கேள்வியைக் கேட்ட நேரத்திலே, அவர்களையெல்லாம் வெளியேற்றியபோது, நாங்கள் சாலை மறியல் செய்தோம். மறுபடியும் (குறுக்கீடுகள்) நடந்ததைச் சொல்கிறேன். மறுபடியும் நாங்கள் அண்ணா சாலையில்... (குறுக்கீடுகள்)

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மறுபடியும் நாங்கள் அண்ணா சாலைக்குப் போய், அண்ணா சிலைக்கு முன்னாலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சின்னசாமி, எச்சரிக்கிறேன். திரும்பத் திரும்ப நீங்கள் கையைத் தூக்கி, கையை ஆட்டிப் பேசுவது நல்லதல்ல (குறுக்கீடு) உட்காருங்கள். அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) அமைதியாக உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நாங்கள் மறியல் செய்தோம் எங்களை எல்லாம் பார்ப்பதற்கு எங்கள் தலைவர்கூட வந்தார். ஆனால்



வேடிக்கை என்னவென்றால், எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறவில்லை. ஆனால், மறுநாள், அன்றைய முதலமைச்சர் அவர்கள், இந்த அவையிலே 110-வது விதியின்கீழ், இன்றையதினம் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்கள், சுனில் என்ற Joint Commissioner-ஐத் தாக்கினார் என்று இங்கே படித்து, அதற்குப் பின்னால் அவரிடத்திலே போய், அவர் அடித்தார் என்று statement கொடுங்கள் என்று கேட்டு, அவர் கொடுக்க மறுத்த காரணத்தினாலே, கடைசி வரையில், அவர் வேலையிலே தொடர்ந்து நீடிக்க அனுமதி தராமல், உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெற வேண்டுமென்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, பிறகு விடுமுறையில் இருந்தார் என்பதும் ஒரு வரலாறு. இப்படி எல்லாம் நடந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சி என்ற காரணத்தினாலே எந்த அளவுக்குக் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் சில பேர் பாதிக்கப்பட்டும் இருக்கிறார்கள், சில பேருக்குப் பரிசும் கிடைத்திருக்கிறது. எனவே, உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளை எடுத்துச் சொல்வது அவரவர்களுடைய உரிமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் நடந்த உண்மையைத்தான் சொன்னேன். அதிலும் குறிப்பாக, கடந்த ஆட்சிக் காலத்திலே காவல் துறைக்குப் பொறுப்பேற்றிருந்தவர் முன்னாள் முதலமைச்சர் அவர்கள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேகர்பாபு, அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடு) எச்சரிக்கையாகச் சொல்கிறேன், அமைதியாக உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு) ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது குறுக்கீடு செய்யக் கூடாது. சேகர்பாபு, முறையாக நடந்துகொள்ளவில்லை நீங்கள். உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு) எச்சரிக்கிறேன், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, இவ்வளவு பிரச்சினைகள் நடைபெறுகின்றன. அரசியல் கட்சித் தலைவர்கள்மீது அவதூறு வழக்குகள் போடப்படுகின்றனவே, பத்திரிகையில் செய்தி வருகிறதே, அன்றைய முதலமைச்சர் படித்திருக்க மாட்டாரா? முதலமைச்சரை மீறி காவல் துறை தவறாக நடந்துகொள்கிறது என்று சொன்னால், அதைக் கட்டுப்படுத்துவது முதலமைச்சரின் பொறுப்பா, இல்லையா? அவர்தானே கட்டுப்படுத்த வேண்டும்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் முதலில்.

**திரு. ஜி.கே. மணி:** திரு. செங்கோட்டையன் அவர்கள் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். பாட்டாளி மக்கள் கட்சிக்கு அரசியல் அங்கீகாரம் என்று சொன்னார்கள். இப்போது சொல்கிறேன், கடந்த முறை அ.தி.மு.க. ஆட்சி அதிகாரத்திற்கு வருவதற்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அன்றைய முதலமைச்சராக வருவதற்கும் பாட்டாளி மக்கள் கட்சியும், காங்கிரஸ் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும்தான் காரணம் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். இல்லை என்று சொன்னால், ஆட்சிக்கு வந்திருக்க முடியாது. எங்கள் தயவால் வந்த ஆட்சி, 5 ஆண்டு காலம் இருந்த ஆட்சி. ஆனால், ஏறி வந்த ஏணியை எட்டி உதைத்தவர்கள் யார் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேகர்பாபு, ரவிச்சந்திரன், விஜயகுமார், உங்கள் மூன்று பேரையும் எச்சரிக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலில். மணி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர்மீது குற்றச்சாட்டுச் சொல்வது நோக்கம் அல்ல. எங்கள் உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. (குறுக்கீடுகள்) அது முழுக்க, முழுக்க அவதூறான வழக்கு. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, கொஞ்சம் பொறுங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் ஒன்று, உங்கள் உறுப்பினர்களைக் கட்டுப்பாட்டில் வையுங்கள், இல்லையென்றால் உங்கள் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை அவையில் சொல்லிவிடுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்டுப்பாட்டில் இல்லை என்று சொல்லிவிடுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே. நான் நடந்தவற்றைச் சொல்கிறேன். உண்மையைச் சொல்கிறேன். மாறாகச் சொல்லவில்லை. தவறாகப் பேசவில்லை. எங்கள் உறுப்பினர் திரு. வேல் முருகன்மீது அவதூறாக ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னைக் கட்டாயப்படுத்தினால் கொடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அவர் கட்டாயப்படுத்தி எல்லாம் கொடுக்க முடியாது. அவர் கட்டாயப்படுத்தினாலும் கொடுக்க முடியாது.



**திரு. ஜி.கே. மணி:** அவர் பிணையிலே வெளிவர வேண்டுமென்று முன் ஜாமீன் கேட்டு மனு செய்தார். உயர் நீதிமன்றம் முன் ஜாமீன் கொடுக்கக் கூடாது என்று அதை மறித்தார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கட்டாயப்படுத்தினால் அனுமதி கொடுக்க முடியாது. மணி, பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதற்குப் பிறகு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார். ஆனால், உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, முன் ஜாமீன் வாங்குவதற்குக்கூட இங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளை அனுப்பி, அதிலும் குறிப்பாக, அ.தி.மு.க. வழக்கறிஞரே அங்கு சென்று தடையாக இருந்து, ஜாமீன் வழங்கக் கூடாது என்று சொன்னார். ஏன் இவ்வளவு அக்கறை, அன்றைய அரசுக்கு? அதுமட்டுமல்ல, பெரியவர் சங்கராச்சாரியார்—நான் வழக்குக்குள் போகவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொள்ளாச்சி ஜெயராமன், உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது இடையில் வரக் கூடாது. போங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அவர் மீது என்ன நடவடிக்கை? அரசுக்கு என்ன அவ்வளவு அக்கறை? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது குறுக்கே வரக் கூடாது. அதுதான் மரபு. அதுதான் Rule. (குறுக்கீடு) போய் உட்காரச் சொல்லுங்கள் முதலில். (குறுக்கீடு) No, no, no. (குறுக்கீடு) முடியாது, முடியாது. உட்காரச் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் தேர்தலை 5 ஆண்டு காலம் நடத்த முடியவில்லை. நீதிமன்றக் காரணம். அதே நேரத்தில், பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை மற்றும் நிறையப் பிரச்சினைகள் நீதிமன்றத்தில் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஆனால், நீதிமன்றத்தில் ஏன் இதற்கெல்லாம் மேல்முறையீடு செய்யவில்லை? அதிலே காட்டாத அக்கறை, இதிலே மட்டும் அன்றைய அரசுக்கு என்ன இருந்தது என்று நான் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விசுவநாதன், என்ன, சொல்லுங்கள். (குறுக்கீடு)

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள், திரு. விசுவநாதன், திரு. பி.கே. சேகர்பாபு, ...

(திரு. இரா. விசுவநாதன் மற்றும் திரு. பி.கே. சேகர்பாபு ஆகிய இருவரும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கொறடா ஆகியோரின் இருக்கைகளுக்கு அருகில் வந்து, அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தனர்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் பேசுகிறபோது, சபாநாயகருக்கும், பேசும் உறுப்பினருக்கும் இடையிலே யாரும் வரக் கூடாது என்பது மரபு, முதலமைச்சர்கூட—தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தும்கூட, பேசிக்கொண்டிருந்தால் வெளியே நின்றுவிட்டு, உள்ளே வருகிற மரபு இங்கே பின்பற்றப்படுகிறது. நீங்கள் பேச வேண்டுமென்றால், லாபியிலே போய் வைத்துப் பேசலாமே தவிர, இங்கேயே கூப்பிட்டு வைத்துப் பேசக் கூடாது. நீங்கள் முன்னாள் முதலமைச்சராக இருந்தவர்கள், இடைக்காலத்திலே இருந்தவர்கள். பேசுங்கள். லாபியிலே போய்ப் பேசுங்கள். இங்கேயே கூப்பிட்டு வைத்துக்கொண்டு பேசினால் என்ன அர்த்தம்? சபை நடக்கிறதா, வேண்டாமா? (குறுக்கீடுகள்) நீங்கள் பேசும்போதே எல்லோரையும் எழும்பச் சொல்கிறீர்கள். (குறுக்கீடுகள்) முதலிலே அங்கே பாருங்கள். முதலிலே உங்கள் ஆட்களுக்குப் பேசுவதற்குக் கற்றுக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) வேண்டுமென்றே திட்டமிட்டு அவரே, எழுந்திருக்கும்போது, அவர் பேசுவதற்கு அனுமதி கேட்டால் பரவாயில்லை, எழுந்திருக்கும்போதே அவரே, எல்லோரையும் எழுந்திருங்கள் என்கிறார். அறுபது பேரும் எழுந்து நிற்கிறார்கள். (குறுக்கீடுகள்) இதுதான் இந்தச் சட்டமன்றத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறதே தவிர, பேசுவதற்கு அனுமதியே கேட்பதில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரி, உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** ஒரு கட்டுப்பாடாக இல்லாமல், வேண்டுமென்றே கலவரத்தை, கூச்சல்–குழப்பத்தை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடே அ.தி.மு.க. உறுப்பினர்கள் இங்கே வருகிறார்கள். (குறுக்கீடுகள்) பேச சரக்கில்லாத காரணத்தினாலே, சத்தம் போட்டுவிட்டுப் போகலாம் என்று நினைக்கிறார்கள், அதுதான் நடக்கிறது இங்கே. (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடு) மணி, உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்லட்டும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மிக முக்கியமான உள் துறை பற்றிய மானியக் கோரிக்கையினுடைய விவாதம் நடந்துகொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் (குறுக்கீடுகள்) ஏற்கெனவே (குறுக்கீடுகள்) இப்படிப் பேசினால் எப்படி? அங்கே பார்த்துச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அங்கே பார்த்துச் சொல்லுங்கள், அங்கே பார்த்துச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அங்கே பார்த்துச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், உங்கள் கருத்தைத்தான் சொல்லச் சொல்கிறோமே தவிர, அவர் சம்பந்தமாகப் பேசினாரா, சம்பந்தம் இல்லாமல் பேசினாரா என்று அதைப் பற்றி முடிவு எடுக்க வேண்டியது நான். நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** சொல்லக் கூடாது என்றால், சொல்ல எங்கே விடுகிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்கிறார் இல்லையா? அவரும் சம்பந்தம் இல்லாமல் சொல்லக் கூடாது இல்லையா? (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தத்தோடு பேசுவது, சம்பந்தம் இல்லாமல் பேசுவது, இதனுடைய தீர்ப்பு வழங்குவது உங்களுடைய கடமை, உரிமை. சட்டப் பேரவையிலே இருக்கிறது. அனுமதித்தால்கூட யார் சொல்ல விடுவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கருத்தைச் சொல்ல வேண்டுமே தவிர, அடுத்த உறுப்பினர் பேசுவதைச் சொல்ல வேண்டாம். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அங்கே உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு அந்த உரிமையை யார் கொடுத்தது என்பதை நான் கேட்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள் எல்லோரும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதைச் சொல்லுங்கள். அதைத்தான் நாங்கள் கேட்கிறோம். (குறுக்கீடுகள்) எல்லாப் பக்கமும் அமைதிப்படுத்துங்கள். அதைத்தான் நாங்கள் கேட்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாப் பக்கமும்தான் அமைதியாக இருக்க வேண்டுமென்று நான் சொல்கிறேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** உங்களுடைய பார்வை,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, அமைதியாக இந்தச் சபையை நடத்த வேண்டுமென்று விரும்புகிறேன் நான். (குறுக்கீடுகள்) ஆனால், குழப்பம் செய்ய வேண்டுமென்றே ஒரு சில உறுப்பினர்கள் வருகிறார்கள். அதுதான் உண்மை.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, இங்கே பாருங்கள், இது தவறானது. (குறுக்கீடுகள்) இது தவறானது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதாவது, இப்போது மாண்புமிகு உறுப்பினர்— மாண்புமிகு அமைச்சர், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டுக் குழப்பம் ஏற்படுத்துவதற்காகப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள் என்று சொல்கின்றார்கள். ஆனால், நாங்கள் அவ்வாறு இன்றல்ல, என்றைக்குமே நடந்ததில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசாமல், அவர்களுடைய தோழமைக் கட்சிக்காரர்களாக இருக்கிறவர்களைப் பேச வைத்து, திட்டமிட்டுக் குழப்பம் ஏற்படுத்துகிறவர்கள் யார் என்பதை நாட்டு மக்கள் நன்றாகவே அறிந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) திட்டமிட்டு, குழப்பத்தை உண்டு பண்ண வேண்டுமென்று, யார் சபை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நாட்டு மக்கள் நன்றாகவே அறிந்திருக்கின்றார்கள். ஆகவே, இன்றைக்கு எந்த மானியம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றதோ, அந்த மானியத்தினுடைய தொடர்பாக இருக்கின்ற பிரச்சினைகளை, அரசு எடுக்க வேண்டிய பிரச்சினைகளை, தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளை மாண்புமிகு



உறுப்பினர் பேசினால், நாட்டுக்கும் நல்லது, மக்களுக்கும் நல்லது. இங்கு நம்மை அனுப்பி வைத்திருக்கிறார்களே மக்கள். அவர்களுடைய நம்பிக்கைக்கும் உகந்ததாக இருக்கும் என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள், அவர்களுக்கு வேண்டிய தோழமைக் கட்சிகளைத் தூண்டிவிட்டுப் பேச வைக்கிறார்கள் என்று (குறுக்கீடுகள்) எங்கள் பேச்சுக்கு உள்நோக்கம் கற்பித்துப் பேசுகிறார்கள். இந்த அவையினுடைய விதிகளில்--எந்த உறுப்பினருடைய பேச்சுக்கும் உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது என்பதை நம்முடைய சட்டமன்றப் பேரவை விதிகள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றன. (குறுக்கீடுகள்) அதிலும் குறிப்பாக, ஒரு கட்சியினுடைய தலைவர், இந்த மாமன்றத்திலே அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக இருக்கின்ற பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர், பொறுப்புள்ள ஒரு தலைவர் பேசுவதை, சம்பந்தமில்லாமல் பேசுகிறார் என்று பேசுவதை எந்த அவையினுடைய மரபும், விதிகளும் ஏற்றுக்கொள்ளாது. (குறுக்கீடுகள்) வீரப்பன் சுடப்பட்டதற்கு இவர்கள் பெருமைப்பட்டுக்கொள்வார்களாம், செல்வத்தை உள்ளே வைத்துக்கொள்வதில் மட்டும் இவர்களுக்கு சம்பந்தம் இல்லையாம். (மேசையைத் தட்டும் ஒலி) இதை எங்கே போய்ச் சொல்வது நாங்கள்? இதை நாங்கள் சொல்லக் கூடாதா? (குறுக்கீடுகள்)

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், ஏதோ நாங்கள் கூட்டணிக் கட்சித் தலைவர்களைப் பேசவிடுவதாகச் சொன்னார். இப்போது விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த செல்வம் அவர்கள் பேசினாரே, அவர் எங்கள் கூட்டணியிலே இருக்கிறாரா, உங்கள் கூட்டணியிலே இருக்கிறாரா? அவர் பேசினாரே, அவர் எப்படிப் பேசினார்? (குறுக்கீடு)

)ற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. 'சங்கோட்டையன். (கூச்சல்–குழப்பம்) பின்னாலேயிருந்து எதற்கு இரண்டு பரும் கூச்சல் போடுகிறீர்கள்? அமைதியாக இருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே தறிப்பிட்டார்களே, இந்திரா காந்தி அவர்களையும், நெடுமாறனையும மண்டையைப் பிளந்தார்களே, அன்றைக்கு மதுரையிலே நடைபெற்ற நிகழ்ச்சியைப் பார்க்கிறபோது, இன்றைக்கு அதற்கு அவர் என்ன பதில் சொல்லப் போகிறார்?

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வைகோ அவர்கள், உங்களைப் பார்த்து சண்டாளி, சதிகாரி என்று சொல்கின்றபோது நீங்கள் என்ன செய்துகொண்டிருந்தீர்களோ, அதைத்தான் நாங்கள் செய்தோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், இங்கே பாருங்கள். (குறுக்கீடு) நீங்கள் அவர்களைப் பேசுவது, அவர்கள் உங்களைப் பேசுவது, இதையெல்லாம் விடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், திரு. வேல்முருகன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நீங்கள் ஒன்று சொல்வீர்கள், திரும்ப அவர்கள் சொல்வார்கள். (குறுக்கீடு) வேல்முருகன், பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலேக் காவல் துறை எப்படிக் கையாளப்பட்டது என்பதற்கு ஓரே ஒரு உதாரணம், நான் பண்ருட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன். என்மீது ஒரு வழக்கு திட்டமிட்டுப் பதிவு செய்யப்படுகிறது. குள்ளஞ்சாவடி என்கிற காவல் நிலையத்தில், காவல் துறை உதவி ஆய்வாளர், ஆய்வாளர், 11 காவலர்களும் இருக்கிறார்கள், வேல்முருகன் இந்த வழக்கில் சமபந்தப்படவில்லை, சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகளே, மாவட்ட அளவில் நடக்கின்ற விளையாட்டுப் போட்டியில் நாங்கள் பாதுகாப்புத் தந்திருக்கிறோம்; பாதுகாப்புககுக் காவல் துறை இருந்துகொண்டிருக்கும்போது, வேறு ஒரு வழக்கில் குற்றவாளியாக நாங்கள் எப்படிச் சேர்க்க முடியும் என்று அந்த ஒட்டுமொத்தமாக 13 பேரும் உதவி ஆய்வாளர், ஆய்வாளர், காவலர்கள் உட்பட அத்தனை



பேரும் மறுத்தபோது, இரவோடு இரவாக 13 காவலர்களையும் மாற்றிவிட்டு, என்மீது பொய் வழக்குப் போட்ட அரசு, அ.தி.மு.க.வினுடைய அரசு, ஒன்று. இரண்டாவது, அந்தப் பொய் வழக்கைப் போட்டுவிட்டு, காவல் துறையினுடைய D.S.P. காவல் துறையினுடைய S.P.... (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர்கள் முடிக்கட்டும்.

**திரு. தி. வேல்முருகன்:** காவல் துறையினுடைய D.I.G., காவல் துறையினுடைய I.G., அத்தனை பேரும் வந்து, வேல்முருகனுக்கு இந்த வழக்கிலே சம்பந்தம் இல்லை என்று மறுத்தபோது, காவல் துறையினுடைய மாவட்டக் கண்காணிப்பாளராக இருந்த S.P., ராஜீவ் குமார் அவர்களை உடனடியாக மாற்றிவிட்டு, அ.தி.மு.க.வின் கைத்தடியாக இருந்த திரு. பிரேம்குமார் என்ற காவல் துறைக் கண்காணிப்பாளரைக் கொண்டு வந்து, என்மீது உண்மைக்கு மாறான கொலை வழக்கைப் போட்டதோடு மட்டுமல்லாமல், என் தம்பியின் திருமணம் நடந்து மூன்று தினங்கள்கூட ஆகவில்லை; திருமணம் நடந்து முடிவதற்குள்ளாகவே காவல் துறையைக் கொண்டு வந்து... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. தி. வேல்முருகன்:** என் வீடுகளைச் சோதனை செய்து, அநியாயம் செய்து, அக்கிரமம் செய்து, அந்த ஆட்சியாளர்கள் கைது செய்ய முற்பட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், முடிந்ததா உங்களுடைய பேச்சு?

**திரு. தி. வேல்முருகன்:** அதோடுமட்டுமல்ல, இடையிலே பேரம் பேசப்பட்டது. (குறுக்கீடு) இடையிலே பேரம் பேசப்பட்டது. வேல்முருகன்மீது போடப்பட்ட வழக்கைத் திரும்பப் பெற வேண்டும் என்றால், பாட்டாளி மக்கள் கட்சிக்குத் துரோகம் செய்துவிட்டு வநதால், இந்த வழக்கிலிருந்து உன்னை விடுவிக்கிறேன் என்று பேரம் பேசப்பட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதோடுமட்டுமல்ல, அந்த வழக்கிலே காவல் துறையிலே புகார் கொடுத்த நபர்களே அந்தப் புகாரை—mike கொடுக்கச் சொல்லுங்கள், Speaker, mike கொடுக்கச் சொல்லுங்கள். mike இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் புகாரைக் கொடுத்தவர், வேல்முருகனுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று ஒப்புதல் கொடுத்தார். ஒப்புதல் கொடுத்த உடனேயே இன்னொரு ஆய்வாளர், திட்டக்குடியில் இருக்கின்ற திரு. சுந்தரவடிவேலு என்கிற ஒரு Inspector of Police–ஐக் கொண்டு வந்து, இந்த வழக்கிலே வேல்முருகன்தான் கத்தியை எடுத்துக் கொண்டு வந்து முதலிலே வெட்டினார் என்ற பொய்ப் புகாரைப் பெற்று, அந்தப் புகார் பதிவு செய்யப்பட்டு, நான், என் தம்பி, என் அண்ணன், அத்தனை பேரும் கொலை வழக்கிலே சேர்க்கப்பட்டோம். நான் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், கடந்த கால ஆட்சியில்... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** காவல் துறை, அ.தி.மு.க.வினுடைய கைக்கூலியாக, ஜெயலலிதாவினுடைய கைக்கூலியாகத்தான் இருந்தது என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே உங்கள் உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள், அப்போதுதான் நான் அனுமதி அளிக்க முடியும். *(குறுக்கீடுகள்)* முதலில் உங்களுடைய உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள். எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். எல்லா உறுப்பினர்களையும் உட்காரச் சொல்லுங்கள். அப்போதுதான் நான் அனுமதி தருவேன். முதலிலே போய் உட்காரச் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. கோவிந்தசாமி, கொஞ்சம் பொறுங்கள். *(குறுக்கீடு)* சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை 28 நாட்கள் சிறையிலே வைத்ததற்குப் பிறகு, அந்தக் குற்றங்கள் அனைத்தையும் தூள் தூளாக்கிவிட்டு, விடுதலை பெற்றார்களே, அந்த 28 நாட்களுக்கு யார் பொறுப்பேற்றுக்கொள்கிறார்கள். அதோடுமட்டுமல்ல, பாட்டாளி மக்கள் கட்சி, இன்றைக்கு இங்கே வக்காலத்து வாங்கிப் பேசிக்கொண்டிருக்கிறார்களே, அவர்களுடைய தலைவர் என்ன சொன்னார் என்று சொன்னால், 'வேட்டியோடு போனால், கோவணத்தைக்கூட உருவிவிடுவார்களே' என்று சொன்னார்களே, அது எங்கே இருக்கிறது? *(குறுக்கீடு)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி, சொல்லுங்கள்.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள் சொல்லிக் கொடுத்து, தோழமைக் கட்சித் தலைவர்கள் பேசுவதாக ஒரு தவறான தகவலை இங்கே பதிவு செய்திருக்கிறார். ஒருவர் சொல்லிக் கொடுத்துப் பேச வேண்டிய அளவுக்கு நாங்கள் அறியாதவர்கள் அல்ல. சுயமாகச் சிந்தித்துப் பேசக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள் என்பதை நான் முதலில் இங்கே கவனப்படுத்துகிறேன்.

*முற்பகல் 10–35*

நேற்றும், இன்றும் காவல் துறை மானியக் கோரிக்கை இந்த அவையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தக் காவல் துறையினுடைய செயல்பாட்டில் இருக்கிற நிறை, குறைகளை எல்லாம் இங்கே எல்லாக் கட்சி உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இந்த அவைக்கு வந்து காவல் துறையினுடைய குறைகளைப் பற்றிச் சொல்வதற்குத் திராணி இல்லாமல், வெளியிலே ஜெயா டி.வி.யின்மூலமாக, காவல் துறை மூன்று மாதங்களிலே கெட்டுவிட்டதாக, ஒரு தகவலை *(கூச்சல்–குழப்பம்)* நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள், இன்றைக்குப் பத்திரிகைமூலமாக, ஜெயா டி.வி.மூலமாகச் செய்தியாக வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கடந்த கால ஆட்சியிலே, காவல் துறை எப்படியெல்லாம் அத்துமீறி நடப்பதற்கு ஆளுங்கட்சி காரணமாக இருந்தது என்பதை நேற்றையதினம் நான் இந்த அவையிலே பட்டியலிட்டுச் சொன்னேன். அவற்றையெல்லாம் நேரிலே வந்து கேட்டு விளக்கம் சொல்வதற்கு தயாராக இல்லாத முன்னாள் முதலமைச்சர், ஜெயா டி.வி.யிலே பேசிக்கொண்டிருப்பதை *(கூச்சல்–குழப்பம்)* மார்க்சிஸ்ட் கட்சி கண்டிக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடு)* வேல்முருகன். *(குறுக்கீடு)* என்ன செங்கோட்டையன், சொல்லுங்கள். *(குறுக்கீடு)* வேல்முருகன், உட்காருங்கள். *(குறுக்கீடு)* One minute, உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரமன்றத்தினுடைய உறுப்பினர் லீலாவதி

அவர்கள் கொல்லப்பட்டார்களே. அது எந்த ஆட்சியில் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்ட முடியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி கொறடா கேட்கிறார், கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கவுன்சிலர் கொல்லப்பட்டது எந்த ஆட்சியில் என்று கேட்கிறார். ஒரு உண்மையைச் சொல்கிறேன். அந்தக் கொலை நடந்தவுடனே, அன்றையதினமே, இன்றைய முதலமைச்சராக இருக்கக் கூடிய கலைஞர் அவர்கள், அவையிலே எழுந்து, அந்தக் கொலையிலே சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், இன்றே கைது செய்யப்படுவார்கள் என்று சொல்லி, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த செயலாளரையே கைது செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) நான்கு ஆண்டு காலம் bail-லிலேகூட வர முடியாதபடி ஒரு சூழ்நிலையை உருவாக்கிய தலைவர்தான் இன்றைய முதல்வர் கலைஞர் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அதுமாத்திரமல்ல, அந்தப் பிரச்சினையை எடுத்ததால் சொல்கின்றேன். அமைச்சர் வீராசாமி அவர்கள் சொன்னதைப்போல, அன்றைக்கே தி.மு.க.வைச் சேர்ந்த செயலாளர் கைது செயயப்பட்டார். அதுமாத்திரமல்ல, அந்த வழக்கில் அரசாங்க P.P. ஆஜராகக் கூடாது, எங்கள் கட்சியைச் சேர்ந்த P.P.தான் ஆஜராக வேண்டும் என்று C.P.M. கட்சியின் சார்பிலே கேட்கப்பட்டு, அதையும் இந்த அரசு ஒத்துக்கொண்டு, அவர்கள்தான் ஆஜரானார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன். (குறுக்கீடு) வேல்முருகன். (குறுக்கீடு)

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பார்த்து நான் ஒரே ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். என்னுடைய வழக்கில் உதவி ஆய்வாளர், 11 காவலர்கள், காவல் ஆய்வாளர், D.S.P., இன்ஸ்பெக்டர், அத்தனை பேரையும் மாற்றினார்கள். ராஜீவ்குமார் என்கிற ஐபிஎஸ். அதிகாரிக்குட் பணியிடம் தராமல், சென்னையிலே கொண்டு வந்து காத்திருப்போர் பட்டியலில் வைத்தார்கள். என்மீது கொலை வழக்குப் போட்டதற்கு



நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்காக, நான் கேட்கிறேன். அவர்கள் ஆண்டுகொண்டிருந்தபோது, கனிதா சம்பத் அவர்கள்மீது, வாசுகி முருகேசன்மீது கொலை வழக்கு (குறுக்கீடு) சரி, செல்வி முருகேசன்மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டதே, அந்தக் கொலை வழக்கில் துரிதமாக நடவடிக்கை எடுக்காத காவல் துறை அதிகாரிகளைக் காத்திருப்போர் பட்டியலிலே கடந்த கால அரசு வைத்திருந்தார்களா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, அந்தக் காவல் துறை உயர் அதிகாரிகளை மாற்றி வைத்துவிட்டு, 164 என்ற statement-ஐ நீதிமன்றத்திலே வாங்க வேண்டுமென்று, அந்தக் கொலை வழக்கில் புகார் கொடுத்த நபரைக் கொண்டு வந்து மிரட்டி, உருட்டி, அவர்கள் அந்த ஒப்புதலைப் பெற்று நீதிமன்றத்திலே தாக்கல் செய்தார்கள். ஒப்புதல் கொடுத்த அதே முதல் நாளில் அவர், வேல்முருகனுக்கும், இந்தக் கொலை வழக்கிற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்கிறார். அந்த நகல்களைக் கிழித்தெறிந்து, அந்த சி.டி. பைல்களையே நீதிமன்றம் கேட்கின்றபோது, தர மறுத்தபோது, சென்னை உயர் நீதிமன்றம் கடுமையான கண்டனத்தை, கடந்த கால அ.தி.மு.வினுடைய ஆட்சியில் காவல் துறையைக் கையாண்ட முதலமைச்சரைக் கண்டித்திருக்கிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இரண்டாவது சம்பவம், இந்த வழக்கில் வேல்முருகனுக்காக உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, (குறுக்கீடு) ஒரே நிமிடம், பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். போதும், உட்காருங்கள். மணி. (குறுக்கீடு) கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லீலாவதி கொலை குறித்து நம்முடைய உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் இங்கே கேட்டார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சின்னசாமி sound நன்றாக இருக்கிறது.

**திரு. சி. கோவிந்தசாமி:** நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குரிய விளக்கத்தைத் தந்தார்கள். அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், நான் கேட்க விரும்புவது, அண்ணா தி.மு.க. ஆட்சியில் திருப்பூரிலே இடுவாய் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்த இரத்தினசாமியை அங்கே கொடூரமான முறையிலே கொலை

செய்து, அவரை மரத்திலே தொங்க விட்டு, உடல் முழுவதும் கத்தியால் கீறி கொடூரமாகக் கொலை செய்தார்கள். இவர்களுடைய அன்றைய காவல் துறைதான் 8 பேரைக் கைது செய்தது. அதில் 6 பேர் அண்ணா தி.மு.க.–வைச் சார்ந்தவர்கள். ஆனால், லீலாவதி கொலையிலே தி.மு.க.–வைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவதற்குரிய நடவடிக்கை எடுத்தவர் முதல்வர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தோழர் இரத்தினசாமியினுடைய கொலையில் 6 பேர் அ.தி.மு.க.–வைச் சார்ந்தவர்கள் என்று தெரிந்து, அவர்களைக் காப்பாற்றுவதற்காக அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினரும், இந்த அவையிலே இருக்கிற அன்றைக்கு அமைச்சராக இருந்தவர்களும் குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை, அண்ணா தி.மு.க.–வுக்கும், தி.மு.க.–வுக்கும் இருக்கிற வேறுபாட்டை நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மணி 10–40. (கூச்சல்–குழப்பம்) நேற்றையதினம் தாங்கள் இங்கே தெரிவித்ததைப்போல, 11–00 மணிக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையில் பதில் சொல்ல வேண்டும். இப்பொழுது திரு. கோ.க. மணி அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள், பிறகு திரு. ஞானசேகரன் பேசவேண்டும், பிறகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் பேச வேண்டும், அனைவரையும் நீங்கள் பேச அனுமதிப்பீர்களேயானால் இன்று மாலைகூட இந்த விவாதம் முடிவுறாது. எனவே, உறுப்பினர்களை மட்டும் பேசவிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பதில் சொல்வதற்குத் தாங்கள் அனுமதி தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, பேசுங்கள். (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள், திரு. செங்கோட்டையன். (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Time இல்லை, தயவுசெய்து உட்காருங்கள்.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது காவல் துறை மானியக் கோரிக்கை. நான் சம்பந்தம் இல்லாமல் பேசவில்லை. காவல் துறையில் நடந்த பல்வேறு முறைகேடுகளை, தவறுகளைச் சுட்டிக்காட்டி... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மணி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** காவல் துறை தன்னாட்சி பெற்ற அதிகாரம் கொண்ட அமைப்பாகச் செயல்பட வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே தவிர, வேறு அல்ல. (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்)

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, ஆளுங்கட்சி வரிசையிலே சொல்லிக் கொடுத்து நாங்கள் பேசவில்லை. (கூச்சல்–குழப்பம்) ஆதாரத்தோடு பேசுகிறோம், முகாந்தரத்தோடு பேசுகிறோம் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னொன்றைச் சொல்லுகிறேன், கடந்த ஆட்சிக் காலத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, வழக்கு எவ்வித நடவடிக்கையும் இல்லாமல் இருந்து, இப்பொழுது அந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டு, எவ்வளவு மோசடி என்பது நாட்டுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டிருக்கிறது என்பதை சில ஆதாரங்களோடு—தயவுசெய்து பேரவைத் தலைவர் அவர்களே, இது காவல் துறை பிரச்சினை, முக்கியமான பிரச்சினை; சொன்னால்தான் நாட்டுக்குத் தெரியும், மறைக்கக் கூடாது. அதனால் சொல்வதற்குக் கொஞ்சம் அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் சொல்லி முடியுங்கள், நிறைய உறுப்பினர்கள் பேசவேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, United India காப்பீட்டுக் கழகம் சார்பில் கடந்த 29–11–2002 அன்று வாகன இழப்பீட்டுத் தொகை பெறுவதில் மோசடி நடந்துள்ளதாக சேலத்தைச் சேர்ந்த திரு. மாரியப்பன் என்பவர் நாமக்கல் காவல் துறைக் கண்காணிப்பாளரிடத்திலே ஒரு புகார் கொடுத்தார் அந்தப் புகாரின்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதைப் பற்றிக் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் 8–4–2003 அன்று திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இங்கே கிளப்பினார்கள். C.B.,C.I.D. விசாரணை தேவை என்று சொன்னார். நடவடிக்கை இல்லை என்றார்.

நடவடிக்கை எடுப்பதாகச் சட்டமன்றத்திலே முன்னாள முதலமைச்சர் வாக்குறுதி அளித்தார். வாக்குறுதி அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினாலே, அவர்கள் மேல்முறையீடு செய்தனர். மீண்டும் நீதிமன்றத்திற்குச் சென்று, முதலமைச்சர் சொன்ன வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, உயர் நீதிமன்றம் C.B.,C.I.D. விசாரிக்க உத்தரவிட வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதை ஏற்றுக்கொண்ட அன்றைய நீதியரசர் மாண்புமிகு பாலசுப்பிரமணியம் அவர்கள், 29–10–2003–ல் C.B.,C.I.D. முறையாக விசாரணை நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். அந்த உத்தரவுக்குப் பிறகு 1,061 வழக்குகளை, பல்வேறு காப்பீட்டுக் கழகங்கள் கொடுத்த அந்த ஆவணங்களை எல்லாம் C.B.,C.I.D. விசாரித்து. இந்த C.B.,C.I.D. விசாரணை, இப்பொழுது இதிலே ஈடுபட்டிருக்கிற அன்றைய D.I.G.–ஆக—காவல் துறைத் துணைத் தலைவராக இருந்த திரு. முகமது அலி அவர்கள் மேற்பார்வையிலே நடத்தப்பட்டிருக்கிறது, இது சரியாக விசாரிக்கப்படவில்லை. ஆகவே, இந்த விசாரணையில் உயர் நீதிமன்றத்திலே எங்களுக்கு நியாயம் வேண்டும் என்று அவர்கள் முறையிட்டார்கள். அதற்குப் பிறகு மேலும் இதில் விசாரணை முடிக்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையைச் சீக்கிரம் முடியுங்கள். 50 நிமிடங்கள் ஆகப் போகின்றன. பேசி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதிலே C.B.,C.I.D. நடவடிக்கை எடுக்கவில்லை. உசச நீதிமன்றத்திற்குப் போனார்கள் அங்கே உச்ச நீதிமன்ற நீதிபதி சொன்னார். தமிழ்நாடு C.B.,C.I.D. சரியான நடவடிக்கை எடுக்காத காரணத்தால் இதில் C.B.I. விசாரணைக்கு உத்தரவிடப்படுகிறது என்று சொன்னார். அது மாதிரி 4, 5 வழக்குகள். நிறைய வழக்குகள் கையிலே வைத்திருக்கிறேன். நேரம் இல்லை. F.I.R. number உள்பட ஆதாரத்தோடு கொண்டு வந்திருக்கிறேன். நிறைய இருக்கின்றன. இப்படி வழக்குகள் எல்லாம் C.B.,C.I.D.–ஆல் விசாரிக்கப்படவில்லை, தமிழ்நாடு காவல் துறையால் விசாரிக்கப்படவில்லை, எல்லா வழக்குகளும் C.B.I.–க்குப் போய்க்கொண்டிருக்கின்றன என்று சொன்னால், தமிழ்நாடு காவல் துறை எந்த நிலையில் செயல்பட்டது; அதற்குப் பொறுப்பேற்றவர்கள் காவல் துறையை எப்படி ஏவல் துறையாகக் கையிலே வைத்திருந்தார்கள் என்பதற்கு இதுதான் சான்று. இன்னும் நிறையச் சான்றுகள் சொல்ல முடியும். ஆகவே, கடந்த காலத்தில் தமிழ்நாடு காவல் துறைக்கு மிகப் பெரிய களங்கமும், தலைக்குனிவும் ஏற்பட்டது. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியில் காவல் துறை



தன்னாட்சி பெற்ற அதிகார அமைப்பாகச் செயல்பட வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, நேரம் ஆகிவிட்டது, உரையை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையிலே இன்னும் நல்ல அதிகாரிகள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன். காவல் துறையில் சட்டத்திற்குப் புறம்பாக, முறைகேடான வழக்குப் பதிவு செய்யக்கூடிய அதிகாரிகள், தவறு செய்யக்கூடிய அதிகாரிகள் யாராக இருந்தாலும், அவர்களைத் திருத்த வேண்டும். திருந்தவில்லையென்று சொன்னால் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே வேளையில், காவல் துறை மீண்டும் புத்துயிர் பெறுவதற்கு, வேகமாக, முறையாக, சட்டத்திற்குட்பட்டுச் செயல்படுவதற்கு, 'என்னுடைய பணியில் கடமை தவறாமல் செயலாற்றுவேன்; உண்மையாக இருப்பேன்; நேர்மையுடன் பணியாற்றுவேன்' என்று காவல் துறையில் இருக்கிற அத்தனை பேரும், ஆண்டுக்கு ஒரு நாள் உறுதிமொழி எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில், அப்படி உறுதிமொழி எடுத்துக்கொள்ளக்கூடிய ஒரு நாளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் இங்கே நான் வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, காவலர்கள் எண்ணிக்கை சற்றுக் குறைவாக இருக்கிறது. இப்போது தீவிரவாதம், வன்முறை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. மக்கட்தொகை பெருகியிருக்கிறது; குற்றங்கள் அதிகமாகியிருக்கின்றன. நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு 129 காவலர்கள் என்று சொல்கிறார்கள்; அதாவது, 100 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக்கு 61.1 காவலர்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், பஞ்சாப் மாநிலத்தில் 100 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக்கு 109.6 காவலர்கள் இருக்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் கவனத்திலே கொண்டு, மக்கள் தொகைக்கேற்ப, பெருகி வரும் குற்றங்களுக்கேற்ப, தமிழகத்தினுடைய பரப்பளவுக்கேற்ப காவலர்களின் எண்ணிக்கையைக் கூடுதலாக்க வேண்டும். அதைக் கணக்கிட்டுப் பார்க்கின்ற நேரத்தில், இன்னும் 35,000 காவலர்கள் தேர்வு செய்யப்பட

வேண்டும். அதை நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆழமாகப் போக விரும்பவில்லை. வீரப்பன் பிரச்சினையில், அதுவும் முற்றுப்புள்ளி வைத்ததாகச் சொல்லப்பட்டு, பதவி உயர்வு வழங்கப்பட்டது. அதிலேகூட நான் ஆழமாகச் செல்ல விரும்பவில்லை. ஆனால், அந்தப் பணியிலே இருந்தவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்க வேண்டும். வீரப்பன் தேடுதல் என்ற பெயரில், ஒரு நாள்கூட பணிக்குச் செல்லாதவர்கள், சென்னையிலே, மற்ற இடங்களிலே பணியாற்றிக் கொண்டிருந்தவர்களுக்கு, எப்படி அதிலே பதவி உயர்வு வழங்கப்பட்டது? அது யார், யார் என்று என்னால் சொல்ல முடியும்.

அதே வேளையில், சிறப்பு அதிரடிப் படைக் காவல் துறையிலே, வீரப்பன் பிரச்சினையிலே ஈடுபட்டவர்களுக்கு, பல பேர்களுக்கு, காவல் துறைத் தலைவராக இருந்த, அதன் கூடுதல் இயக்குநராக இருந்த மதிப்பிற்குரிய திரு. காளிமுத்து உட்பட, காவலர் வரையிலே நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்குப் பதவி உயர்வும் இல்லை; வெகுமதியும் இல்லை; வீட்டுமனையும் வழங்கப்படவில்லை. இதற்கு என்ன காரணம்? ஏனென்று சொன்னால், காவல் துறையிலே அன்றைய ஆட்சிக் காலத்தில், வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற, பாகுபாட்டுடன் அந்த நிலை எடுக்கப்பட்டது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, நீங்கள் தீர விசாரிக்க வேண்டும். இதிலே நியாயம் வழங்க வேண்டும். விடுபட்டவர்களுக்கு மீண்டும் பதவி உயர்வும், வெகுமதியும் வழங்குவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. வீரப்பன் பிரச்சினையில் அங்கேயுள்ள மக்கள் எவ்வளவு கொடுமைப்படுத்தப்பட்டார்கள் என்பதை நான் நேற்றுகூட கோடிட்டுக் காட்டினேன். அதிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு சதாசிவம் குழுவின் பரிந்துரைப்படி இன்னும் உதவிகள் வழங்கப்படவில்லை. அதிலேகூட ஒரு வேண்டுகோள். சதாசிவம் கமிஷன் வந்த நேரத்தில் அப்பாவி மக்கள் பயந்து ஓடினார்கள். ஏனென்றால், அந்த நேரத்திலே—நாங்கள் எல்லாம் அந்தப் பகுதியைச் சார்ந்தவர்கள்—இலங்கையில் நடந்த கொடுமையைவிட மோசமான கொடூரங்கள் அங்கே நடந்தன. காவல் துறையாலே—நான் காவல் துறையைக் கொச்சைப்படுத்தவில்லை—சிலர் பெண்களையெல்லாம் கற்பழித்தார்கள், நூதனமாகப் பயன்படுத்தினார்கள்; எந்த முறையைக் கையாண்டார்கள் என்று சொன்னால், அது இன்னும் ரொம்ப வேதனையாக இருக்கும். தலைக்குனிவைத்தான் ஏற்படுத்தும். அப்படிப்பட்ட கொடூரச் சம்பவங்கள் நடந்தன. அரசியல் கட்சிகள் தலையிட்டன. மனித உரிமை அமைப்புகள் தலையிட்டன. அவர்கள் எல்லாம்கூட காவல் துறையாலே தாக்கப்பட்டார்கள். அவ்வளவு பதற்றமான நிலை அந்தப் பகுதியிலே இருந்த காரணத்தால், அந்த சதாசிவம் விசாரணைக் குழுவிற்குச் சில பேர் செல்லவில்லை; விசாரணைக்கு முன் ஆஜராகவில்லை. ஆகவே, இப்பொழுது நான் கேட்கிறேன். நான் வேண்டுகோள் வைக்க விரும்புவது, அந்த விசாரணைக் குழுவின் முன் ஆஜராகாதவர்களுக்கு, பாதிக்கப்பட்டக் குடும்பங்களுக்கு அல்லது உயிரிழந்த குடும்பங்களுக்கு நிவாரணம் வேண்டும்.



*முற்பகல் 10–50*

இரண்டாவது, அதிலே சில பேர் குழுவிலே இடம் பெற்று விசாரிக்கப்படவில்லை. மீண்டும் அவர்கள் விசாரிக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் விசாரணை என்ற பெயரில், அவர்கள் பெயர்கள் விடுபட்டிருக்கின்றன. அவர்களையும் சேர்த்து விசாரித்து, அவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். ஆகவே, இந்த நிலையை மேற்கொள்ள வேண்டுமென்று நான் அரசையும், முதலமைச்சர் அவர்களையும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனது தொகுதிக் கோரிக்கை. பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் மிக முக்கியமான நகரம். அங்கே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் நிலையக் கட்டடம் வெள்ளைக்காரன் காலத்திலே கட்டப்பட்ட சின்ன இடம். பழுதான நிலையிலேதான் இருக்கிறது. அதற்கு ஒரு காவல் நிலையக் கட்டடம் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொளத்தூர் பகுதியில், பரந்த பகுதியில் தீயணைப்பு நிலையம் இல்லாமல் இருக்கிறது. அதற்கு ஒரு தீயணைப்பு நிலையம் அவசியம் வேண்டுமென்று கேட்டு, அதே நேரத்தில் முக்கியமான பணியில் ஈடுபட்டிருக்கிற காவல் துறைக்கு (குறுக்கீடு) நான் தொகுதிக் கோரிக்கையை முடித்துவிடுகிறேன். அவ்வளவுதான், வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள். குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் தன்னுடைய கோரிக்கையை நேரடியாக முதலமைச்சருக்கு அனுப்பலாம். அஞ்சலிலேகூட அனுப்பலாம். அவை கவனிக்கப்படும். அவையில் முதலமைச்சர் பேச வேண்டிய நேரம் 11–00 மணி என்று அறிவித்து, 12–00 மணிக்குக்கூட பேசக்கூடிய வாய்ப்பு வராமல் இருக்குமானால், அவர் விளக்கக்கூடிய கருத்துகளை விளக்க வாய்ப்பு இருக்காது. ஆகவே, முடித்துக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதிக் கோரிக்கைக்குக்கூட போகவில்லை. இப்போது காவல் துறைப் பணியிலே ஈடுபட்டிருக்கிறவர்களுடைய பணித் தன்மையை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் 10 மணி நேரம், 12 மணி நேரம், 24 மணி நேரம்கூட பணியாற்றக்கூடிய நிலை இருக்கிறது, காவலர்களிலேயிருந்து எல்லா நிலைகளிலேயும் இருக்கிற அதிகாரிகள். ஆகவே காவலர்களுக்கு, காவல் துறையிலே இருக்கிற அனைவருக்கும், 8 மணி நேரம் என்ற பணி வரம்பைக் கட்டாயம் கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், காவல் துறையிலே ஈடுபட்டிருக்கிற அனைவருக்கும், எல்லா நிலைகளிலேயும், காவலர்களிலிருந்து எல்லா நிலைகளிலேயும் இருக்கிறவர்களுக்கு (குறுக்கீடு) சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன், பதவி உயர்வு என்பது எட்டாக் கனியாக நீண்ட காலமாக இருந்து கொண்டிருக்கிறது. காவலர்களிலிருந்து தலைமைக் காவலர்கள், அப்புறம் உதவி ஆய்வாளர், ஆய்வாளர், துணைக் கண்காணிப்பாளர், கண்காணிப்பாளர் என்று பதவி உயர்வுக்குக் காலக்கெடுவை நிர்ணயித்து, குறுகிய காலத்தில் ஏழு ஆண்டுகள், எட்டு ஆண்டுகள், அதிகபட்சம் 10 ஆண்டுகளுக்கு மேல் போகாமல், அவர்களுக்கு எல்லா நிலைகளிலும் காலக்கெடுவிற்குள் பதவி உயர்வு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்களும் காவல் துறையில் இருக்கிறார்கள், பெண்களும் இருக்கிறார்கள். பெண் பணியாளர்கள், காவல் துறையில் இருப்பவர்கள் நின்றுகொண்டே இருக்கிறார்கள், நாம்கூடப் பார்க்கிறோம். ஆகவே...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, ஒரு மணி 10 நிமிடம் ஆகியிருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள், உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, பெண் காவலர், ஆய்வாளர் பணியிடங்கள் இன்னும் நிறைய காலி இருக்கின்றன. அவற்றை நிரப்புவதற்குப் பதவி உயர்வு வழங்க வேண்டும். அதைப்போல, காவல் துறையிலே பணியாற்றக்கூடியவர்கள், பேரவைத் தலைவர் அவர்களே, 1995–லே தேர்வு செய்யப்பட்டவர்கள் 1,198 பேர். அதிலே 1,100 பேருக்கு உதவி ஆய்வாளர்களாக தாலுக்கா காவல் நிலையங்களில் பணி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், 98 பேருக்கு இதுவரையிலே வழங்கப்படாமல் இருக்கின்றது. அதிலும் சில பேர் 40 வயதைக் கடக்க இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தலைமைக் காவலர் பதவியிலிருந்து சார்பு ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. அந்தப் பதவி உயர்வு வழங்கக்கூடிய நேரத்தில் தேர்வு என்று சொல்லப்படுகிறது. தேர்விலே கடந்த காலத்தில் என்ன முறைகேடுகள் ஏற்பட்டன என்பதையெல்லாம் நாம் உணர்ந்தோம். குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் தலைமைக் காவலர்களாகப் பணியாற்றியிருந்தால், அல்லது மொத்தப் பணியில் 25 ஆண்டு காலம் இருந்தால், அவர்களுக்கு சார்பு ஆய்வாளர் பதவி உயர்வு வழங்கலாம் என்ற நிலையை அரசு அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறையப் பேர் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) Time, அதாவது (குறுக்கீடு) மற்றவர்கள் ஏன் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) மற்றவர்கள் ஏன் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) மணி, முதல்வர் பதிலுரை அளிக்க வேண்டியிருக்கிறது. நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல அவர்களுக்கு இன்னும் சலவைப் படி, சீருடை மற்றும் பெல்ட், தொப்பி வாங்குவதற்கெல்லாம்கூட நீங்கள் காசாகக் கொடுத்துவிடலாம். சின்னத் தலைக்கு பெரிய தொப்பியாகக் கொடுக்கிறார்கள். பெரிய காலுக்கு சிறிய ஷூ கொடுக்கிறார்கள். இப்படி முரண்பாடு இருக்கிறது. அதற்கெலலாம் அவர்களுக்குக் காசாகக் கொடுத்துவிடலாம். மானிய விலையிலே உணவுப் பொருள் வழங்குகிறார்கள். அதைக்கூட பணமாகக் கொடுத்துவிடலாம். அல்லது தரமான பொருளாகக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மிக முக்கியமானது. தண்டனை பெற்று நீண்ட காலமாக சிறையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்னாலே தி.மு.க. ஆட்சிக் காலத்தில். அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில், காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில் எல்லாம்கூட நீண்ட காலம் இருந்தவர்களுக்கு, கருணை அடிப்படையில், நன்னடத்தையின் அடிப்படையில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலே அது நடைபெறவில்லை. ஆகவே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அண்ணா பிறந்த நாளில் நன்னடத்தை உள்ளவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வைக்க விரும்புகிறேன்.

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள், திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். அடுத்து, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை. மதுவிலக்கு ஆயத்தீர்வையிலே பார்த்தீர்கள் என்றால், அரசு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இதையெல்லாம் சொல்ல வேண்டுமென்றால், அப்படியே எழுதிக் கொடுத்துவிடுங்கள், நேரமாகிவிட்டது. (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், ஒரு நிமிடத்திலே உரையை முடியுங்கள். சீக்கிரம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பேசிக்கொண்டிருக்கும்போது, ஏன் குறுக்கே பேசுகிறீர்கள்?



**திரு. ஜி.கே. மணி:** மதுக் கடைகள் எல்லாம் திறந்திருப்பதற்குக் காரணம், அரசுக்கு வருவாய் வேண்டுமென்பதற்காக. அரசுக்கு வருவாய் எதற்கு? மனித வளத்தை மேம்படுத்துவதற்கு; மனிதனை வாழ வைப்பதற்காக. ஆனால், மதுக் கடையைத் திறந்து, ஏழைகளையெல்லாம் குடிக்கச் செய்து, குழந்தைகளையெல்லாம், குடும்பங்களையெல்லாம் சீரழித்துவிட்டு, அப்படி எதற்கு அரசுக்கு வருமானம்? ஆகவே. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை. அரசைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அர்சைக் கேட்டுக்கொள்கிறேன். தி.மு.க.–வின் கடந்த ஆட்சிக் காலத்தில், தி.மு.க. ஆட்சியில் இருந்த நேரத்தில், குறைவான எண்ணிக்கையில் கடைகள் இருந்தன. கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில், அது இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டது. அதற்குப் பிறகு, தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்யப்பட்ட மது வகைகள், ஒரு குறிப்பிட்ட நேரத்தில், quarter bottle, half bottle–க்கு என்று சொல்லி, இரண்டரை ரூபாய், ஐந்து ரூபாய், எட்டு ரூபாய் என்று விலையைத் திடீரென்று உயர்த்தினார்கள். அப்படி உயர்த்தியதை நான் இந்த மன்றத்திலே பட்டியலிட்டுச் சொன்னேன். ஒரு நாளைக்கு, எத்தனை ஆயிரம் கோடி ரூபாய், ஒரு ஆண்டிற்கு, ஒரு மாதத்திற்கு என்று பட்டியல் போட்டுச் சொன்னேன். எதற்காக உயர்த்தப்பட்டது, எதற்காகக் கூடுதலாகக் கடைகளைத் திறந்தார்கள் என்பதெல்லாம் நாட்டிற்குத் தெரியும். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, கிராமப்புறங்களிலே இருக்கிற கடைகளை, கூடுதலாகத் திறந்த கடைகளை நீங்கள் மூட வேண்டும். மூடுவதனாலே மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நல்ல தீர்வு ஏற்படும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையிலே, ரொம்பக் குறைந்த சம்பளத்திலே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். எல்லோரையும்விட அவர்களுக்குக் குறைந்த சம்பளம். அவர்களுக்குச் சம்பள உயர்வும், பணி நிரந்தரமும், பதவி உயர்வும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒட்டுமொத்தமாகக் காவல் துறையிலே இருப்பவர்களுக்கு தீயணைப்புத் துறையிலே பணியாற்றக்கூடியவர்களுக்கு மற்ற துறைகளைக் காட்டிலும் பணித் தன்மை கடினமானது, சம்பளம் என்பது குறைவாக இருக்கிறது. ஆகவே. இதையெல்லாம் சீர் செய்வதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூன்றாவது காவல் ஆணையத்தை நியமித்திருக்கிறார்கள்–Police Commission. அதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனதார வரவேற்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில் காவல் துறையினுடைய பிரச்சினைகளை முழுமையாக ஆராய்ந்து, காவல்

முறையினருக்கு ஊதிய உயர்வு, பதவி உயர்வு முதலான அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 22-உள் துறை-காவல், கோரிக்கை எண் 23-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், கோரிக்கை எண் 37-மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆகியவற்றின் சார்பாக நான் பேசுகின்ற வாய்ப்பினை எனக்கு உருவாக்கித் தந்த தங்களுக்கும், எங்களுடைய கட்சியினுடைய தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"குடி கெடுத்தது, குடி ஒழிந்தது;
அடிதடி சண்டை அதுவும் குறைந்தது;
ஆணும், பெண்ணும் புத்தி அறிந்தது;
நம்ம நாட்டிலே, அக்டோபர் இரண்டுக்கு மேலே"

என்பது 'நல்ல தம்பி' படத்திலே கலைவாணர் திரு. என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் பாடிய பாடல். அன்றைக்கு அது சிறப்பாக இருந்தாலும்கூட, இன்றைக்கு அது நம்முடைய நாட்டிலே இரத்து செய்யப்பட்டிருக்கின்றது. அதற்குக் காரணம், நலப் பணிகளைச் செய்வதற்கு நமக்கு வருமானம் போதவில்லை என்கின்ற காரணத்தினாலே, இன்றைக்கு மதுவிலக்கை நாம் இரத்து செய்திருக்கின்றோம்.

ஒரு சாதாரண மனிதன், சராசரி குடிமகன் ஒரு ஜவுளிக் கடைக்குச் சென்றால், பாக்கெட்டிலே எவ்வளவு பணம் இருக்கிறது என்று பார்ப்பார்கள். அடுத்தாற்போல, அது தன்னுடைய பட்ஜெட்டைத் தாண்டக் கூடாது என்று நினைப்பார்கள். நகைக் கடைக்குப் போக வேண்டுமென்று சொன்னால்கூட, கொஞ்சம் கோபமாகத்தான் போவார்கள், தன்னுடைய அந்த Estimate-க்கு மேலே போகக் கூடாது என்று. வீட்டிற்குச் சாமான்கள் வாங்க வேண்டுமென்றால்கூட, கொஞ்சம் கஷ்டத்தோடுதான், 'அது வேண்டாம், இதைக் கம்மி பண்ணு, அதைக் கம்மி பண்ணு' என்று சொல்வார்கள். ஆனால், ஒரே ஒரு கடைக்கு மட்டும் சிரித்துக்கொண்டே போவான்; சந்தோஷமாகப் போவான்



என்று சொன்னால், அது மதுக் கடைதான் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

முற்பகல் 11-00

அதேபோல, கள்ளச் சாராயம் விற்கின்றவர்களுக்கு, காவல் துறை மானியத்திலே குறிப்பிட்டிருக்கிறீர்கள்; அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்க வேண்டுமென்று. இன்றைக்குக் கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றவர்களின் மறுவாழ்வுக்காக 2.5 கோடி ரூபாயை நீங்கள் ஒதுக்கீடு செய்திருக்கின்றீர்கள். அந்தத் தொகை போதுமா என்பது மட்டுமல்ல; அவர்களுக்கு எந்த வகையான மறுவாழ்வினைக் கொடுக்க இருக்கின்றீர்கள்? அவர்களை எந்தத் தொழிலை செய்யச் சொல்லப் போகிறீர்கள்? அவர்களுக்கு அதற்குரிய திறனை வளர்ப்பதற்குரிய பயிற்சிகள் கொடுக்கப்படுமா? அந்தப் பயிற்சிக் காலங்கள் வரையிலும், அவர்கள் குடும்பத்தை நடத்துவதற்கான வழிவகைகளை, Stipend போன்ற ஏதாவது ஒன்றை உருவாக்க இருக்கிறீர்களா என்பவை எல்லாம் இல்லாமல், சாதாரணமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதனுடைய விவரத்தை நான் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, காவல் துறையைப் பொறுத்தமட்டிலும் ஒன்று. மேல்மலையனூர் என்கின்ற ஓர் ஊரிலே, அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில் இருக்கிறது. அங்கேயிருக்கின்ற அந்த அம்மனுக்கு, மாதா மாதம் திருவிழா நடந்துகொண்டிருக்கின்றது. அமாவாசையிலே அங்கே திருவிழா நடக்கிறது. கிட்டத்தட்ட 2 இலட்சம் பேருக்கு மேலே அங்கே வருகை தருகிறார்கள். அந்த இரண்டு இலட்சம் பேரும்—இரவு 12-00 மணிக்குத்தான் அங்கே அம்மனுக்கு ஊஞ்சல்; அந்த ஊஞ்சல் தாலாட்டின்போது, எல்லோருமாகச் சேர்ந்து பாட்டுப் பாடி, தேங்காய் உடைத்து, கற்பூரம் காட்டி, அந்த ஒரே நேரத்திலே, 5, 10 நிமிடங்களிலே, அந்த விழாவை முடித்துவிட்டு, எல்லோரும் அங்கேயிருந்து புறப்படுகின்றபோது, அங்கே நெரிசல் அதிகமாக ஏற்படுகின்ற காரணத்தினாலே, நிறையத் திருட்டுகள் நடைபெறுகின்றன. அங்கு போகின்ற பெண்களுடைய நகைகள் எல்லாம் பறிபோகின்றன. அதே நேரத்திலே, எல்லோருடைய கார்களையும் ஒட்டுமொத்தமாக எடுக்கின்றபோது, அங்கே traffic பிரச்சினை நிரம்ப இருக்கிறது. ஆகவே, அதுபோன்ற விழாக்கள் நடைபெறுகின்ற இடங்களில் எல்லாம், Police-னுடைய கவனம் அதிகரிக்கப்பட வேண்டும். ஒரு சின்ன Police Station அங்கேயிருக்கின்றது. அந்தச் சின்ன Police Station-ல் இருப்பவர்களால் அங்கு வருகிற அவ்வளவு பெரிய கூட்டத்தைச் சமாளிக்க

முடியவில்லை. பிரத்யேகமாக, நாம் அங்கே காவலர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். அதுபோன்று அந்தக் காவல் நிலையத்தை, நல்ல ஒரு பெரிய காவல் நிலையமாக உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கள்ளச் சாராயத்தைத் தடுக்கும் காவலர்களுக்கு, காந்தியடிகள் காவலர் விருது என்ற பெயராலே விருது; 10 ஆயிரம் ரூபாய் என்றிருந்ததை, இன்றைக்கு 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கின்றீர்கள். அதை நான் உண்மையிலேயே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். காமராஜருடைய பிறந்த நாளை, கல்வி வளர்ச்சி நாளாக நாடெங்கும் கொண்டாடுவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்தீர்கள். காந்தியடிகள் பெயரால் காவலர்களுக்கு விருதுகள்; முத்துலட்சுமி அம்மையார் பெயராலே திருமண நிதியுதவி; நாங்கள் ஆட்சியில் இருந்தால்கூட, இந்த அளவிற்கு, தேசிய தலைவர்களுடைய பெயர்களைப் பயன்படுத்தியிருப்போமா என்பது சந்தேகத்திற்குரியதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், எங்களுடைய தலைவர்களுடைய பெயர்களை நாங்களே வைத்தால், 'பாருங்கள், அவர்கள் ஆட்சிக்கு வந்து, அவர்களுடைய தலைவர்களுடைய பெயர்களையே வைத்துக்கொண்டார்கள்' என்று சொல்லக்கூடிய அந்த வார்த்தையிலேயிருந்து நாங்கள் தப்பித்துக்கொள்ளச் செய்ததற்காக—நாங்கள் வைக்காமல் விட்டுப் போனாலும் போகலாம். ஆனாலும், தலைவர் கலைஞர் அவர்கள், எங்கள் தலைவர்களையெல்லாம் கௌரவப்படுத்துகின்ற விதமாக, ஒவ்வொரு பரிசாக அளித்து வருவதை நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

அதேபோல, வன்முறைத் தடுப்புக்கென்று ஒரே வரியிலே சொல்லியிருக்கிறீர்கள், வன்முறைத் தடுப்பு என்கின்ற ஒரு சட்டம் அமலாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது என்று. 1985–லே ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். 1985–லே கொண்டு வந்த அந்தச் சட்டம், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தீண்டத்தகாதவர் என்ற அந்த வார்த்தையே இருக்கக் கூடாது என்று. ஆனால், 1988–லே ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். மன்னிக்க வேண்டும்; போதைப் பொருள்கள் சம்பந்தமாக 1985–லே ஒரு சட்டமும், 1988–லே ஒரு சட்டமும் கொண்டு வந்தார்கள். 1985–லே கொண்டு வந்த அந்தச் சட்டம், அவர்களுக்கு எந்தக் காலத்திலேயும் ஜாமீன் கொடுக்கக் கூடாது என்பதுதான். ஆனால், 1988–லே கொண்டு வந்த சட்டம் என்னவென்று சொன்னால், அவர்களுக்கு ஓராண்டு, இரண்டாண்டு காலம்,



அவர்கள் எந்தளவிற்கு போதைப் பொருட்களைக் கடத்தினார்கள் என்பதைப் பொறுத்துத் தண்டிக்கலாம் என்கின்ற ஒரு சலுகையான சட்டம் கொண்டு வரப்பட்டது. நான் இன்றைக்குக் கேட்க விரும்புகின்றேன். தடை செய்யப்பட்ட பான்பராக் என்று சொல்லக்கூடிய போதை தரக்கூடிய, மன மயக்கத்தை உண்டாக்கக்கூடிய, அந்தப் பொருட்கள் இன்றைக்கும், ஹோட்டல்களுடைய வாயில்களிலே. பான்பராக் கடையை வைத்துக்கொண்டு, அதை விற்கிறார்கள்; இரகசியமாக விற்கிறார்கள்; 120 என்று சொல்கிறார்கள். அந்த 120 என்றால் என்னவென்று நான் கேட்டேன். அதில் மயக்கம் கொஞ்சம் கூட இருக்கும் என்று சொல்கிறார்கள். அதுபோன்றவற்றை எல்லாம் அரசாங்கம் தடை செய்வதற்கு வழிவகைகளை எடுத்திருக்கின்றதா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 11–05

காவல் துறையினர் உற்ற நண்பனாக, சமுதாயத்தில் நலிந்த பிரிவினர், அடித்தட்டு மக்கள், சாதாரண சாமானியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, நடக்க வேண்டும் என்ற அரசினுடைய நல்லெண்ணத்தை நான் பாராட்டுகின்றேன். ஆனால், நிலைமை என்னவென்று சொன்னால், 'பணம் இருந்தால் போதுமடா, உலகிலே சட்டம் எதற்கு; மனசாட்சி எங்கே' என்ற நிலைதான் இன்றைக்கு இருக்கிறது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தங்களுடைய கடுமையான முயற்சியால் பெண்களுக்குப் பாதுகாப்புத் தந்து, அச்சமற்ற சமூக மரியாதைக்குரியவர்களாக நடத்தப்பட வேண்டுமென்று கூறியிருப்பதை வரவேற்கின்றேன். ஆனால், அதையே தவறாகப் புரிந்துகொண்ட அதிகாரிகளும் இருக்கின்றார்கள். இன்றைக்கு சாவி கிராமத்திலே இருக்கின்ற ஒரு உதவி ஆணையர் என்று நான் நினைக்கின்றேன்—Assistant Commissioner—அவர் பெண்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதாக நினைத்துக்கொண்டு, தவறான நடத்தைக்குரிய ஒரு பெண்ணை ஒரு இடத்திலே அவர்கள் தவறான தொழில் செய்துகொண்டிருப்பதை ஊக்குவிக்கின்ற அளவிலே சென்று கொண்டிருந்தார் என்பது இன்றைக்குப் பத்திரிகையின் வாயிலாக தெரிந்த ஒன்றாக இருக்கின்றது. அந்தப் பெண் 1,20,000 ரூபாய் கொடுத்தாளாம், மேலே கட்டப் பஞ்சாயத்து செய்து 30,000 ரூபாய்கூட கொடுத்து 1,50,000 ரூபாய் வாங்கிக் கொடுத்திருக்கின்றார். அதற்காக அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்த கார்கூட அந்த

அம்மையாருக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்று சொன்னால், அரசாங்கத்திற்கு நல்ல பெயரை எடுத்துக் கொடுப்பதும், அரசாங்கத்திற்குத் தீய பெயரை ஏற்படுத்திக் கொடுப்பதும் இதுபோன்ற அதிகாரிகள்தான் என்பதை நிச்சயமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொண்டு, அவர்களையெல்லாம் சரிப்படுத்த வேண்டிய கடமையும் இருக்கின்றது என்பதை நான் இங்கு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல, நகைக் கடையிலே போய் ஓர் ஆசிரியை, பெண், வளையலைத் திருடினார் என்று பத்திரிகையிலே வந்திருக்கிறது. அது ரொம்ப வருத்தமாக இருக்கிறது. அதேபோல, சேலத்திலே இருக்கிற Engineering College students வழிப்பறிக் கொள்ளை நடத்தி, கிட்டத்தட்ட 60 சவரனுக்குமேலே நகைகளைக் கைப்பற்றியிருக்கிறார்கள், கொள்ளையடித்திருக்கிறார்கள் என்ற செய்தியைக் கேட்கின்றபோது நாம் எங்கே போய்க்கொண்டிருக்கின்றோம் என்கின்ற வேதனை வருகின்றது. ஆசிரியை இந்த நாட்டிலே நல்ல மாணவர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பிலே இருக்கக்கூடியவர், வழிகாட்டியாகத் திகழக்கூடியவர், அவர்களே இன்றைக்குப் போய் நகைக் கடையிலே வளையலைத் திருடுவதும், மாணவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் இந்த நாட்டிலே வருங்காலத்தைத் தாங்கி நிற்கக்கூடிய தூண்களாக இருக்க வேண்டியவர்கள் அத்தனை பேரும் இன்றைக்குக் கொள்ளையிலே, வழிப்பறிக் கொள்ளையிலே ஈடுபடுகிறார்கள் என்று சொன்னால், இதுவெல்லாம் நமக்கு ஏற்பட்டிருக்கின்ற பலவீனங்கள். இந்த பலவீனங்களை நாம் நிச்சயமாகக் கண்டுபிடித்து, அவற்றைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். Traffic அதிகமாக இருக்கின்ற பகுதிகளிலே மாணவர்கள், அவர்களுடைய பள்ளியினுடைய அந்த வெள்ளை ஆடையை உடுத்திக்கொண்டு போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துகின்றார்கள். அவர்களும் மாணவர்கள்தான், இவர்களும் மாணவர்கள்தான்.

சமூக நீதி குற்றப் புலனாய்வுப் பிரிவு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக நடக்கும் வன்கொடுமைகள்மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கிறது. ஒரே வரியிலே கூறப்பட்டுள்ளது. 1917–ல் தீண்டாமை ஒழிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கின்றது. 1955-ல் தீண்டாமைக் குற்றங்கள் என்ன என்பதை வரைமுறைப்படுத்தியிருக்கிறார்கள். 1990-ல் atrocities–ஐ ஒழிக்கத் தனி Cell அமைக்கப்பட்டது. தற்போது Special Cells எத்தனை இயங்கிக் கொண்டிருக்கின்றன என்கின்ற விவரத்தை நீங்கள்



சுட்டிக்காட்டவில்லை. அதேபோல, தீண்டாமை ஒழிப்புக்காக வரக்கூடிய வாய்ப்புகள் எந்தெந்தக் கிராமங்களில் இருக்கின்றன. எங்கெங்கே இந்தத் தீண்டாமை ஒழிப்பு வரும் என்கின்ற நிலைமை இருக்கின்றதோ, அந்த இடங்களிலே எல்லாம் முன்கூட்டியே preventive and security நடவடிக்கைகளை அரசே எடுப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாவட்ட நிர்வாகம் என்பது ஆட்சித் தலைவரும், மாவட்டக் காவல் துறைத் தலைவரும் சேர்ந்து கூட்டாக ஆற்ற வேண்டிய பணி. அப்படி இருந்தால்தான் அந்த மாவட்டத்திலே இந்த வன்கொடுமைகள் நடப்பதை நிச்சயமாகத் தடுக்க முடியும். நீதிமன்றங்களிலே இன்றைக்கு இந்த வன்கொடுமை வழக்குகள் எத்தனை இருக்கின்றன? மாநில அளவிலும் சரி, மாவட்ட அளவிலும் சரி, எத்தனை வழக்குகள் இருக்கின்றன? நீதிமன்றங்களெல்லாம்--கங்கை நதி என்று சொன்னால், அதற்கு ஒரு விளக்கம் கொடுப்பார்கள். காவிரி என்று சொன்னால், அதற்கு ஒரு வரைமுறை விதிப்பார்கள், விதிக் கட்டுப்பாடுகளைக் கொண்டு வருவார்கள். ஆனால், இந்த வன்கொடுமைக்கு என்று நீதிமன்றங்கள் எந்த வழிகாட்டுதலையும் காட்டவில்லையே என்கின்ற ஆதங்கம் எனக்கு இருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. அதேபோல, இந்த வன்கொடுமைகள் நடக்கக்கூடிய இடங்கள் என்று அரசாங்கத்தாலே ஊர்ஜிதம் செய்யப்படுகின்ற அந்தப் பகுதிகளுக்கு, காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், ஒரே சமுதாயத்தினராக இருக்கக் கூடாது. பல சமுதாயங்களைச் சேர்ந்தவர்களுடைய குழுக்களாக அங்கே பொறுப்பிலே இருந்தால்தான், அந்த வன்கொடுமைகள் தடுக்கப்படும் என்று நான் நினைக்கின்றேன்.

(முற்பகல் 11–10)

காங்கிரஸ் ஆட்சியிலே, அக்டோபர் 2 ஆம் தேதி, அண்ணல் மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாளை, தீண்டாமை ஒழிப்பு, சமூக நீதி விழிப்புணர்வு நாளாக ஒவ்வொரு பஞ்சாயத்திலும் கடைப்பிடிக்கப் பெற்றது. அது இப்போது இல்லை என்று நான் நினைக்கின்றேன். அது மீண்டும் வருமா என்கின்ற கேள்வியையும் உங்கள் முன்னே வைக்கின்றேன்.

இன்று மத்தியிலே இருக்கின்ற கூட்டணி அரசாங்கம், Commor Minimum Programme என்ற ஒன்றை அமைத்து—அதில் நம்முடைய முதல்வர் அவர்கள்கூட உறுப்பினராக இருக்கின்றார்கள்—மனு நீதி ஆட்சிபோல், கருணையும், நிதியுமாக நீங்களே இருப்பதால், மனு

அதர்மத்தைப் போக்கி, நீதி வழங்குங்கள், இந்த வன்கொடுமைக்கு என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன். அம்பேத்கர் அவர்கள் கூறினார்கள், "Even good law can be badly administered" என்று சொல்லியிருக்கின்றார்கள். எனவே, இதில் உங்களுடைய நடவடிக்கையையும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

காவலர்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டித் தருவதில், இதுவரையிலும் 42,016 வீடுகளைக் கட்டியிருக்கிறீர்கள். அது 42 சதவிகிதம். கட்டப்பட வேண்டிய வீடுகள், 5,373. அது, ஐந்து சதவிகிதம். இன்னும் தேவையானவை 51,508 வீடுகள். அது 53 சதவிகிதம். என்னுடைய தொகுதியிலேகூட, மணிமங்கலத்தில் ஒரு காவல் நிலையம் இருக்கின்றது. அதிலே பணியாற்றுகின்ற காவலர்கள், கொஞ்சம் தூரத்திலிருந்துதான் வருகிறார்கள், அங்கேதான் quarters இருக்கின்றது. ஆனால், அந்த quarters மிகவும் பழுதடைந்துவிட்ட காரணத்தினாலே, அங்கே பாம்பு, பல்லி, பூரான் எல்லாம் இருக்கக்கூடிய ஓர் அவல நிலை இருக்கின்றது. நானே ஒரு தடவை போய்ப் பார்த்தேன் அந்த இடத்தை. ஆகவே, அவர்களுக்கு அந்த quarters நன்றாகக் கட்டிக் கொடுப்பதற்கு நீங்கள் நிச்சயமாக முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த ஆட்சியிலே பல encounter–களை இந்த நாடு சந்தித்திருக்கின்றது. Encounter என்றால் என்ன? ஒரு குற்றவாளியைப் போலீசார் துரத்திச் செல்கின்றபோதோ அல்லது அவரைத் தேடிச் செல்கின்றபோதோ, அந்த போலீஸ் அதிகாரிகளுக்கு, அந்தக் குற்றவாளியால் உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற நேரத்தில், தங்களைக் காத்துக்கொள்வதற்காக, போலீஸார் அப்போது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தலாம். அதுபோன்ற சூழ்நிலைகளில், போலீஸார் தங்களைக் காத்துக்கொள்வதற்காக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைதான் encounter. ஆனால், நான் இப்போதும் சொல்கின்றேன், அந்த encounter என்பது கடந்த ஆட்சியிலே மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட ஒன்றாக இருந்த காரணத்தினால், உங்கள் ஆட்சியிலே நிச்சயமாக அந்த encounters ஏற்படாதவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடந்த 20 ஆண்டுகளிலே, பதவி உயர்வு பெற்ற அதிகாரிகள் நிறைய இருக்கின்றார்கள். I.G., D.I.G. போன்றவர்களுக்கு அதற்குரிய பணிகள் இருக்கின்றன. Posting–லே இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்குப் பணி நிறைய இல்லை. ஆகவே, அவர்களுக்கு நிறையப் பொறுப்புகளைத் தர



வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அதற்கு ஓர் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கோயம்புத்தூரிலே ஒரு Commissioner. அவருக்குக்கீழே 16 Police Stations தான். அந்த 16 Police Stations–லே இருக்கின்ற அதிகாரிகள் ஏராளம். அங்கே அதிகாரிகள் அதிகமாக இருக்கிறார்களே தவிர, காவலர்களும், தலைமைக் காவலர்களும் அங்கே அதிகம் இல்லை என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். Police Stations–ஐ அதிகரிக்க வேண்டும். Police Stations–ஐ transfer செய்யக் கூடாது. போலீஸ்காரர்களை transfer பண்ணலாம். Police Stations–ஐ transfer பண்ணக் கூடாது. ஏனென்றால், என் தொகுதியில் மாங்காடு என்ற ஒரு பகுதி இருக்கிறது. அந்த மாங்காட்டிலே இருக்கிற Police Station–ஐக் கோவூருக்கு மாற்றப் போவதாக அங்கேயிருக்கிற போலீஸ்காரர்கள் சொல்கிறார்கள். ஏனென்றால், "மாங்காட்டிலே இருக்கிற அந்த Police Station வாடகைக் கட்டடத்திலே இருக்கிறது. ஆகையினாலே, கோவூரிலே சொந்த இடம் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதனாலே, அங்கே போகப் போகிறது" என்று சொன்னார்கள்.

*முற்பகல் 11–15*

கோவூரிலே ஒரு போலீஸ் ஸ்டேஷன் வேண்டும், அதற்கு நிலம் கொடுங்கள் என்றால் நிலம் கொடுக்கிறோம். அதேபோல, மாங்காட்டிலும் ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்கு நான் Town Panchayat–லே கேட்டிருக்கிறேன். அவர்களும் நிலம் கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் அந்த Station-ஐ மாங்காட்டிலேயிருந்து நாம் மாற்றக் கூடாது. ஏனென்றால் மாங்காடு போலீஸ் ஸ்டேஷன் வந்ததே ஒரு கதை. இரவிலே பெண்கள்-- மகளிர் எல்லாம் தூங்குவார்கள். காலையிலே எழுந்து பார்த்தால், அவர்கள் கழுத்திலேயிருக்கிற தாலி இருக்காது, வெறும் கயிறுதான் இருக்கும். இதுபோன்று, இரவு நேரங்களிலே தாலி திருடுபோன காரணத்தினால், நான் சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றபோது, தமிழகத்தின் முதல்வராக M.G.R. அவர்கள் இருந்தபோது இதைச் சுட்டிக்காட்டி, அங்கே ஒரு காவல் நிலையம் அவசியம் என்று கேட்டதற்குப் பிறகுதான், அந்த இடத்திலே, மாங்காட்டிலே ஒரு காவல் நிலையம் வந்தது. நிறைய இடங்களை, அதிகமான கிராமங்களை உள்ளடக்கி அந்தக் காவல் நிலையம் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற காரணத்தாலே, அந்தக் காவல் நிலையத்தை மாற்றாமல், ஒரு புதிய காவல் நிலையத்தை வேண்டுமானால் நீங்கள் கோவூருக்குத் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன். நான் நிறைய நேரம் எடுத்துக்கொள்ளமாட்டேன். ஐயா பேச வேண்டுமென்று தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் பேச வேண்டும். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திருமதி டி. யசோதா:** இல்லை, இல்லை, எனக்குத் தெரியும். நான் சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன். அதேபோல, படப்பையிலேயும் ஒரு தனிக் காவல் நிலையம் வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்னும்கூடச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஸ்ரீபெரும்புதூரிலே நிறைய industries இருக்கின்றன. நிறைய industries இருக்கின்ற காரணத்தினாலே, அங்கே காவலர்கள் அதிகமாகத் தேவைப்படுகின்றார்கள். அதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

Police Department–க்கு ஒரு Commission போடப் போகிறீர்கள். அந்த Commission–க்குக்கூட யாரையோ போட்டுவிடாமல், விவரம் தெரிந்த அதிகாரிகளைப் போட்டால் சிறப்பாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, என்னைப் பொறுத்தமட்டிலும், மகளிர் காவல் நிலையங்களை இன்னும் அதிகரிக்க வேண்டும். மகளிருடைய பிரச்சினைகளை எல்லாம், அவர்களுடைய அந்தரங்கப் பிரச்சினைகளையெல்லாம் கவனிப்பதற்கு மகளிர் காவல் நிலையங்கள் வேண்டும். குன்றத்தூருக்கு ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டும்.

பல குற்றங்குறைகள் இருந்தாலுங்கூட, நமது காவல் துறையினுடைய பணிகளை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. அவர்கள் உண்மையிலேயே, தியாகம் செய்வதற்கென்றே இந்தக் காவல் துறைக்கு வந்திருக்கின்றார்கள். அவர்களுக்குப் பல கஷ்டங்கள். எந்த ஆட்சி வந்தாலும் சரி, அவர்களைத்தான் குறை சொல்வார்கள். எந்த ஆட்சி வந்தாலும், எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்கள், காவல் துறையைச் சேர்ந்தவர்களைத்தான் குற்றம் சொல்வார்கள். அதிலே தப்பிப் பிழைக்கின்றது ஒரு சில அதிகாரிகளாகத்தான் இருப்பார்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு ஏச்சுக்கும், பேச்சுக்கும் ஆளாகக்கூடிய துறையிலே



இருந்தாலும்கூட, அதிலே இருக்கின்றவர்கள், நல்லவர்களாக, அவர்கள் மனசாட்சிப்படி தங்களைத் தாங்களே ஒரு மனப் பரிசோதனைக்கு ஆட்படுத்திக்கொண்டு, நாட்டு மக்களுக்குப் பணியாற்றுவதற்கு, தியாகம் செய்வதற்கு வந்திருக்கின்றவர்கள் என்பதை அவர்கள் உணர்ந்தாலே, நிச்சயமாக நல்லதொரு எதிர்காலம் இந்தத் துறைக்கு உருவாகும் என்பதை நான் கூறிக்கொள்கிறேன். எத்தனை சட்டங்கள், எத்தனை திட்டங்களை நீங்கள் உருவாக்கினாலும்கூட, அவர்கள் சரியாக இல்லையென்று சொன்னால், இப்பொழுது திருநெல்வேலி Commissioner மாதிரி ஒருவர் இருந்தார் என்றால் என்ன செய்ய முடியும்?

அதுபோல, அவர் வந்து, தன்னுடைய மனதை ஆத்ம பரிசோதனைக்குக் கொண்டு வரக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். பைத்தியம் பிடித்த பையனைப் போய் போலீஸ்காரர்கள் அடித்து, அவன் போலீஸ்காரர்களைத் திட்டினான் என்று சொல்லி, அவனைக் கொண்டு போய் மருத்துவமனையிலே சேர்த்திருக்கிறார்கள். இதுபோன்ற கடுமையான, வெறித்தனமான நடவடிக்கைகளை எல்லாம் தவிர்த்து, மனிதாபிமான அடிப்படையிலே "உங்கள் நண்பன்" என்கின்ற அந்தப் பெயருக்கு ஏற்றாற்போல அவர்கள் நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இறுதியாக, "காய்த்த மரம்தான் கல்லடிபடும்" என்று சொல்வார்கள். அதுபோல, கொடுக்கின்ற மனம் படைத்த உங்களிடம்தான் கேட்க முடியும், கஞ்சனிடம் கேட்க முடியாது. ஆதி திராவிட மக்களுக்கு வள்ளலாக இருந்து, வரதராஜன் போன்ற ஒரேயொரு நீதிபதியை உருவாக்குவதற்கு நீங்கள் காரணமாக இருந்தீர்களே, உங்களுடைய ஆட்சியிலே பல நூறு வரதராஜர்கள் நீதிபதிகளாக வர வேண்டும் என்கிற கோரிக்கையை உங்களிடம் நான் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, ஒரு I.G.–ஆக, துரை அவர்களை நீங்கள் உருவாக்கித் தந்தீர்கள். ஒரு காளிமுத்து அவர்களை மாநகரக் காவல் துறைத் தலைவராக நியமித்தீர்கள். ஒரு முத்துசாமியை தலைமைச் செயலாளராக நீங்கள் உருவாக்கினீர்கள். அதேபோல, இந்தச் சமுதாயத்திலே பல முத்துசாமிகள் உருவாக்கப்பட வேண்டும். பல காளிமுத்துகள் உருவாக்கப்பட வேண்டும். பல துறைகள் உங்களாலே உருவாக்கப்படவேண்டும். காலமெல்லாம் இந்த ஆதி திராவிட சமுதாயத்து மக்கள் உங்கள் பெயரைச் சொல்ல வேண்டுமென்று கேட்டு,

வாய்ப்பினைத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, உரையை முடித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த்!

முற்பகல் 11–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழனின் தன்மானத்தையும், தமிழ்நாட்டின் வருமானத்தையும் உயர்த்திக் காட்டியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

ஒரு மனிதனின் இரண்டு கண்கள்போல, ஒரு நாட்டிற்கு இராணுவமும், காவல் துறையும், இரண்டுமே வலிமையானதாக இருக்க வேண்டும். இரண்டுமே உறுதியானதாக இருக்க வேண்டும். காவல் துறைக்குக் கம்பீரத்தையும், கௌரவத்தையும் தேடித் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பது வரலாற்று உண்மை. அந்த வரலாறு படைத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தினையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்று மானியக் கோரிக்கைகள்மீது பேச அழைத்த மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தங்கள் உறக்கம் மறந்து, உணவை மறந்து, உயிரைப் பணயம் வைத்து மக்களைக் காப்பாற்றுகின்ற பணியில் ஈடுபடும் காவலர்களை அரசு காப்பாற்ற வேண்டும். அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும், உற்சாகப்படுத்த வேண்டும். அவர்களுக்கு அரசு கொடுக்க வேண்டியதைக் கொடுத்து, அவர்கள்மூலமாகத் தீயதை, தடுக்க வேண்டியதைத் தடுக்க வேண்டும். குற்றங்களுக்குத் தண்டனை கொடுப்பது மட்டும் காவல் துறையினுடைய வேலையில்லை. குற்றங்களே நடக்காமல் தடுப்பதும் காவல் துறையின் வேலை. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அந்தச் சாதனையைக் காவல் துறை நிகழ்த்திக் காட்டியது.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பயமின்றித் தொழில் தொடங்க வர வேண்டுமென்றால், சட்டம்–ஒழுங்கு சிறப்பாக இருக்க வேண்டும். இந்தியாவின் பல மாநிலங்களில் தீவிரவாதிகளின் சதிகள், மதவாதிகளின் தூண்டுதல்கள், துரோகங்கள், நக்ஸ்லைட்டுகளின் மிரட்டல்கள், bomb–கலாச்சாரம் பெருகி பலியான உயிர்கள் நித்தம்–



நித்தம், இரத்தம்–இரத்தம் கொட்டுகின்ற ஒரு சூழ்நிலை என்று வந்து கொண்டிருந்த செய்திகள் இவற்றிற்கிடையே தமிழகம் மட்டும் அமைதிப் பூங்காவாக இருந்தது. அந்த அமைதிப் புரட்சியை உருவாக்கியது மாண்புமிகு அம்மா அவர்கள்.

வன வளங்களை அழித்தவன், மனித உயிர்களைப் பறித்தவன், யானைகளைக் கொன்று குவித்தவன் காட்டுக் கொள்ளையன் வீரப்பன். அவன் சகாப்தத்தை முடித்து வைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். சாதிக் கலவரங்கள் நிறுத்தப்பட்டன. மதக் கலவரங்கள் தடுக்கப்பட்டன. தீவிரவாதம் ஒடுக்கப்பட்டது. இதற்கெல்லாம் காரணம், மாண்புமிகு அம்மா அவர்களது ஆட்சியில் காவல் துறைக்கு உரிமைகள் கொடுக்கப்பட்டன, சலுகைகள் கொடுக்கப்பட்டன. தீவிரவாதிகளின், கொலையாளர்களின், கொள்ளைக்காரர்களின் கைகளில் மட்டுமே இருந்த ஏ.கே. 47 போன்ற நவீன ஆயுதங்களைக் காவல் துறையின் கைகளுக்குத் தந்தது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான்.

தடுப்புச் சாவடிகள், கடலோரக் காவல் படை, Cyber Crime பிரிவு முதன்முதலில் தொடங்கப்பட்டதும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான். கொள்ளைத் தடுப்புப் பிரிவு, திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு பலப்படுத்தப்பட்டதும், மகளிர் காவல் நிலையங்கள் அதிக அளவில் அமைக்கப்பட்டதும், காவலர்களின் வீட்டு வசதி விரிவுபடுத்தப்பட்டதும், மின் வாரியம், வங்கிகள், கடலோரப் பாதுகாப்பில் தீவிரம் காட்டப்பட்டதும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான்.

1996 முதல் 2001 வரை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் காவல் துறைக்கு வழங்கப்பட்ட வாகனங்கள் 1,540. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், நல்லாட்சியில் 2001 முதல் 2005 வரை வழங்கப்பட்ட வாகனங்கள் 4,077.

மாண்புமிகு அம்மா அவர்கள் இதே சட்டமன்றத்தில் பேசியதுபோல, வலிமையான இந்தியா, அதில் வளமான தமிழ்நாடு என்ற பெருமையை உருவாக்க காவல் துறையில் செய்த சாதனைகளையும், நிறைவேற்றிய திட்டங்களையும் மக்களும் மறக்க மாட்டார்கள், காவல் துறையினரும் மறந்திருக்க மாட்டார்கள் என்பதை நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைத் துறை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை.

ஊர்க் காவல் படை ஆகியவற்றில் பணியாற்றி வருகையில், அவர்கள் பணியாற்றும்போது வீரதீரச் செயல்கள் புரிந்ததற்காகவும், கடமை தவறாது பணியாற்றியதற்காகவும், அவர்களைப் பாராட்டி ஊக்கப்படுத்துவதற்கு, அவர்களுக்கு வருடந்தோறும் பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. தி.மு.க. ஆட்சிக் காலமான 1999-2000 ஆம் ஆண்டுகளில் இந்தத் துறைகளில் பணிபுரிந்தவர்கள்மீது அப்போது ஆட்சியில் இருந்தவர்களுக்கு என்ன கோபமோ, அவர்களுக்குத் தொடர்ந்து இரண்டாண்டுகள் பதக்கம் வழங்கப்படவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இதை அறிந்து, 1999, 2000 மற்றும் 2001 ஆகிய மூன்று வருடங்களுக்கும் சேர்த்து பதக்கங்கள் வழங்கி, அந்த வீரர்களையும், வீராங்கனைகளையும் பாராட்டி, அவர்களை ஊக்கப்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-25

ஒரு நாட்டின் பாதுகாப்புக்கு அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்து, இராணுவம் நவீனப்படுத்தப்பட்டு, பலமுள்ளதாக அதனை உருவாக்கினால்தான் அண்டை நாட்டின் எதிரிகள், தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் ஆகியோரின் தாக்குதலிலிருந்து நாட்டைக் காப்பாற்ற முடியும் என்று உணர்ந்த காரணத்தினால்தான், மத்திய அரசு தனனுடைய நிகர வருவாயில் 22.76 சதவிகிதத்தை நாட்டின் பாதுகாப்புக்காகச் செலவிடுகிறது.

காவல் துறையில் தகவல் பரிமாற்றச் சாதனங்களைத் தேவையான அளவு நவீனப்படுத்துவதன் அவசியத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் உணர்ந்த காரணத்தினால்தான், தமிழ்நாட்டில் உள்ள 1,413 காவல் நிலையங்களிலும் Caller I.D.-யுடன்கூடிய தொலைபேசிகள், கம்பியில்லாத் தொலைபேசிகள், விரைவில் காவல் நிலையங்களைத் தொடர்பு கொள்ள 7,695 நடைபேசிகள், அதாவது Walkie-talkie, அனைத்துக் காவல் நிலையங்களிலும் தகவல் தொடர்புக்காக 1,750 இடங்களில் மின்னஞ்சல்–E-Mail, அனைத்துக் காவல் நிலையங்களிலும் Photo Copier, Fax Machine வழங்கி, இந்தியாவிலேயே தமிழ்நாட்டுக் காவல் துறை நவீனப்படுத்தப்பட்டதும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண்கள் நாட்டின் கண்கள். பெண்களுக்குரிய சமூக நீதி அவர்களுக்குச் சம அளவில் கிடைத்திட வேண்டும். பெண்கள்



முன்னேற்றத்தில் அதிகக் கவனம் செலுத்துகின்ற அதே நேரத்தில், அவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளிலிருந்தும் பெண்களைக் காப்பாற்றுகின்ற தாயாக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் துயர் துடைக்க, மகளிர் பிரச்சினைகளிலிருந்து தீர்வு காண, 1992 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இன்று 196 என்று உயர்ந்து, இந்தியத் துணைக் கண்டத்திற்கே தமிழ்நாடு எடுத்துக்காட்டான மாநிலமாகத் திகழ்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

2003 ஆம் ஆண்டில் மகளிர் அதிரடிப் படை துவங்கப்பட்டதும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய காலத்தில்தான். இந்தியாவிலேயே முதல் மாநிலமாக மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்து மகளிர் காவல் அணியைத் துவக்கினார்கள். அனைத்துக் காவல் நிலையங்களிலும் தலா ஒரு மகளிர் உதவி ஆய்வாளர், 2 இரண்டாம் நிலை மகளிர் காவலர்களை நியமித்ததும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.

2002 ஆம் ஆண்டில் காவல் துறையில் பணியாற்றியவாகளின் குறைகளை, மாண்புமிகு அம்மா அவர்கள் நேரடியாக அவர்களை வரவழைத்து, கிட்டத்தட்ட 8,395 காவல் பணியாளர்களைச் சந்தித்து, அவர்களின் குறைகளை உடனடியாகத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தார்கள் என்பதனையும் நான் இந்த மன்றத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் உண்மையை மறைத்துவிட்டுச் சொல்லக் கூடாது. 1973 ஆம் ஆண்டில்தான், தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருக்கிறபோதுதான், மகளிர் காவல் நிலையமே தொடங்கப்பட்டது என்பதை மறைத்துவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ அவங்க அம்மா காலத்தில்தான் தொடங்கப்பட்டது என்று சொல்கிறார்கள், உங்கள் அம்மாவை எவ்வளவு வேண்டுமானாலும் புகழ்ந்து கொள்ளுங்கள். ஆனால், உண்மையை மறைக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

முற்பகல் 11–30

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லிக்கொண்டிருப்பது, மகளிருக்கென்று தனியாக ஒரு காவல் நிலையம். அதைப் பற்றித்தான் நான் சொல்லிக்கொண்டிருக்கின்றேன். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் — மகளிர்களைப் பணியில் சேர்த்த ஆண்டாகத்தான் 1973 இருந்தது. ஆனால், மகளிருக்கென்று தனியாக ஒரு காவல் நிலையம் தொடங்கப்பட்டது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், காவல் துறையில் புதிதாகச் சேர்ந்தவர்களுக்குப் பல்வேறு அடிப்படைப் பயிற்சிகளை அளிக்கவும், இதர காவல் பணியாளர்களுக்குப் பணியிடை புத்தாக்கப் பயிற்சி அளிக்கவும் மாண்புமிகு அம்மா அவர்களால் ரூபாய் 48 கோடி செலவில் அதிநவீன காவல் பயிற்சிக் கழகம் ஊனமாஞ்சேரி கிராமத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு, உலகத் தரம் வாய்ந்த பயிற்சி அளிக்கத் தேவையான வசதிகள், அதாவது தங்கும் வசதிகள், மருத்துவமனை, நவீன உடற்பயிற்சி மையம் ஆகிய சிறப்புக்களோடு இந்தியாவிலேயே முதன்மைப் பயிற்சி நிறுவனமாக அதன் உள்கட்டமைப்புப் பணி விரைவாக நடந்துகொண்டு வருகிறது என்பதனை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதோடு, தரமணியில், காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலக வளாகம் ரூபாய் 30 கோடி மதிப்பில் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, கட்டடப் பணி நடைபெற்று வருவதும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியின் சாதனைதான் என்பதை நான் இங்கே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறையை நவீனப்படுத்துவதற்கு ஒரு மிகப் பெரும் திட்டத்தினைத் தீட்டி, மத்திய அரசினை வலியுறுத்தி, மத்திய அரசிடமிருந்து ரூபாய் 228.30 கோடியும், அதற்குச் சரி நிகராக மாநில அரசினுடைய நிதியாக ரூபாய் 199.29 கோடியும் ஒதுக்கீடு செய்து, ஆக மொத்தம் 427.59 கோடி ரூபாயை 2001 முதல் 2005 வரை மாண்புமிகு அம்மா அவர்கள் காவல் துறையினை நவீனப்படுத்துவதற்காகச் செலவு



செய்து, இன்றைக்குக் காவல் துறையை நவீனப்படுத்தியதும் மாண்புமிகு அம்மாவுடைய சாதனைகளைச் சாரும் என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, குற்ற நிகழ்வுகளைத் தடுப்பதில், இதற்கு முன்னாலே இருந்த ஆட்சியாளர்களைவிட மாண்புமிகு அம்மாவுடைய தலைமையில் சிறப்பாக செயல்பட்டு இருக்கிறார்கள். கடந்த காலங்களில் ஆட்சி புரிந்தவர்கள் காலத்தைவிட, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி புரிந்த காலத்தில், குற்ற நிகழ்வுகள் குறைந்திருக்கின்றன என்பதற்கு நான் சில விவரங்களை இந்த மாமன்றத்தில் வைப்பதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

1996 முதல் 2001 வரை மதக் கலவரங்களில் உயிரிழப்பு 70. 2001 முதல் 2005 வரை மதக் கலவரங்களில் உயிரிழப்பு 4. 1996 முதல் 2001 வரை ஜாதிக் ஜாதிக் கலவரங்களில் உயிரிழப்பு 213. 2001 முதல் 2004 வரை ஜாதிக் கலவரங்களில் உயிரிழப்பு 19 என்ற அளவில், எப்பொழுதெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பிலே இருக்கின்றாரோ, அப்பொழுதெல்லாம் மதக் கலவரங்களும், ஜாதிக் கலவரங்களும் கட்டுப்படுத்தப்பட்டன என்பதற்கு இவை மிகச் சிறந்த உதாரணங்களாக விளங்கிக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 54-ல் காவலர் குடியிருப்புகள் என்ற தலைப்பில், தற்போது 98,897 காவல் பணியாளர்கள் என்றும், அவர்களில் 42,016 குடியிருப்புகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும், 5,373 கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்றும், மொத்தம் 47,389 ஆக இருக்குமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மிக்க மகிழ்ச்சி. ஆனால், 2000 ஆம் ஆண்டு முதல், ஆண்டுக்குக் கட்டப்படும் குடியிருப்பின் இலக்கு 2,500-லிருந்து 3,000-ஆக உயர்த்தப்படும் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால், அந்த இலக்கை எய்துவதற்குரிய நிதியைப் பற்றிக் கொள்கை விளக்கக் குறிப்பில் ஒன்றும் சொல்லவில்லை என்பதனை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன். மீதமுள்ள 51,508 காவலர்களின் நலன் கருதி அந்தக் குடியிருப்புகளை வருகின்ற 5 ஆண்டுகளில் கட்ட அரசு முன்வர வேண்டுமென்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஆளும் கட்சியில் பொறுப்பில் இருக்கின்றவர்கள், நீங்கள் ஆட்சிக்கு வந்து 100 நாட்களுக்கு மேலாகிறது. ஆனால், தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து வந்துகொண்டிருக்கின்ற செய்திகள் நமக்கு அதிர்ச்சி ஊட்டுவதாகவே இருக்கின்றன. மக்கள் அச்ச உணர்வோடுதான் தங்களின் அன்றாட வாழ்க்கையை நடத்துகின்ற அபாயகரமான ஒரு சூழ்நிலை இன்றைக்கு உருவாகிக்கொண்டிருக்கின்றது (குறுக்கீடுகள்) என்பதைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். அப்புறம் சொல்லுங்கள், பாராட்டுக்களை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஓர் அபாயகரமான சூழ்நிலை இன்றைக்கு உருவாகிக்கொண்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். எதிர்க்கட்சி, ஒரு பொறுப்பான ஜனநாயக மரபில் அதைச் சுட்டிக்காட்டுவது எங்களுடைய கடமை என்ற பொறுப்பு எங்களுக்கிருப்பதால் அதைச் சொல்லுகின்றேன். தயவுசெய்து ஆளும் தரப்பிலே இருக்கின்றவர்கள் பொறுமையாகக் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) ஏதாவது மாற்றுக் கருத்து இருந்தால் (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதாவது மாற்றுக் கருத்து இருந்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லவிருக்கின்றார்கள், அவர்கள் அதற்குரிய பதில்களை இறுதியில் சொல்லலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நீங்கள் ஆட்சி செய்கின்ற பொறுப்பை ஏற்றிருக்கின்றீர்கள். ஆளும் கட்சியாக வந்ததிலிருந்து அரசியல் ரீதியாக, மற்ற எதிர்க்கட்சியில் உள்ளவர்களைப் பழி வாங்குகின்ற எண்ணத்தோடு அவர்கள்மீது பல உண்மைக்குப் புறம்பான வழக்குகளைப் போட்டு, பழி வாங்குகின்ற செயல்களை இன்றைக்குக் காவல் துறைமூலம் செய்துகொண்டிருக்கின்றீர்கள். பாதிக்கப்பட்ட எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், காவல் நிலையங்களில் புகார் பதிவு செய்திருந்த சூழ்நிலையில், தவறு செய்த ஆளும்கட்சித் தரப்பில் உள்ளவர்களிடம் செயற்கையாகப் புகார்களை வாங்கி, பாதிக்கப்பட்டவர்கள்மீதே வழக்குத்



தொடரப்படுகின்ற அவல நிலைக்குக் காவல் துறையை இன்றைக்கு நீங்கள் தவறாகப் பயன்படுத்துகிறீர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு உதாரணமாகப் பட்டியல் நிறைய இருக்கின்றது. காலதாமதமாகும். குறிப்பாக ஒன்றிரண்டை மட்டும் நான் இங்கே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலேகூட, ஆதிநாராயணன் என்ற ஒரு நபர் எனக்குத் தேர்தல் வேலை பார்த்தார் என்ற ஒரே காரணத்திற்காக, அவரை சைக்கிள் செயினால் தாக்கினார்கள். அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, புகாரும் பதிவு செய்யப்பட்டிருந்தது. அவரை அடித்தவர் தப்பித்து, தலைமறைவாக இருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருந்தது. ஆனால், இரண்டு தினங்களுக்குப் பின்னால், தேர்தல் முடிவு வந்தவுடன், யார் தலைமறைவாக இருந்தாரோ அவரிடம் மீண்டும் ஒரு புகாரை வாங்கி, வழக்குப் பதிவு செய்து, அடிபட்டுக் கிடந்த, மருத்துவமனையில் இருந்த ஆதிநாராயணன் மீதே, அவரை மீண்டும் ஜெயிலுக்குத் தள்ள வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் வேலுமணி அவர்கள்— 20 வயது இளம் பெண் ஒருவர் இறந்து விடுகின்றார்; அதற்குரிய R.D.O.—கோட்டாட்சியருடைய—விசாரணை தேவை என்று சொன்ன காரணத்திற்காக அவர்மீது பெயிலில் வர முடியாத அளவிற்குக்கூட வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) மீண்டும், இந்த ஆட்சி பொறுப்பேற்ற இந்த 100 நாட்களில் குற்றங்கள் எந்த அளவிற்குத் தமிழகத்தில் நிகழ்ந்திருக்கின்றன என்பதற்கு நான் சில உதாரணங்களை, தமிழ்நாடு அளவிற்கு என்னிடம் குறிப்புகள் இல்லையென்றாலும், ஒரு மாநிலத்தினுடைய தலைநகரில் நாம் தெரிந்துகொண்டாலே, அந்த மாநிலத்தினுடைய குற்ற நிகழ்வுகள், சட்டம்-ஒழுங்கு எந்த அளவிற்கு இருக்கின்றது என்பதற்கு உதாரணமாக அமையும். இன்றைக்கு சென்னை மாநகரத்தில் குற்ற நிகழ்வுகள் கூடியிருக்கின்றன. கிட்டத்தட்ட 60-லிருந்து 70, 80 இலட்சம் ஜனத்தொகை கொண்ட சென்னை மாநகரத்தில் மக்கள் பயமின்றி வாழ வேண்டும். அந்தச் சூழ்நிலையை மாநில அரசு, ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றவர்கள் நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்குக்

காவல் துறையை அவர்கள் பயன்படுத்த வேண்டும். இன்றைக்கு சென்னை மாநகரத்திலே குற்ற நிகழ்வு கூடியிருக்கின்றது. அதற்கு என்ன காரணம் என்பதை ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றவர்கள்தான், சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகளை அழைத்து, அதற்குத் தக்க நடவடிக்கையை எடுக்க வேண்டும். அதற்குச் சில உதாரணங்களை நான் இங்கே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-40

1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை, அதாவது மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பாக, மொத்த வழக்குகள், அந்த ஐந்தாண்டு காலத்தில், சென்னை மாநகரத்தில் 9,928 வழக்குகள். இந்தப் புள்ளிவிவரங்களில் ஏதாவது தவறு இருந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் சொல்லலாம். 9,928 வழக்குகள், குற்ற வழக்குகளாக இங்கு பதிவு செய்யப்பட்டன. 2001-லிருந்து 2006 வரை, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த அந்த ஐந்தாண்டு காலக்கட்டத்தில், ஒவ்வொரு வருடமும் என்னென்ன வழக்குகள் என்ற அந்தப் பட்டியல்கள் என்னிடம் இருக்கின்றன. அதை மொத்தமாக நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஐந்தாண்டுகளில் 3,752 வழக்குகள்தான் சென்னை மாநகரத்தில் குற்ற நிகழ்வு வழக்குகளாகப் பதிவாகியிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தைவிட, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் மூன்று மடங்கு குற்ற நிகழ்வுகள் நடந்திருக்கின்றன என்பதை நான் இந்த மாமன்றத்தினுடைய பார்வைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்த நூறு நாட்களில், ஆட்சிப் பொறுப்பேற்ற நூறு நாட்களில் எத்தனை வழக்குகள் கூடியிருக்கின்றன என்பதற்கு உதாரணமாக, அதாவது இந்த 2006-ல் மட்டும், ஜனவரியிலிருந்து மே மாதம் 12 ஆம் தேதி வரை, நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலம் வரை, 12 ஆம் தேதி வரை, 122 வழக்குகள், அதாவது கிட்டத்தட்ட நான்கரை மாதங்களில் மட்டும். (குறுக்கீடு) நான் சொல்கிறேன், பின்னால் சொல்ல வருகிறேன். 122 வழக்குகள் நான்கரை மாதங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்தப் புதிய ஆட்சி இங்கே பொறுப்பேற்றதற்குப் பின்னால், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் 140 வழக்குகள் குற்ற வழக்குகளாக இங்கே பதிவு



செய்யப்பட்டிருக்கின்றன. ஆக, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி அமைந்த பிறகு, குற்ற வழக்குகள், சென்னை மாநகரததில் கூடியிருக்கின்றன என்பதை இந்தச் சபையினுடைய கவனத்திறகுக் கொண்டு வருகின்றேன்.

அதே காவல் துறை, அதே அதிகாரிகள். ஆனால், பயம், கட்டுப்பாடு எல்லாம் எங்கே போனது என்பதுதான் தெரியவில்லை. தற்பொழுது தரும் புள்ளிவிவரங்கள் சென்னை மாநகரத்திற்கு மட்டும் உட்பட்டவை; அதுவும் அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கு. கொலை, கொள்ளை, திருட்டு, வழிப்பறி மட்டுமே இதில் அடங்கியிருக்கிறது. சங்கிலிப் பறிப்பு, two wheeler கொள்ளை, two wheeler திருட்டு இதில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இன்றைக்குத் திருட்டுகளுக்கெல்லாம் புதுப் புதுப் பட்டங்கள் கொடுக்கப்படுகின்ற ஒரு சூழல் இருக்கின்றது. Grill கொள்ளையன் என்று சொல்கிறார்கள். அது என்ன என்றே புரியவில்லை. Grill கொள்ளை, grill கொள்ளை என்று செய்தித்தாளில் வருகின்றது. Thrill கொள்ளை போய், grill கொள்ளை வந்துவிட்டதுபோல ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அரசு இதில் தீவிரக் கவனம் செலுத்தி, தக்க நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்மையில் மும்பையிலே தீவிரவாதிகள் நடத்திய குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்குப் பின்னர், கோவை மாநகரில் முஸ்லீம்களுக்கு எதிராக, கோவை மாநகர போலீஸ் ஒரு உண்மைக்கு மாறான வழக்கைப் பதிவு செய்தது. காவல் துறையின் உளவுப் பிரிவும், கோவை மாநகர போலீஸுக்கு ஆதரவாக அறிக்கை கொடுத்தது. இது உண்மைக்கு மாறான வழக்கு என்று கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், அந்த வழக்கைப் பதிவு செய்வதற்குக் காரணமாக இருந்த Assistant Commissioner மீது நடவடிக்கை எடுக்காமல், பணியிட மாறுதல் மட்டும் அங்கே செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே முஸ்லீம்கள் கோவை குண்டு வெடிப்பு வழக்கில் இன்னும் அவர்களுக்குரிய வழக்கு முடியாமல், அவர்களுடைய குடும்பங்கள் பல்வேறு பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கின்ற வேளையில், மீண்டும் ஒரு வழக்கு அங்கே, அதுவும் உண்மைக்கு மாறான வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பது, சிறுபான்மையின முஸ்லீம் மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-45

உலகப் புகழ்பெற்ற Scotland Yard-க்கு இணையானது என்று புகழப்பெற்ற தமிழ்நாடு காவல் துறை இன்றைக்கு எந்த அளவுக்குத் தடுமாற்றம் அடைந்து, 100 நாட்களில், மாநில மக்களைக் குற்ற நிகழ்வுகளிலிருந்து காப்பாற்றுகின்ற பொறுப்பிலுள்ள அவர்கள். அதாவது காவலர்கள் என்ற நிலையிலிருந்து S.P., D.I.G., I.G., D.G.P. போன்ற உயர் அலுவலர்கள் வரை, அவர்களை அடிக்கடிக் காரணமில்லாமல் பணியிட மாறுதல் செய்வதோடு, காவல் துறை அலுவலர்களின் மாறுதல் இன்றைக்கு அதிகார மையங்கள் கையில் சென்றுவிட்டது என்ற செய்திகள் உலா வந்து கொண்டிருக்கின்றன.

ஆட்சியின் அதிகாரங்களைக் கையில் வைத்துக்கொண்டிருக்கின்ற அதிகார மையங்கள் காவல் துறை நிர்வாகத்தின் உள்ளே புகுந்து அதிகார துஷ்பிரயோகம் செய்து பணியிட மாறுதலுக்கு மிகப் பெரிய அளவில் பணம் விளையாடுகிறது என்ற செய்தியும் வந்து கொண்டிருக்கின்றது. இதனால் காவல் துறையில் discipline, அதாவது கட்டுப்பாடு என்பது அடியோடு சீரழிக்கப்பட்டு, மேல் அதிகாரிகளுக்குக்கீழ் வேலை பார்க்கும் அதிகாரிகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே குறுக்கிடக் கூடாது என்றுதான் நாங்கள் அமைதியாக இருக்கிறோம். பணம் விளையாடுகிறது என்று சொல்கிறார்கள். யார் பணம் வாங்கியது? எந்த அதிகாரி மாறுதலுக்காக வாங்கினார்கள்? நான் கேட்கிறேன், கடந்த காலத்திலே ஒரு I.G.-யாக இருந்தவரை நீங்கள் மண்டபத்திற்கு மாற்றினீர்களே, அதற்கு ஏதாவது பணம் கொடுத்தார்களா? கலைஞருடைய செயலாளராக இருந்தவரைக் கன்னியாகுமரிக்கு மாற்றினார்களே அதற்கு ஏதாவது பணம் வாங்கினீர்களா! (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு ஆட்சி மாறியவுடனே அதிகாரிகளை மாற்றுவது என்பது ஒவ்வொரு ஆட்சி புதிதாக வரும்போது ஏற்படுகின்ற அன்றாட நடவடிக்கை. இதிலே நீங்கள் மாற்றி இருக்கிறீர்கள் என்று சொன்னால் பரவாயில்லை. ஆனால், அதிகார மையம் என்கிறீர்கள். பணம் பரிமாறப்பட்டிருக்கிறது என்கிறீர்கள். இப்படி எல்லாம் சொல்வது. ஆதாரம் இல்லாமல் சொல்லக்கூடிய குற்றச்சாட்டு.



தங்களைப் போன்றவர்கள் இப்படிப் பேசுவது முறை அல்ல என்பதைத்தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கின்றார்கள். நான் இந்த இட மாற்றம் சம்பந்தமாக வருகின்ற செய்திகளை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். பத்திரிகைகளிலும் அந்தச் செய்திகள்-- City Express, Chennai, ஜூலை 5 என்ற பத்திரிகையிலும் வந்திருக்கின்றன. இதனுடைய உண்மைத் தன்மை எந்த அளவுக்கு இருக்கின்றது. அது உண்மைதானா என்பதனைப் பார்க்கின்ற கடமையும் அரசின் பொறுப்பில் இருக்கின்றது. அதைத்தான் நான் இந்த மன்றத்திலே சொல்லிக் கொண்டிருக்கின்றேன் என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொத்தாம் பொதுவாகக் குறை சொல்லக் கூடாது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, இல்லை, proof...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து அந்த Indian Express பத்திரிகையிலே, யாராவது பணம் வாங்கியிருந்தால்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** எவ்வளவு பணம் வாங்கினார்கள் என்று அந்தப் பத்திரிகையில் இருந்தால் அதைப் படித்துக் காட்டட்டும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். செய்தி வந்திருக்கின்றது. அதனுடைய உண்மைத் தன்மையை நீங்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** செய்தி வந்திருக்கின்றது. அதனுடைய உண்மைத் தன்மை என்ன என்பதை நீங்கள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மானியக் கோரிக்கையிலே...

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர், அந்தப் பத்திரிகையிலே ஏதோ செய்தி வந்திருப்பதாகச் சொல்கிறார். இதே வாசகத்தை அவருடைய கட்சியினுடைய தலைவி அறிக்கையில் விட்டிருக்கின்றார் வெளியிலே இருந்து. அதையே இவர் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார். ஆக, வெளியிலே வருவதையெல்லாம் பேசிக்கொண்டிருந்தீர்கள் என்றால், பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு உறுப்பினர் பேசுகிறபோது ஒரு பத்திரிகையை ஆதாரம் காட்டலாம். நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று ஏற்றுக்கொண்டு பேசினால் தப்பு இல்லை. ஆனால், பொறுப்பேற்றுக்கொள்ளாமல் பேசுவது அவ்வளவு சரியல்ல.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியில் மாண்புமிகு அம்மா அவர்களிடமிருந்து அறிக்கை வந்திருக்கின்றது, அதை இங்கே உறுப்பினர் சொல்லிக் கொண்டிருக்கின்றார் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். வெளியில் அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களும் அறிக்கை விட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அது அவர்களுடைய ஜனநாயகக் கடமை. அதை மறுப்பதற்கு உங்களுக்கும் உரிமை இருக்கிறது. அதை நீங்கள் மறுத்துக்கொள்ளுங்கள். அறிக்கை வாயிலாக. ஆனால், நான் எனக்கு வருகின்ற செய்தியை இங்கே சொல்கின்றேன். குற்றச்சாட்டு இருக்கின்ற அளவுக்கு நான் உங்களை வந்து புள்ளிவிவரங்களைக் கொடுங்கள் என்று கேட்கவில்லை. குற்றச்சாட்டாக நான் உங்களுக்கு அதைச் சொல்லவில்லை. செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அந்தச் செய்தியின் உண்மைத் தன்மைகளை நீங்கள் அறிந்து, புரிந்து ஆட்சியில் நடவடிக்கை எடுங்கள் என்று பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக, ஜனநாயக ரீதியில் இந்தச் சட்டமன்றத்தில் தெரிவிக்க வேண்டிய (மேசையைத் தட்டும் ஒலி) பொறுப்பும், கடமையும் எங்களுக்கு இருக்கின்றது என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



முற்பகல் 11-50

இந்தக் குற்ற நிகழ்வுகள் எந்த அளவிற்குப் போய்க் கொண்டிருக்கின்றன
ன்பதற்குப் பத்திரிகைகள்தான் — ஏனென்றால், அதிகாரிகள் எந்தச்
செய்தியையும் எதிர்க்கட்சிக்காரர்களுக்குக் கொடுக்கமாட்டார்கள். ஆகவே,
த்திரிகையில் வந்த செய்தியை நான் இங்கே புத்தகமாக
வைத்திருக்கின்றேன். அதையும் சட்டப் பேரவைத் தலைவரிடம்
கொடுக்கின்றேன், அதையும்கூட நீங்கள் விசாரித்து, எந்த அளவிற்குச்
ட்டம்–ஒழுங்கு தமிழ்நாட்டில் ஒரு சீர்கேடான நிலைக்குப் போய்க்
கொண்டிருக்கின்றது என்பதனை ஆய்ந்து, அறிந்து நடவடிக்கை எடுக்க
வேண்டிய பொறுப்பு அரசு ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றவர்களுக்கு
இருக்கின்றது என்பதைத்தான் நான் இங்கே சொல்லிக்கொள்ளக்
டமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மதுவிலக்கு
மானியக் கோரிக்கையும்
ற்றும் ஆயத்தீர்வையினுடைய
டுக்கப்பட்டிருக்கின்றது. எனக்கு முன்னாலே பேசியவர்கள் பல்வேறு
கேள்விக்கணைகளை இங்கே தொடுத்திருந்தார்கள். அதற்குத் தக்க
விளக்கம் அளிக்க ஒரு வாய்ப்புத் தர வேண்டும்.

2001 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப்
பொறுப்பேற்றவுடன் வீழ்ந்து கிடந்த தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை
நிலை நிறுத்தப் பல்வேறு வகையான பொருளாதாரச் சீர்திருத்த
நடவடிக்கைகளை அனைத்துத் துறைகளிலும் மேற்கொண்டார்கள்
என்பதனை நாடு நன்றாகவே அறியும். அந்த நேரத்தில்தான் இந்தியத்
தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களின் மொத்த விற்பனையை
டாஸ்மாக்கும், சில்லரை விற்பனையைத் தனியாரும் நடத்தி வந்தனர்.
சில்லரை விற்பனை நடத்தி வந்தவர்களில் பெரும்பாலானோர் —
நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் ஜி.கே. மணி அவர்கள்
சொன்னதுபோல, எதற்கு அதிகமான கடைகளை, டாஸ்மாக் மூலமாக
அதிகமான கடைகளைத் திறந்திருந்தார்கள் என்று சொன்னார்கள். இதற்கு
முன்னால் தனியார்வசம் இருந்த சில்லரை விற்பனைகள், மூன்று
ஆண்டுகளுக்கு நாம் அவர்களுக்கு ஏலத்தின் மூலமாகத் தருவது
வாடிக்கையாக இருந்தது.

முதல் ஆண்டில் கிட்டத்தட்ட 7 ஆயிரம், 8 ஆயிரம் கடைகளை
அவர்கள் ஏலத்தில் எடுப்பார்கள். அதே நபர்களுக்கு நாம் அந்தக்
கடைகளைப் புதுப்பித்துக் கொடுக்கின்ற ஒரு நடைமுறை இருந்தது.
இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளில் புதுப்பித்துக் கொடுக்கக்கூடிய ஒரு

சூழ்நிலை இருந்தது. 10 per cent–டோ, 15 per cent–டோ அரசு நிர்ணயித்த விலைகளில் அவர்களுக்கு நாம் புதுப்பித்துக் கொடுத்துக் கொண்டிருந்தோம். முதல் ஆண்டு எடுத்த சில்லரை விற்பனையாளர்கள், இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளில் அதற்குப் பாதியாக, 8 ஆயிரம் கடைகளை முதல் ஆண்டில் அவர்கள் ஏலம் எடுத்திருந்தார்கள் என்றால், இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளில் அதை 4 ஆயிரம் என்ற அளவிற்கு அவர்கள் கீழே கொண்டு போனார்கள். ஏனென்று சொன்னால், அவர்களுக்குள் ஒரு வணிகக் கூட்டணி ஏற்படுத்திக்கொண்டு, அரசுக்கு வர வேண்டிய வருமானத்தை அவர்கள், ஒரு பகுதியில் 10 கடைகள் இருந்தால், அந்த 10 கடைகளுடைய உரிமையாளர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, அவர்களுக்குள் ஒரு வணிகக் கூட்டணியை ஏற்படுத்திக்கொண்டு, 5 கடைகளைத்தான் ஏற்படுத்துகின்ற ஒரு சூழ்நிலை இரண்டு ஆணடுகளில் இருந்தது.

கடந்த 23 ஆண்டுகளாக இந்தக் கதை தொடர் கதையாக இருந்தது, அவற்றையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் தீவிரமாக ஆய்வு செய்துதான், அரசுக்கு வரவேண்டிய, நியாயமாக வர வேண்டிய வருவாய் தடுக்கப்படுகின்றது என்பதனைக் கவனத்தில் கொண்டுதான், மாண்புமிகு அம்மா அவர்கள், மொத்த விற்பனைசெய்து கொண்டிருந்த டாஸ்மாக் நிறுவனமே, சில்லரை விற்பனையையும் எடுத்து நடத்தும் என்ற ஒரு புரட்சிகரமான கொள்கை முடிவினை எடுத்தார்கள் என்று இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அந்த வகையில் ஒரு கொள்கை முடிவை எடுத்ததற்குப் பின்னால், அந்தக் கொள்கை முடிவின்படி அரசிற்கு எந்த அளவிற்கு வருவாய் வருகின்றது என்பதனை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 1996 ஆம் ஆண்டு முதல் 2000–2001 ஆம் ஆண்டு முடிய அரசினுடைய வருவாயாக– – இந்த ஆயத்தீர்வையில் அரசினுடைய வருவாயாக 12,715.98 கோடி ரூபாய் என்ற அளவிலிருந்த ஆண்டினுடைய வருவாய், 2001–2002 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு முடிய 21,945.9 கோடி ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அளவிற்கு உயர்ந்து, கிட்டத்தட்ட 9,229 கோடி ரூபாய் அதிக இலாபம் வருகின்ற ஒரு சூழ்நிலை மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கையால் உருவாக்கப்பட்டது. இந்த இடைப்பட்ட அதிக இலாபம், அதெல்லாம், இதற்கு முன்னாலே சொன்னேனே, வணிகக் கூட்டணி அமைத்துக் கொண்டவர்களுடைய கைகளுக்குச் சென்றது.



அதை அரசின் கஜானாவிற்குக் கொண்டு வந்த பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும் என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 11–55

எனக்கு முன்னாலே பேசிய நம்முடைய சில மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகின்றபோது, சில நடைமுறைகளில், சில பேர் உங்களுடைய டாஸ்மாக் சலுகைகளைக் கொடுத்தது என்ற கருத்தினை இங்கே பதிவு செய்து இருக்கின்றார்கள். நாங்கள் யாருக்கும் எந்தச் சலுகையும் தரவில்லை. 1998 ஆம் ஆண்டு, அதாவது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில், கொள்முதல் கொள்கையில், அதாவது, டாஸ்மாக் மொத்த நிறுவனம், விற்பனையாளர்களுக்கு அவர்கள் வேண்டுகின்ற சரக்கு எந்த முறைப்படி வழங்கப்பட்டதோ, அந்த நடைமுறைப்படிதான் நாங்கள் அவர்களுக்கும்– –இன்று வரை அந்த நடைமுறைதான் நடந்துகொண்டு இருக்கின்றது என்பதனை நானும் இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவர்கள் ஒவ்வொரு மாதமும்.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவா கடந்தகால ஆட்சியிலே எந்தவிதமான தவறுமே நடைபெறவில்லை எல்லாம் முறையாக நடந்தது என்று சொல்கிறார்கள். கடந்த கா ஆட்சியிலே டாஸ்மாக் நிறுவனத்திற்கு, மிடாஸ் என்ற நிறுவனத்தின்மூல மதுபானங்கள் supply செய்யப்பட்டன. ஆனால், அந்த நிறுவனம் எப்படி செயல்பட்டது என்றால், நம்முடைய அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட அளவைவிடக் கூடுதலாக உற்பத்தி செய்தது. இரண்டாவது உற்பத்தியாகக்கூடிய கழிவு நீரைச் சுத்திகரிப்புச் செய்து மறுசுழற்சி செய் வாரியத்தால் செய்யப்பட்ட அறிவுரைகள் எதுவு செயல்படுத்தப்படவில்லை. அபாயகரமான திடக்கழிவு தொழிற்சா வளாகத்தில் வைக்கப்பட்டு இருக்கும் விவரம் குறித்து, உரிய தகவ பலகை வைக்கப்படவில்லை. இதற்கு நிர்வாகம் Notice கொடுத்தபோ – இந்த நிர்வாகத்திற்கு Notice கொடுத்தபோது, 25–8–2006 வரையி எந்தவிதப் பதிலும் வரவில்லை என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** Clarification, clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நம்முடைய சட்டமன்ற எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், இந்த ஆயத்தீர்வை சம்பந்தமாகப் பேசுகின்றபோது இந்த மன்றத்திலே பேசிய சில உறுப்பினர்கள், நாங்கள் ஆட்சியிலே இருக்கின்றபோது சிலருக்குச் சலுகை செய்ததாக இங்கே பதிவு செய்தார்கள், அதற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன் என்று சொல்லி, நேற்று நாங்கள் சொன்ன குற்றச்சாட்டுகளை நினைவு கூர்ந்தார்கள். அதில் அவர்கள் நாங்கள் சொன்ன குற்றச்சாட்டிற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், பட்டுக்கோட்டைக்கு என்ன வழி என்று கேட்டால், கொட்டைப் பாக்கு என்ன விலை என்று (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். சொல்ல விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கையிலே அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) அதாவது, உங்கள் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அதாவது, எங்களுடைய குற்றச்சாட்டு என்னவென்றால், அவர்களுக்கு இந்த விஷயங்கள் எல்லாம் நன்றாகத் தெரியும். ஏன் என்றால் அவர்கள்தான் இதிலே உள்ள கணக்கு வழக்குகளை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆகவே, அவர்களுக்கு இந்தப் புள்ளிவிவரங்கள் எல்லாம் நன்றாகத் தெரியும். Registered Brand என்று வைத்து இருக்கிறார்கள். I.M.F.L–லேயும் வைத்து இருக்கிறார்கள். பீர்லேயும் வைத்து இருக்கிறார்கள். Registered Brand–ல்தான் நம்முடைய டாஸ்மாக் கொள்முதல் செய்கிறது. இதிலே 2003-ல் திடீரென்று சில நிறுவனங்களிடமிருந்து அவர்கள் கொள்முதலே செய்யாமல், ஏன் என்று சொன்னால் – நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், வருடத்திற்கு 18 இலட்சம் case beer விற்கிறது. ஆனால், ஒரு சில Registered Brand–லே அவர்கள் 2003-க்குப் பிறகு வாங்கவில்லை. ஏன் வாங்கவில்லை? அதற்கு எந்தவிதமான written உத்தரவும் கிடையாது. அந்தத் துறையிலே பொறுப்பிலே இருந்த அமைச்சர் என்ற முறையிலே, அந்தக் கணக்கு வழக்குகளை நன்றாகத் தெரிந்தவர் என்ற முறையிலே அதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி இருக்கின்றார்கள். அதாவது, 1998-ல் என்ன நடைமுறை இருந்ததோ, அது என்ன Brand–ஆக இருந்தாலும், 3 மாதத்திற்கு முன்பாக, சில்லரை விற்பனைக் கடைக்காரர்கள், அவர்கள் டாஸ்மாக்கினுடைய மொத்தக் கொள்முதலில் இருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. Automatic–ஆக Computer–ல் feed ஆகிவிடும். Previous 3 மாதம். அந்த 3 மாதத்தில். எந்த Brand அதிகமாக விற்பனை ஆகியிருக்கிறதோ. அந்த Brand, அந்தக் கம்பெனிக்குத்தான் அடுத்த மாதம் அவர்களால் கேட்கப்படுகின்ற மாதத்தில் automatic–ஆக. ஒவ்வொரு Brand–க்கும் ஒவ்வொரு கம்பெனிக்கும் எவ்வளவு கொள்முதல் கொடுக்கப்பட வேண்டும் என்பது automatic–ஆக அது Computer–ல் feed ஆகி விடும். உங்களுடைய கொள்முதல் எவ்வளவு என்பது நிர்ணயிக்கப்படுகிறது, Computer-தான் நிர்ணயிக்கிறது. ஆகவே, இதில் தவறு நடப்பதற்கு -- வேறு இடத்திலே வேண்டுமானால் திருத்தலாம். இதையெல்லாம் நாம் திருத்த முடியாது. ஆகவே, இதில் தவறு நடப்பதற்கு எந்தவித அடிப்படையும்... (குறுக்கீடுகள்)

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிடாஸ் கம்பெனிக்கு இதுபோன்ற விதிமுறைகள் பின்பற்றப்பட்டிருந்தால் அவர்களுடைய விற்பனை அதிகம்... (குறுக்கீடு) நான் புள்ளிவிவரம்கூட சொல்கிறேன். புள்ளிவிவரம் கொண்டு வந்து மாதா மாதம் எவ்வளவு உயர்ந்து இருக்கிறது என்பதைச் சொல்கிறேன். அதற்கு மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறாரா? மாதா மாதம் எவ்வளவு உயர்ந்திருக்கிறது? மற்றவற்றிற்கு முன்பு 3 மாதங்களுக்கு விற்ற சராசரியை விட எவ்வளவு குறைந்திருக்கிறது? இதற்கு எப்படி ஏறி இருக்கிறது என்பதை ஒப்பிட்டு நாளைக்கே இந்தச் சட்டமன்றத்திலே உங்களிடத்தில் நான் வைக்கிறேன். அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறாரா? சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிடாஸ் என்ற கம்பெனிக்கு நாம் புதிதாக உரிமம் வாங்கினோம். ஏற்கெனவே இந்த கம்பெனிக்கு எந்தக் குறைபாடும் இல்லை. புதிதாக ஒரு கம்பெனி ஆரம்பிக்கப்பட்டு அவர்கள் வியாபாரத்தில் அவர்களுடைய விற்பனை என்ன, அதாவது வாடிக்கையாளர்கள் என்ன Brand அவர்கள் வாங்கி நுகர்வோர் நடத்துகின்றார்களோ, அந்த Brand தான் total கொள்முதல் கிடங்குகளுக்கு automatic-ஆகப் போகிறது. Sales ஆகிற வேலையும் வந்து automatic-ஆக டாஸ்மாக் கடைகளுக்கு, மொத்தக் கிடங்குகளுக்குச் சென்றடைகிறது. அதனடிப்படையில்தான் அதனுடைய Brand-கள் ஒதுக்கப்படுகின்றன. இதில் யாருக்கும் எந்தவிதச் சலுகையும் காட்டப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் அந்த 6 நிறுவனங்களுடைய உரிமையாளர்களை அழைத்துக் கூட்டம் நடத்தினோம். அந்தக் கூட்டத்தில் அவர்களுடைய குறைகள் ஏதாவது இருக்கின்றதா என்று நாங்கள் கேட்போம். எந்தக் குறையும் இல்லையென்று அவர்களே அந்தக் கூட்டத்தில் ஒப்புதல் அளித்து, கையெழுத்துப் போட்டு, எந்தக் குறையும் அவர்களால் இதுவரைக்கும் பதிவு செய்யப்படவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு உதாரணமாக... (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு. (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். யாரும் குறுக்கிட்டுப் பேசாதீர்கள். நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்களும், சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களும் ஒரே மாவட்டமாக இருப்பதால் மௌனம் சாதிக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதாவது 29-11-2003 முதல் 30-4-2006 வரை .. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன மணி, என்ன? (குறுக்கீடு) சொல்லட்டும். சொல்லட்டும். (குறுக்கீடுகள்) அவர் சொல்லட்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் மிடாஸ் கம்பெனிக்கு வழங்கப்பட்டதாகச் சொல்கிறார். ஆனால், அதற்கு முன்பு எந்த கம்பெனிக்கும் நாங்கள் உரிமம் 'வழங்க மாட்டோம் என்று சொன்னார்களே, சொல்லிவிட்டு, பிறகு ஏன் மிடாஸ் கம்பெனிக்கு வழங்கினார்கள்? எதற்காக வழங்கினார்கள் என்பதை அவர் விளக்க வேண்டும். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி. உட்காருங்கள். அவர் பதில சொல்லட்டும். பதில் சொல்வார். மற்ற உறுப்பினர்கள் பேசாதீர்கள். (குறுக்கீடு) அரி, அமைதியாக இருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த கம்பெனிக்கும் உரிமம் வழங்க முடியாது என்று நாங்கள் எந்த நேரத்திலும் சொல்லவில்லை. இதற்கு முன்னால் கோலீஸ் என்ற டிஸ்ட்டலரி கம்பெனிக்கும் உரிமம் வழங்கப்பட்டிருக்கின்றது. அவர்களும் உற்பத்தி செய்தார்கள். தானியங்களிலிருந்து மதுவைப் பிரித்து எடுக்கின்ற ஆலைக்கு உரிமம் கேட்டார்கள், கொடுத்தோம். அவர்களும் ஆல்கஹால் உற்பத்தி செய்தார்கள். அந்த ஆல்கஹாலை அவர்கள், இங்கே மதுபானங்களை உற்பத்தி செய்யவில்லை. அவர்கள் ஏற்றுமதிக்கு அனுமதி கேட்டார்கள், ஏற்றுமதியில் நாங்கள் தீர்வை போடுவோம் என்று அரசு சார்பாகச் சொன்னோம். தீர்வை கூடாது என்று சொன்னார்கள். அந்த வழக்கு, வழக்காடு மன்றத்தில் இருக்கிறது. உரிமம் வழங்கப்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே மாண்புமிகு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஒரு குறிப்பிட்ட கம்பெனிக்கு அதிக்க் கொள்முதல் வழங்கப்பட்டிருக்கின்றது என்ற கூற்றினை மறுக்கின்றேன். உதாரணமாக, அதாவது சில்லரை விற்பனையை டாஸ்மாக் எடுத்துக் கொண்டதற்குப் பின்னால், 29-11-2003 முதல் 30-4-2006 வரை 6 நிறுவனங்கள் தங்களுடைய எந்த அளவுக்கு மதுபானங்கள் கொள்முதல் செய்து இருக்கிறார்கள் என்பதற்கு உதாரணமாக, பாலாஜி என்ற நிறுவனம் 117.59 இலட்சம் பெட்டிகளும், சிவா என்ற நிறுவனம் 106.23 இலட்சம் பெட்டிகளும், Midas 89.47 இலட்சம் பெட்டிகளும், Mohan Breweries 85.88 இலட்சம் பெட்டிகளும், SAFL 68.20 இலட்சம் பெட்டிகளும், Empee Distilleries 44.46 இலட்சம் பெட்டிகளும் -- இதில் முன்னிலையில் இருப்பது இன்றைக்கு இருக்கின்ற பாலாஜிதான் அன்றைக்கும் முன்னிலையில் இருந்தது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதைப்போல இன்னொரு விளக்கத்தையும்கூட இங்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 40 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இன்னும் 10 நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். அனைத்து கம்பெனிகளுக்கும், உரிமைதாரர்கள் தருகின்ற. அதாவது 82 சதவிகிதம் 180 ml. தான்—Total sales-ல் (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். 180 ml. தான் அதிக sales ஆகிறது. அந்த 180 ml. தயார் செய்கின்ற கம்பெனிகளில், எல்லா கம்பெனிகளும் 64 ரூபாய்தான் அடக்க சில்லரை விலை என்று முடிவு செய்திருக்கின்றன. ஆனால், இங்கே குறிப்பிட்ட கம்பெனி என்று சொல்லுகின்ற அந்த கம்பெனிக்கு 63 ரூபாய், அதைக்காட்டிலும் ஒரு ரூபாய் குறைவாகத்தான் அடக்க விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொண்டு. அதிக விலை நிர்ணயம் செய்யப்படவில்லை என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருகின்றேன்.

அடுத்ததாக, தீயணைப்புத் துறைமீது சில கருத்துகளை நான் இங்கு பதிய வைப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். தீ என்ற சொல்லே பயமுறுத்துகின்ற சொல்லாகத்தான் தெரிகிறது. வதந்தி என்பதைக்கூட வதந்தீ என்றுதான் சொல்வார்கள். பல குடும்பங்களில் குழப்பத்தை ஏற்படுத்துகின்ற சந்தேகத்தைக்கூட சந்தேகத் தீ என்று கூறுவார்கள். அவ்வளவு ஆபத்தான விஷயம் தீ. அந்த ஆபத்தைத் தடுக்கும் துறை, எரியும் தீயை அணைக்கும் துறை, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் சிறப்பாகச் செயல்பட்டது. உலகையே திரும்பிப் பார்க்க வைத்தது சுனாமி நிகழ்ந்தபோது. தியாக உணர்வு கொண்ட துறை. தீ விபத்தைத் தவிர வேறு விபத்துகள், அவை மழை, வெள்ளம், புயல், நிலச்சரிவு போன்ற பேரழிவுகளில் இருந்து... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், அவர் உரையை முடித்துவிடப் போகிறார். (குறுக்கீடு) உரையை முடிக்கப் போகிறார். (குறுக்கீடு) சரி, அவர் என்ன சொல்கிறார் என்று கேட்போம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒன்றும் இல்லை, ஒரே ஒரு விஷயம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்புத் துறையைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அவர்களது ஆட்சிக் காலத்தினுடைய சிறப்புகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். தீ என்றால் எப்படிப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால், அவர்களுடைய தீய ஆட்சிக்



காலத்திலேதான் தீயாய்ப் பற்றி எரிந்தது என்பதை இப்போது நினைவுபடுத்த விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசுகிறார். (குறுக்கீடுகள்) ஒரே நேரத்தில் 60 பேரும் எழுந்து சத்தம் போடக் கூடாது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஆகவே, இயற்கைச் சீற்றங்களில் இருந்து மக்களைக் காப்பாற்றுகின்ற, மனிதாபிமானமிக்க துறையாக, சேவை எண்ணம் கொண்ட துறையாக, அதாவது காக்கும் பணி எங்கள் பணி. இதுதான் இத்துறையின் கொள்கை. சுனாமி வந்தபோது தமிழகம் தவித்தது, வெள்ளம் வந்தபோது தண்ணீரில் தத்தளித்தது. வீடுகளை இழந்து, உடைமைகளை இழந்து, உறவுகளை இழந்து, உயிர்களையும் இழந்து தமிழக மக்கள் கலங்கி நின்றபோது, கை கொடுத்து, காப்பாற்றியது, அவர்களின் கண்ணீரைத் துடைத்தது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான் என்பதை நான் இங்கே சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குத் தோள் கொடுத்தவர்கள், துணை நின்றவர்கள் என்ற பெருமையில் தீயணைப்புத் துறைக்குப் பெரும் பங்கு உண்டு என்பதனை யாரும் மறக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இயற்கைப் பேரிடர் எப்போது வரும், எப்படி வரும் என்பதை எவராலும் சொல்ல முடியாது. அந்த இயற்கைப் பேரிடரான மழை, வெள்ளம், தீ, புயல், நிலச்சரிவு, பூகம்பம் ஏற்படும்போது போர்க் கால அடிப்படையில் மக்களைக் காப்பாற்றுகின்ற துறைதான் தீயணைப்புத் துறை. தீயணைப்புத் துறையினருக்குக் கொடுத்த ஊக்கத்தாலும், அம்மா அவர்களுடைய காலத்தில் அது மிகச் அறிவுரையாலும், சிறப்பாகச் செயல்பட்டது. யாரும் எதிர்பாராத சுனாமி வந்தபோது தமிழகம் தவித்தது. வரலாறு காணாத வெள்ளம் வந்தபோது தமிழகமே தண்ணீரில் தத்தளித்தது. சுனாமி வந்தபோது 8,000-க்கும் அதிகமானோர் மரணம் அடைந்தார்கள்.

பிற்பகல் 12-10

தமிழக மக்கள் கலங்கி நின்றபோது, மற்ற, மற்ற மாநிலங்களெல்லாம் செய்வதறியாது திகைத்தபோது, அம்மா அவர்கள் சுனாமி, வெள்ளம் வந்த பகுதிகளுக்கு நேரில் சென்று, தனித்தனியாக குழுக்களாகப் பிரித்து தீயணைப்புத் துறையினை முடுக்கிவிட்டார்கள். ஆயிரக்கணக்கானவர்களின் உயிரைக் காப்பாற்றி, அதிகமானவர்களின் சடலங்களை மீட்டு, பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சரி செய்து,

போர்க் கால அடிப்படையிலே உதவிகளைச் செய்து, ஒரு மாதத்திற்குள்ளாக சகஜ நிலைக்குக் கொண்டு வந்தது தீயணைப்புத் துறை.

சுனாமி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்குக் கை கொடுத்துக் காப்பாற்றி, அவர்களின் கண்ணீரைத் துடைத்ததும் மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசுதான் என்பதை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய அரசு மட்டுமன்றி, இந்த உலகமே வியந்து பாராட்டியபோதும், இங்குள்ள சிலருக்கு ஏனோ பாராட்டுவதற்கு மனமில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தத் துறையின்மேல் கொண்ட அக்கறை, அதனால்தான் பாதுகாப்பிற்கும், மக்கள் நலனுக்கும் முக்கியத்துவம் கொடுக்க தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆணையம் இந்தியாவிலேயே முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்டதும் அம்மா அவர்களின் ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் துறைக்குத் தேவையான கருவிகள் வாங்க அனுமதி அளித்ததும் அம்மா அவர்கள்தான். சில உதாரணங்களாக, தீயணைப்புத் துறையில் கோட்ட அலுவலர்களாக முதன்முதலாக இரண்டு பெண்களை அனுமதித்தவரும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையில் பணிபுரிபவர்களுக்கு, பணியிலிருக்கும்போது இறந்த பணியாளர்களுக்கு குழுக் காப்பீட்டுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி, 1994 ஆம் ஆண்டு முதல் ரூபாய் ஒரு இலட்சம் வழங்க ஆணை பிறப்பித்தவர்களும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். பணியின்போது இறக்கின்ற தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையைச் சேர்ந்த வீரர்களுக்கு ரூபாய் 2 இலட்சம் வழங்கி வந்ததை, ரூபாய் 5 இலட்சமாக உயர்த்தி ஆணை வழங்கியவர்களும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

பணியிலிருக்கும்போது இறந்த – ஊனமடைந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூபாய் 50,000/–த்தை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கியவரும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.

பணியாளர்களுக்கு வழங்கப்படும் உணவுக் கட்டணத் தொகையினை, காவல் துறைப் பணியாளர்களுக்கு இணையாக ரூபாய் 9-லிருந்து 50–ஆக உயர்த்தியவரும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.



சென்னையில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு உணவுக் கட்டணத் தொகை ரூபாய் 50-லிருந்து 80 ரூபாயாக உயர்த்தி ஆணை வழங்கியவரும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் வாராந்திர உபரிப் படியினை காவல் துறைப் பணியாளர்களுக்கு இணையாக ரூபாய் 10-லிருந்து 50 ரூபாயாக உயர்த்தியதும், பின்னர் ரூபாய் 50-லிருந்து 100 ரூபாயாக உயர்த்தி ஆணை வழங்கியவரும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.

2001 ஆம் ஆண்டு முதல் ஆண்டுக்கு தீயணைப்புத் துறைக்கு 100 குடியிருப்புகள் கட்டித் தர வேண்டுமென்ற அரசினுடைய கொள்கை முடிவை, 200 குடியிருப்புகளாகக் கட்டிக் கொடுக்க ஆணையிட்டவர்களும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்கு 2001 முதல் 2003 வரை 34 கட்டடங்களை ரூபாய் 6 கோடி செலவிலும், 2003–2004 ஆம் ஆண்டுகளில் 15 கட்டடங்களை ரூபாய் 3.56 கோடி செலவிலும் அமைத்ததும், 2002–2004 ஆம் ஆண்டுகளுக்கிடையில் சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தினரால் 1,041 பேர்கள் தீயணைப்போராக நியமனம் செய்யப்பட்டதும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் என்பதனை நான் இந்தச் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, இன்றைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகளான உள் துறை, அதன் கட்டுப்பாட்டிலே இருக்கின்ற காவல் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகிய இந்தத் துறைகளில் எந்த அளவிற்கு சாதனைகள் மாண்புமிகு அம்மா அவர்கள் காலத்தில் நிகழ்த்தப்பட்டன என்பதனையும், இன்றைக்குப் பொறுப்பேற்றிருக்கின்ற அரசு, அந்தத் துறைகளின்மீது எந்த அளவிற்குக் கவனம் செலுத்த வேண்டும் என்பதனையும் நான் இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றேன்.

நீண்ட நெடிய நேரம் என்னுடைய உரைக்கு அனுமதியளித்த (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம் (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 53 நிமிடம் பேசியிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 53 நிமிடம் பேசியிருக்கிறீர்கள். இல்லை, எவ்வளவு நேரம் கொடுத்தாலும், வெளியிலே சென்று, 'நேரம் தரமாட்டேன் என்கிறார்கள், நேரம் தரமாட்டேன் என்கிறார்கள்' என்று குறை சொல்கிறார்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது நான் குறுக்கிட வேண்டாம் என்று நினைத்தேன். ஏனென்று சொன்னால், அவர் நீண்ட அனுபவம் பெற்றிருக்கின்ற காரணத்தினால், அவர் உரையிலே தவறு இருக்காது என்று எண்ணினேன். ஆனால், சென்ற ஆட்சிக் காலத்திலே — இவர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டு 100 நாட்களுக்குள்ளாக குற்றங்கள் பெருகியிருக்கின்றன என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே இப்போது F.I.R. போடப்படுகிறது. சென்ற ஆட்சிக் காலத்திலே, அன்றைக்கு இருந்த ஒரு D.G.P., அன்றைக்கு உளவுத் துறையிலே இருந்த ஒரு D.I.G., இவர்கள் ஆணையின்படி, எந்தக் குற்றங்களைப் புகார் செய்தாலும், அதிலே F.I.R போடக் கூடாது என்ற ஒரு வாய்மொழி ஆணை (மேசையைத் தட்டும் ஒலி) பிறப்பிக்கப்பட்டு, அதற்குப் பின்னாலே, இந்த அவையிலே,. காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது நான் பேசுகின்றபோது, 48 குற்றங்கள், சங்கர் நகர் காவல் நிலைய சரகத்திலே இந்தக் குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன, அவற்றிற்கு F.I.R. இல்லை. தாம்பரத்திலே இருக்கின்ற bridge-க்குக் கீழே 8 கொலைகள் நடந்திருக்கின்றன, அதற்கும் F.I.R. இல்லை என்று 48 குற்றச்சாட்டுகளை இந்த அவையிலே பதிவு செய்து, அதற்கு முதலமைச்சர் அவர்களுடைய பிரிவிலேயிருந்து, உங்களுடைய இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு F.I.R. போடப்படவில்லை என்று சொல்லியிருக்கிறீர்கள், அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சரே கைப்படக் கடிதம் எழுதியிருக்கின்றார். அதனாலே, சென்ற ஆட்சிக் காலத்திலே F.I.R.-என்பதே போடப்படவில்லை. ஆனால், இப்போது F.I.R. போடப்படுகிறது. குற்றங்கள் என்ன என்று தெரிகிறது. F.I.R. போடாமல் குற்றங்களைக் குறைத்துக் காட்ட வேண்டுமென்று இவர்கள் ஏற்பாடு செய்தார்கள்



என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தேவையான, முக்கியமான, இந்த அரசு சட்டம்-ஒழுங்கை எப்படிக் காத்திடுகிறது என்பதற்குச் சான்றான ஒரு செய்தியை முதலில் தெரிவித்துவிட்டு, என் உரைக்கு வருகின்றேன்.

நேற்றையதினம், திண்டுக்கல் மாவட்டத்தில், தந்தை பெரியார் சிலைக்கு ஏற்பட்ட ஒரு களங்கம் குறித்து, நான் இங்கே உரையாற்றும்போது, அதற்குக் காரணமானவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்று அறிவித்தேன். அவ்வாறே, அச்சம்பவத்திற்குக் காரணமான குற்றவாளிகள், தர்மராஜ் என்பவரும், தட்டுவண்டி மணி என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய விடுதலைச் சிறுத்தைகளின் சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் செல்வம் அவர்கள், கடந்த கால ஆட்சியிலே தன்மீது போடப்பட்ட உண்மைக்கு மாறான வழக்குகளை C.B.I. விசாரித்து வருகிறது என்பதையும், உண்மையை வெளியிலே கொண்டு வர விரைந்து முயற்சிகளை அரசின் சார்பில் சட்டப்படி எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் இங்கே உரையாற்றும்பொழுது வைத்தார். இங்கே வைக்கப்பட்டுள்ள பல்வேறு கோரிக்கைகளில் அது ஒரு முக்கியமான கோரிக்கை; உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய கோரிக்கை. அதிலும், இந்த அவையிலே உள்ளவர்களில் ஒருவர் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், பரிகாரம் தேட வேண்டிய கோரிக்கை; பரிகாரம் தேடுவோம் என்ற உறுதியை நான் (மேசையைத் தட்டும் ஒலி) செல்வம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவருடைய புள்ளி விவரங்கள் ஒரு சில வேறுபடுகின்றன என்பதற்கு ஒரேயொரு சான்றினை மாத்திரம் இங்கே தர விரும்புகின்றேன். சாதிக் கலவரத்தில் 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரையில் அ.தி.மு.க. ஆட்சியில், அதைப்போல, 1996 முதல் 2001 வரையில் தி.மு.க. ஆட்சியில் என்று அவர்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227425
சென்னை-600 008

வகுத்துக்கொண்டு, எத்தகைய நிகழ்வுகள் என்று சொன்னார். அதிலே, ஒரு திருத்தத்தோடு இந்தப் புள்ளிவிவரத்தை அவருக்கு நான் பிழைத் திருத்திச் சொல்ல விரும்புகின்றேன். 1991–1996 அ.தி.மு.க. ஆட்சியில் சாதிக் கலவர நிகழ்வுகள் 337. 1996–2001, தி.மு.க. ஆட்சியில் 269. 337–ஐவிட 269 குறைவு என்று நான் சொல்லத் தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பெரிய வித்தியாசம் இல்லை என்பதற்காக இதைச் சொல்கின்றேன்.

பிற்பகல் 12-20

அந்தக் கலவரத்திலே இறந்தவர்கள், 1991–1996-- இந்தக் காலக்கட்டத்தில் 189 பேர், அ.தி.மு.க. ஆட்சியில்; 1996–2001 தி.மு.க. ஆட்சியில் 182 பேர். காயமடைந்தோர், அ.தி.மு.க. ஆட்சியில், 1991–1996-ல், 2,048 பேர்; தி.மு.க. ஆட்சியில் 964 பேர். இந்தத் தொகை அதிகமாக காயமடைந்தவர்களுடைய பட்டியலிலே காட்ட முடிகின்றது. ஒருவேளை இதை நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் படித்திருப்பாரேயானால், அவருடைய நண்பர்கள் மேசை உடைகின்ற அளவிற்குக் கைதட்டி, '2,048 பேர் அதிகம், நம்முடைய காலத்திலேதான் காயமடைந்திருக்கிறார்கள்' என்று பாராட்டி மகிழ்ந்திருக்கக் கூடும். (மேசையைத் தட்டும் ஒலி) காவலர்களை, அம்மா ஆட்சியிலேதான் உன்னதமான இடத்திற்கு, உயர்ந்த இடத்திற்கு, சிறப்பான இடத்திற்கு, இட்டுச் சென்றதைப்போல எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய பேச்சு அமைந்திருந்தது. அது அப்படித்தான் அமைய வேண்டும். அந்த வகையிலே, அந்தப் பேச்சு அமைந்திருந்தது. இன்று காலையிலேயிருந்து எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்கள் ஒவ்வொருவரும் நீண்ட நேரம் தங்களுடைய கருத்துகளை இந்த மானியத்திலே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில், அந்தக் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் நண்பர் கோ.க. மணி அவர்கள் உரையாற்றும்பொழுது, உதவிக்கு இன்னொரு நாதஸ்வரத்தையும் அழைத்துக்கொண்டார். எப்பொழுதுமே இரட்டை நாதஸ்வரம் எடுப்பாக இருக்கும் என்பதற்காக, செல்வத்தையும் அழைத்துக்கொண்டார். அவரும் சேர்ந்து, நாதஸ்வரம் வாசித்து, களை கட்டியது. எவ்வளவு களை கடந்த காலத்திலே இருந்தது காவல் துறையிலே என்பதும் எடுத்துக்காட்டப்பட்டது.

நம்முடைய அம்மையார் யசோதா அவர்கள், காங்கிரஸ் கட்சியின் சார்பாக, தன்னுடைய கருத்துகளை இங்கே எடுத்து வைத்து,



தன்னுடைய தொகுதிக்கு என்னென்ன தேவை என்பவற்றையெல்லாம் கோரிக்கைகளாக இங்கே வைத்திருக்கின்றார்கள்.

நம்முடைய நண்பர், ம.தி.மு.க. சார்பில் பேசிய நண்பர், தமிழகத்திலேயிருந்து நம்மையெல்லாம் வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்று, வெளிநாட்டுக் காட்சிகளையெல்லாம் காட்டி, தமிழகத்திற்குக் கடைசிக் கட்டத்திலே வந்து, நேரம் இல்லாத காரணத்தால் அதை முடித்துக்கொண்டார்; பரவாயில்லை. அவர் என்ன சொல்ல வந்தார் என்பது எனக்குத் தெரியும், எனக்குப் புரியும் என்ற காரணத்தால், நான் அவரை எங்கேயாவது சந்திக்கின்ற நேரத்தில் உண்மையைச் சொல்ல நிச்சயமாகத் தயாராக இருக்கிறேன். அப்படிப்பட்ட சந்தர்ப்பம் எனக்கு வாய்க்குமோ, வாய்க்காதோ என்று எனக்குத் தெரியாது. ஆனால், என்ன நடந்தது, எத்தகைய சூழ்நிலையிலே இப்படிப்பட்ட ஒரு கற்பனை கட்டிவிடப்பட்டது என்பவையெல்லாம் காவல் துறைக்கும் தெரியும்; எனக்கும் மிக நன்றாகத் தெரியும்.

இந்த விவாதத்திற்கு இடையே நம்முடைய செல்வம் அவர்கள். அவர் பட்ட வேதனைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல, தனக்கு ஒரு வழிகாட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். வழிகாட்டுவதற்கு நீதிமன்றம் இருக்கின்றது, சட்டம் இருக்கின்றது. அந்தச் சட்டத்தைச் செயல்படுத்த, நீதியை, உண்மையான நீதியை வரவழைக்க எத்தகைய உதவியையும் செய்ய இந்த அரசு, செல்வம் போன்றவர்களுக்காகத் தயாராக இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

காவலர்கள் அதிமுக. ஆட்சி வந்த பிறகுதான் இத்தகைய உன்னதமான நிலையை அடைந்தார்கள் என்று நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அவர்களுடைய பேச்சிலே குறுக்கிடவில்லை, குறுக்கிட்டால் அவர் நோகக்கூடும், தம்முடைய பேச்சிலும் குறுக்கிடுகிறாரே என்று. அவர்மீது எனக்குள்ள அன்புக்குக் காரணம், அவருடைய பெயர் பன்னீர்செல்வம் என்ற பெயர், இன்று, நேற்றல்ல, என்னுடைய பால பருவத்திலேயே கவர்ந்த பெயர். ஏனென்றால், இதே அவையில் மூதறிஞர் இராஜாஜி அவர்கள், முதலமைச்சராக இருந்த அந்தக் காலத்தில் எல்லாம், Premier–பிரதமர் என்றுதான் பெயர். இந்தி கட்டாயம் என்பதை இங்கே கொண்டு வந்தபோது, பன்னீர்செல்வம் அவர்கள் அதை எதிர்த்து

காரசாரமாகப் பேசிய நேரத்தில், இராஜாஜி அவர்கள் பன்னீர்செல்வத்தைப் பார்த்து, "யார் இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கிறார்கள்? இரண்டே பேர்தான்; ஒருவர் சோமசுந்தர பாரதியார்; இன்னொருவர் நீங்கள்" என்று சொன்னார்கள். சொன்னவுடனே, பன்னீர்செல்வம் சொன்னார்: "இரண்டு பேர்தான் எதிர்க்கிறோம்; ஆனால், கொண்டு வருவது நீங்கள் ஒருவர்தான், (மேசையைத் தட்டும் ஒலி) majority நாங்கள்தான்" என்று சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, தந்திரமாக, மிகச் சாதுர்யமாக பதிலைத் தந்து, பாராளுமன்றச் சரித்திரத்தில், டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் எழுதிய 'Parliamentarian' என்ற புத்தகத்திலேகூட பன்னீர்செல்வம் இடம் பெற்றிருக்கின்றார்.

அவ்வளவு சாதுர்யம் நம்முடைய பன்னீர்செல்வம் அவர்களுக்கு இருக்கிறதா என்று நான் சொல்லமாட்டேன். ஏனென்றால், அவர் அச்சாதுர்யங்களுக்கெல்லாம் போகக்கூடியவர் அல்ல; சாது! (மேசையைத் தட்டும் ஒலி) சில நேரங்களில், சாது மிரண்டால் காடு கொள்ளாது; அதுவும் எனக்குத் தெரியும். சூது வாது அறியாத சாது! (பலத்த சிரிப்பு) அதுவும் எனக்குத் தெரியும். அதனால்தான் அவர் இங்கே திரு. வீராசாமி அவர்களும், திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. சுதர்சனம் அவர்களும் குறுக்கிட்டபோதெல்லாம், அவருடைய பதிலைப் பார்த்தால், அவர் சாதுதான் என்பதை நிரூபிக்கின்ற அளவிற்கு அவருடைய பதில்கள் எல்லாம் அமைந்தன என்பதை நீங்கள் அனைவரும் மிக நன்றாக அறிவீர்கள்.

நான் என்ன சொல்ல வந்தேன் என்றால், காவலர்கள், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இப்பொழுது இருக்கின்ற நிலை, உயர்ந்த நிலைதான், நான் இல்லை என்று மறுக்கவில்லை. கடந்த கால ஆட்சியிலே, முதலமைச்சராக இருந்த அம்மையார் அவர்கள், கூடுமான வரையிலே தொழிலாளர்களுக்கு, ஆசிரியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு நன்மைகளைச் செய்தாலும், செய்யாவிட்டாலும், அதற்கு மாறாகத் துன்பங்களை விளைவித்திருந்தாலும்கூட, அவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்குரிய ஒரு படை, காவல் துறை படைதான் என்ற காரணத்தால், அந்தக் காவலர் படையைக் கைக்குள்ளேயே வைத்து இருந்தார். அதற்கு ஏற்ப, காவலர் படைக்குத் தேவையான நன்மைகளை எல்லாம் நிறையச் செய்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் இன்றைக்குக் காவல் துறை, அம்மையார் அவர்களைப் புகழ்ந்தும், போற்றியும், இன்றளவும் அவர் சொல்கிற கட்டளைகளை நிறைவேற்றியும், எதிர்க்கட்சிகளை எப்படியெல்லாம் வேட்டையாட வேண்டுமோ, அப்படியெல்லாம் வேட்டையாடியும், யார் யார்மீது



என்னென்ன வழக்குகளைப் போட வேண்டுமோ, அந்த வழக்குகளையெல்லாம் போட்டும், ஒரு பெரிய நிலைக்கு அந்தத் துறை வந்து இருக்கிறது. அந்தத் துறை வசதியாக, வாய்ப்பாக இன்றைக்கு இருக்கிறது. ஆனால், ஒன்றை மறந்துவிடக் கூடாது.

நானும், பேராசிரியரும், இந்த அவைக்கு வந்து 50 ஆண்டு காலம் ஆகிறது. 1957 ஆம் ஆண்டு குளித்தலை தொகுதியிலே போட்டியிட்டு வெற்றி பெற்று, இந்த அவையிலே நுழைந்த நான், இடையிலே ஓரிரு மாதங்கள் இலங்கைப் பிரச்சினைக்காக இராஜினாமாச் செய்துவிட்டு வெளியிலே இருந்தேனே அல்லாமல், பாக்கி நேரமெல்லாம், இந்த அவையிலே இருந்திருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, எனக்கு இந்த அவையிலே 50 ஆண்டு கால அனுபவம் உண்டு. அதை வைத்துச் சொல்லுகின்றேன்; கடந்த கால ஆட்சியிலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே காவலர்களுக்கு நீங்கள் ஆயிரம் கோடிதான் ஒதுக்கினீர்கள். இப்பொழுது நாங்கள் 5 ஆயிரம் கோடி ஒதுக்கியிருக்கிறோம் என்றெல்லாம் சொல்லும்பொழுது எனக்கே ஒரு கவலை. இப்பொழுதுதான் இந்த மண்டபத்தைப் புதுப்பித்தோம், மேஜை, நாற்காலிகளை எல்லாம் போட்டோம், இந்த அடி அடிக்கின்றார்களே, மறுபடியும் பழுதுபார்க்க வேண்டுமே என்கின்ற அளவிற்கு, கவலை ஏற்படக்கூடிய அளவிற்கு மேசையைத் தட்டுகிறீர்கள், மகிழ்ச்சியடைகிறேன்.

பிற்பகல் 12-30

நான்கூட இங்கே என்னுடைய நண்பர்களைப் பார்த்துச் சொல்வேன். 'நீங்கள் எல்லாம் சரியாகச் சாப்பிடுவது இல்லையா? அவர்கள் எப்படிச் சாப்பிட்டுவிட்டு வருகிறார்கள், பாருங்கள்' (சிரிப்பு) என்று சொல்வது உண்டு. அந்த அளவிற்கு அடி அடிக்கிறீர்கள்; அப்படி மகிழ்ச்சியடைகின்றீர்கள். ஆனால், இந்த மகிழ்ச்சியடைவதற்கு, காவல் துறை இவ்வளவு களிப்போடு இருப்பதற்கு, ஏற்கெனவே இருந்த ஆட்சி காரணம் என்று நீங்கள் சொன்னாலும்கூட, இதனுடைய ஆரம்பம் எப்படி இருந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

உங்களுக்கு நான் ஒன்று சொல்ல வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் 1967 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வருவதற்கு முன்பு காவலர்களுடைய நிலை என்ன? நான் அன்றைக்கு இருந்த எந்த ஆட்சியையும் குறை கூறுவதற்காக இதைச் சொல்லவில்லை. அன்றைக்குப் பெருந்தலைவர் காமராஜருடைய தலைமையிலே ஆட்சி இருந்தது. பக்தவத்சலத்தினுடைய பார்வையிலே ஆட்சி இருந்தது, நிருவாகம்

இருந்தது. சி. சுப்பிரமணியம் அவர்களுடைய நிருவாகப் பொறுப்பிலே ஆட்சி இருந்தது. இதே அவையில் எங்கள் காதுகளிலே ஒலித்தது, சி. சுப்பிரமணியம் அவர்கள் கையிலே budget புத்தகத்தை எடுத்துக்கொண்டு படித்தார். படிப்பதற்கு முன் சொன்னார்; இன்றைக்கு நான் சதம் அடிக்கப் போகிறேன். century அடிக்கப் போகிறேன் என்றார். என்ன பொருள் தெரியுமா? 100 கோடி ரூபாய் budget. அவ்வளவு பெருமையாக அன்றைக்குச் சொன்னார். 100 கோடி ரூபாய் budget, அதைப் படிக்கப் போகிறேன் என்று சொன்னார். 1957, 1958, 1960 இந்த ஆண்டுகளில் 100 கோடி ரூபாய் அளவுக்கு இருந்த budget தான் இன்றைக்கு 20,000 கோடி ரூபாய், 30,000 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. எனவே, முன்பு 3,000 கோடிதான் ஒதுக்கினீர்கள், இப்பொழுது 5,000 கோடி ஒதுக்கியிருக்கிறீர்கள் என்று சொல்வதில் எல்லாம் பொருள் இல்லை. அவ்வப்பொழுது வருமான உயர்வு, வரி உயர்வு, வரிகளால் ஏற்படுகின்ற வருமானம், இப்படிப் பல வகைகளிலே கிடைக்கின்ற வருமானங்கள், ஒரு ஆட்சியிலே பொருளாதாரம் அவ்வப்போது பெருகிப் பெருகி, ஆயிரம், பத்தாயிரம், இலட்சம், கோடி என்கின்ற அளவுக்குப் பெருகும். இல்லாவிட்டால் 100 கோடி ரூபாய் budget இன்றைக்கு 30,000 கோடி ரூபாய் budget ஆக உருவாகியிருக்கிறது என்றால் என்ன காரணம்? எண்ணிப் பார்க்க வேண்டும்.

அந்த 100 கோடி ரூபாய் budget இருந்த காலத்தில் ஒரு காவலருடைய சம்பளம் என்ன? அவர்களுடைய வாழ்க்கை எப்படி இருந்தது? நானே ஒரு நாடகத்தில் ஒரு பாட்டு எழுதி, அப்பொழுது சிக்கிக் கொண்டேன். 'உதய சூரியன் ' என்கின்ற நாடகம்; அரசியல் நாடகம். பக்தவத்சலம் அவர்கள், அந்த நாடகத்தைத் தடை செய்து, "ஏன் தடை செய்தேன் தெரியுமா?" என்று இந்த அவையிலே விளக்கமும் கொடுத்தார். 'போலீஸ்காரர்களை அரசுக்கு எதிராகத் தூண்டிவிடக் கூடாது; அப்படித் தூண்டிவிடுகின்ற பாட்டு இதிலே இருக்கிறது; ஆகவேதான் தடை செய்தேன்' என்று இங்கே சொன்னார். நான் அவருக்கு நேராகவே, "நீங்கள் தடை செய்த பாட்டைப் பாடிக் காட்டுகிறேன், பாருங்கள்!" என்று இங்கே அந்தப் பாட்டைப் பாடிக் காட்டினேன். உங்களுக்கும் பாடிக் காட்டுகிறேன். பாடியல்ல, படித்துக் காட்டுகிறேன். பாடினால், பசி நேரம் என்று போய்விடுவீர்கள்! (சிரிப்பு)

"ஆராரோ! ஆரிராரோ! ஆணழகா கண் வளராய்!" என்று போலீஸ்காரனுடைய மனைவி தன்னுடைய குழந்தையைப் போட்டுத் தாலாட்டுகிறாள்.



"அஞ்சு பத்து சம்பளத்தில் மிஞ்சுவதில் வளர வந்த
அஞ்சுகமே கண் வளராய்!
போலீசு வேலைக்கென்று போகின்ற நொப்பனுக்கு,
புத்திரனாய் வந்துதித்த தரித்திரமே கண் வளராய்!
துப்பாக்கி எடுத்துக்கிட்டு போகின்ற நொப்பனிடம்
பழம்பாக்கி கேட்டுக்கிட்டு வழி மறிக்கும் கடன்காரன்
வருகின்ற காட்சிகளைக் காணாமல் கண் வளராய்!
நாடாளும் மந்திரிகள் நலியாமல் வாழ்வதற்கு
ஓடாகத் தேய்கின்ற அப்பாவின் புத்திரனே!
குருவிக் கூடான வீட்டுக்குள்ளே தவழுகின்ற குல விளக்கே!
கொசுக்கடிக்கு அஞ்சாமல் குவளை மலர் கண் வளராய்!
காக்கி உடை போட்டுக்கிட்டு சேப்புத் தொப்பி மாட்டிக்கிட்டு
நாட்டைக் காக்கும் வீரனுக்கு உன்னைப் போல
நாலு வந்து பிறந்துவிட்டால்.... காவி உடை வேணுமடா....
கமண்டலமும் தேவையடா.... கண்மணியே ! கண்வளராய்!"

பிற்பகல். 12-35

இது பாட்டு. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இது ஒரு காவல் துறை நண்பருடைய வீட்டிலே உள்ள வறுமை, இல்லாமை, இந்தக் கொடுமையை அவருடைய மனைவிமூலமாக, அந்தக் குழந்தையின் தாய் மூலமாக எடுத்துக்காட்டுகின்ற பாட்டு. இதை பக்தவத்சலம் தடை செய்தது நியாயம்தான். நானாக இருந்தால்கூட தடைதான் செய்திருக்க வேண்டும். வேறு என்ன வழி? ஏனென்றால், இது காவல் துறையைத் தூண்டிவிடுகின்ற அளவிற்கு இருக்கின்ற பாட்டு என்பதால். தடை செய்யப்பட்டு, 'உதய சூரியன்' நாடகமே எங்கும் நடத்த முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது அப்போது.

நாங்கள் தந்திரசாலிகள்; 'உதய சூரியன்' என்பதை 'இளைஞன் குரல்' என்று மாற்றி நடத்திக்கொண்டிருந்தோம். அது வேறு விஷயம். இதற்குப் பிறகு, இந்த அவல நிலைக்குப் பிறகு, ஆட்சிக்கு வந்தோம். ஆட்சிக்கு 1967 ஆம் ஆண்டு வந்தோம் என்றால், எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு, அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நான்,

1969–ல் பொறுப்பேற்றவுடன், முதலில் நான் எழுதினேனே தாலாட்டு, நினைவிலே பதிந்திருந்த காரணத்தால், பாடியதோடு இருக்கக் கூடாது; பரிகாரமும் தேட வேண்டும் என்பதற்காக, முதன்முதலாக நான் அமைத்த கமிஷன்தான் திரு. ஆர்.ஏ. கோபாலசாமி, I.C.S. தலைமையிலே அமைக்கப்பட்ட போலீஸ் கமிஷன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய பரிந்துரைகள் 133. அந்த 133 பரிந்துரைகளில் என் தலைமையில் இருந்த கழக அரசு ஏற்றுக்கொண்ட பரிந்துரைகள் 115. (மேசையைத் தட்டும் ஒலி) அதன் பிறகு, தொடர்ந்து 1989–ல் திரு. பி. சபாநாயகம், I.A.S. தலைமையில் இரண்டாவது போலீஸ் கமிஷன். பரிந்துரைகள் 112. நடைமுறைப்படுத்தியது 87.

1996 ஆம் ஆண்டு, மத்தியிலே ஐந்தாவது ஊதியக் குழு வந்தது. இந்தியாவிலேயே, மத்தியிலே போடப்பட்ட ஐந்தாவது ஊதியக் குழுவினுடைய சிபாரிசுகளை முதன்முதலாக ஏற்றுக்கொண்ட ஒரு மாநில அரசு உண்டென்றால், (மேசையைத் தட்டும் ஒலி) அது தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

1969–ல் காவலர் ஊதியம் எவ்வளவு தெரியுமா? அடிப்படைச் சம்பளம் 70 ரூபாய். 70 ரூபாய் என்று இருந்த அடிப்படைச் சம்பளம் 200 ரூபாய் என்று ஆனது. ஆய்வாளர் ஊதியம் ரூபாய் 180 என்பது ரூபாய் 425 என்று ஆனது. பொதுவாக, இரண்டாம் நிலைக் காவலர்களுடைய அடிப்படை ஊதியம், 1996–ல் 825 ரூபாயாக இருந்தது, 3,050 ரூபாயாக உயர்த்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) உதவி ஆய்வாளர்களுடைய அடிப்படை ஊதியம் – S.I. –– 1,600 ரூபாய் என்ற அளவிற்கு இருந்தது, 5,300 ரூபாய் என்று உயர்ந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த உயர்வுகள், படிப்படியாக உயர்ந்து உயர்ந்து, கண்காணிப்பாளர் – S.P.–யினுடைய சம்பளம், 12 ஆயிரம் ரூபாய் என்கிற அளவிற்கு உயர்ந்தது. அஃதன்னியில், காவலர்களுக்குச் சலுகைகளாகப் பயணப் படி, மருத்துவப் படி, இடர்ப் படி, சிறப்புப் படி, சீருடைப் படி என பல படிகள் உயர்த்தி வழங்கப்பட்டன.

1969 ஆம் ஆண்டு முதல், காவல் துறையிலே சிறந்த பணியாற்றுவோருக்கு அண்ணா பதக்கம்—தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது. ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இந்தப் பதக்கத்தைக் காவல் துறையிலே பெற்றுள்ளார்கள்.



1974 ஆம் ஆண்டு வரை காவலர்கள் அணிந்து வந்த அரைக்கால் சட்டையை முழுக்கால் சட்டையாக ஆக்கி, முழங்காலை மறைத்திருப்பது (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

அதன் பின்னர், காவலர்கள் அணிந்து வந்த சிகப்புத் தொப்பியும், பெரியதாக இருந்த shoe–வும், கழக ஆட்சியிலேதான் மாற்றப்பட்டன என்பதையும் நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வீட்டு வசதி வாரியத்தின் சார்பாகக் கட்டப்பட்ட வீடுகளைப் பற்றி இங்கே சொல்லப்பட்டது. அம்மையார், முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களுடைய ஆட்சியில் 1991 முதல் 1996 வரை 48 கோடி ரூபாய் செலவில் 3,001 குடியிருப்புகள் கட்டப்பட்டன, காவலர்களுக்காக. 1996 முதல் 2000 வரை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நான்கு ஆண்டுகளில் 190 கோடி ரூபாய் செலவில் 12,602 குடியிருப்புகள் கட்டப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-40

காவல் துறையில் நிர்வாக வசதிக்காக, பெரிய மாவட்டங்களைப் பிரித்து, இரண்டு காவல் துறை மாவட்டங்களாக உருவாக்கியதும் கழக ஆட்சியிலேதான். 1973 ஆம் ஆண்டு, முதன்முதலாக மகளிரை, காவல் துறையிலே சேர்ப்பதற்கான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆணையைப் பிறப்பித்ததும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு திரு. அருள் அவர்கள் I.G.–ஆக இருந்த காலத்தில் இந்த அருமையான சாதனையை நிறைவேற்ற முடிந்தது. அதனுடைய தொடர்ச்சியாக இன்றைக்கு ஆயிரக்கணக்கானவர்கள், அனைத்து மகளிர் காவல் இல்லங்கள், இவையெல்லாம் வந்திருப்பதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இவையெல்லாம் ஒரு ஆட்சியினுடைய படிப்படியான வளர்ச்சிகள் என்பதை யாரும் மறுக்க முடியாது; பாராட்டாமல் இருக்கவும் முடியாது. நீங்கள் செய்தீர்கள் என்பதற்காக, அந்த அம்மையார் செய்தார்கள் என்பதற்காக அதை அருவருக்கிற, அதைப் பற்றித் தவறாகக் கூறுகின்ற தரங்கெட்டவன் அல்ல நான் என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவலர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக, காவலர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டதும் திராவிட முன்னேற்றக் கழக

ஆட்சியிலேதான். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு காவல் துறை, இந்த ஆட்சி பொறுப்பேற்றது முதல், மாநிலத்திலே சட்டம்–ஒழுங்கை, எந்தவொரு தொய்வும் இல்லாமல் இப்போது பாதுகாத்து வருவதை அனைவரும் அறிவீர்கள். மாநிலம் முழுவதும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் மிகுந்த கவனம் செலுத்தி, ஆங்காங்கே குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ரவுடிகள், கொள்ளையர்கள், வழிப்பறிக் கொள்ளையர்கள் மற்றும் திருடர்கள் ஆகியோரைக் கைது செய்து, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்து, பொது அமைதியைக் காவலர்கள் செம்மையாகப் பராமரித்து வருகின்றார்கள். இந்த நடவடிக்கைகளால், குற்றங்கள் நிகழ்வது மாநில்த்தில் வெகுவாகக் குறைந்து இருக்கிறது என்பதற்கும் சில ஒப்பீடுகளை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

2001–2006 வரையில், ஐந்து வருடத்தில், ஆதாயக் கொலைகள் அ.தி.மு.க. ஆட்சியில், 2001–ல் மே, ஜூன், ஜூலை ஆகிய மூன்றே மாதங்களில் 19 கொலைகள்; 2006, இப்போது மே, ஜூன், ஜூலையில் 17 கொலைகள். ஆதாயமற்ற வேறு கொலைகள், அ.தி.மு.க. ஆட்சியில் 2001–ல் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த மே, ஜூன், ஜூலை ஆகிய அந்த மூன்று மாதங்களில் 521; தி.மு.க. ஆட்சியில் இந்த மூன்று மாதங்களில் 344. கொள்ளைகள், அப்போது அ.தி.மு.க ஆட்சியில் மூன்று மாதங்களில் 49; இப்போது 35. வழிப்பறி, அப்பொழுது 218; இப்பொழுது 112. கன்னக்களவு, இப்போது 863, இந்த மூன்று மாதங்களில். அன்றைக்கு அ.தி.மு.க. ஆட்சியில், அந்த மூன்று மாதங்களில் கைதட்டக்கூடிய அளவிற்கு 1,860. திருட்டுகள், தி.மு.க. ஆட்சியிலே 3,384; அ.தி.மு.க. ஆட்சியில் 4,958. வரதட்சணைக் கொடுமைகள், இப்பொழுது 31; அப்பொழுது 59. மகளிருக்கு எதிரானவை 311 குற்றங்கள்; மகளிருக்கு எதிரான குற்றங்கள் அ.தி.மு.க. ஆட்சியில் 522. கலவரங்கள், தி.மு.க. ஆட்சியில், இந்த மூன்று மாதங்களில் 476; அ.தி.மு.க. ஆட்சியில், அந்த மூன்று மாதங்களில், ஆட்சிக்கு வந்த மூன்று மாதங்களில் 885. ஆகவே, இந்தக் குற்றங்களில் சற்றேற ஒன்றிரண்டு, பத்து, இருபது என்கின்ற அளவிற்கு வித்தியாசங்கள் இருப்பதால், இவற்றை வைத்தே இந்த ஆட்சியையும், அந்த ஆட்சியிலே இருக்கின்ற காவல் துறையினுடைய கடமைகளையும், அவர்களுடைய பணிகளையும் அளவிட்டுவிட முடியாது.

அந்தந்த நேரத்திற்கு, சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு, சில பல நடக்கின்றன. அவற்றை வைத்தே, இதனால்தான் இது உயர்ந்த ஆட்சி, இது தாழ்ந்த



ஆட்சி என்று கணக்கிட நான் தயாராக இல்லை. நான் அதைப் பற்றிக் கிண்டல் செய்யவும், கேலி செய்யவும் தயாராக இல்லை.

*பிற்பகல் 12-45*

மாநிலத்திலே இந்த ஆண்டு இதுவரையில் 83 சதவிகிதம் சொத்து வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 72 சதவிகிதச் சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன. மதுவிலக்கு, சொத்து வழக்கு, ரவுடித்தனம் போன்றவற்றில் ஈடுபட்ட 242 நபர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள். மேலும், கொலை, கொள்ளை மற்றும் பல வழக்குகளில் சம்பந்தப்பட்ட ரவுடிகள், உருண்டை ராஜன் என்கிற ராஜா, நாகூர் மீரான், செந்தில்குமார் ஆகியோரைக் காவல் துறையினர் கைது செய்ய முயற்சித்தபோது, அவர்களைத் தாக்கிவிட்டுத் தப்பிக்க முயன்றதால், சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்ச்சிகளும் சட்டம்–ஒழுங்கைக் காப்பாற்றுகிற வகையிலே நடத்தப்பட்டுள்ளன.

'குளித்தலை மீனாட்சி, குளித்தலை மீனாட்சி' என்ற பெயர் நாள்தோறும் பத்திரிகைகளிலே வந்துகொண்டிருந்தது. பரபரப்பாகப் பேசப்பட்ட, குளித்தலை ஆசிரியை மீனாட்சியினுடைய வழக்கு, 19–10–2004 முதல் கண்டுபிடிக்கவே முடியாமல், மத்தியப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டு, நிலுவையிலே இருந்து வந்தது. தமிழகக் காவல் துறைக்குச் சவாலாக இருந்து வந்த இந்த வழக்கை, இந்த அரசு பதவியேற்ற பிறகு, குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையினர் தீவிரமாகப் புலன் விசாரணை செய்து, துப்புத் துலக்கி, 3–7–2006 அன்று இக்கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளான குமார், சண்முகவேல் ஆகிய இருவரையும் கைது செய்துள்ளது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த மூன்று மாதங்களில், கள்ளச் சாராயம் காய்ச்சுதல், கடத்துதல், விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களில் ஈடுபட்டவர்கள்மீது 25,266 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள்; 'எங்கள் ஆட்சியிலே குறைவாகத்தான் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன; உங்கள் ஆட்சியிலே அதிகமாக வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன' என்று. அதற்கு உட்பொருள் என்ன? நீங்கள் அந்த வழக்குகளையெல்லாம் பதிவு செய்யாமலே விட்டுவிட்டீர்கள்; நாங்கள் பதிவு செய்கிறோம் என்று எடுத்துக்கொள்ளலாம் அல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே,

இந்த ஒப்புநோக்கெல்லாம் தேவையில்லாத ஒப்புநோக்கு என்பதை நான் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு இந்த நேரத்திலே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சுதந்திர தின விழா எப்படி நடைபெறுமோ என்கின்ற அளவிற்கு பகீர், பகீர் என்று வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு, இந்திய நாட்டு மக்கள் திரிந்துகொண்டிருந்த அந்த நேரத்தில், இந்தியாவிலே நடைபெற்ற சுதந்திர தின விழாவானாலும் இங்கே நடைபெற்ற சுதந்திர தின விழாவானாலும் அமைதியாக நடைபெற்றது என்றால், அதற்கு மக்கள் காட்டிய கட்டுப்பாடும், அந்தக் கட்டுப்பாட்டை மேலும் மேலும் ஊக்கப்படுத்திய காவல் துறையினருடைய பணியும் என்பதை யாரும் மறக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

கண்டதேவியிலே தேரோட்டம் என்று வந்ததும், பத்திரிகைகளிலே எல்லாம் பரபரப்பான செய்திகள்; 'தேர் ஓடுமா, கலவரம் நடைபெறுமா' என்றெல்லாம். ஆனால், கண்டதேவி தேரோட்டம் மிக மிக அமைதியாக நடைபெற்றது என்றால், அதற்கு அங்குள்ள அதிகாரிகளும், காவல் துறை நண்பர்களும் காட்டிய அந்தக் கட்டுப்பாட்டு உணர்ச்சியும், ஒழுங்குபடுத்துகின்ற அந்தப் பணியும்தான் அதற்குக் காரணம் என்று சொன்னால், அதை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பொழுது இலங்கையிலேயிருந்து ஒரு பதற்றமான சூழ்நிலையில், நேற்று வரையிலே 12 ஆயிரம் பேர் அகதிகளாக—நான் அன்றைக்கே சொன்னேன்; அகதிகள் என்று சொல்வதற்கு வெட்கமாக இருக்கிறது என்று—தமிழர்கள் ஏதிலிகளாக புகலிடம்தேடி வருகிறார்கள்; இருக்க இடமின்றி வருகின்றார்கள். அப்படி வருகின்றவர்களால், அவர்களுடைய கொதிப்பால், அவர்களுடைய கொந்தளிப்பால், அவர்களுடைய பரிதாபகரமான நிலைமையினால் ஏற்படுகின்ற ஆத்திரத்தால் எதுவும் ஏற்பட்டுவிடாமல், அமைதியைக் காத்து, வருகின்றவர்களையும் வரவேற்று, அவர்களைப் பாதுகாப்பாக இங்கேயுள்ள முகாம்களிலே வைத்து, இன்றளவும் அவர்களை மகிழ்ச்சிகரமாக, ஆறுதலாக — மகிழ்ச்சிகரம் என்று சொல்ல முடியாது ஆறுதலாக — வைத்திருக்கின்ற அந்த அரும்பணியை நம்முடைய அதிகாரிகளும், மிக முக்கியமாகக் காவல் துறை அதிகாரிகளும் இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்ல விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 12–50

ஏதோ அதிகாரிகளையெல்லாம் மாற்றிவிட்டோம் என்று எதிர்த்தரப்பிலேயிருந்து இன்னொரு குரல் கிளம்பியது; 'அதிகாரிகளை மாற்றுவதுதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய பணியாக இருக்கிறது' என்று.

2001–ல் 5 D.G.P.–க்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சியிலே ஒரே ஒரு D.G.P. தான் மாற்றப்பட்டார். அலெக்சாண்டர் இருந்தார், அவர் மாற்றப்பட்டார், அவர் மாற்றப்பட்டு வந்த D.G.P. முகர்ஜி இருக்கிறார், அவ்வளவுதான். எங்கே மாற்றிவிட்டோம்? எங்கேயோ பத்து D.G.P.–க்களை மாற்றிவிட்ட மாதிரி—மாற்றியது அவர்கள்—ஐந்து பேரை. ஐந்து பேர் மாற்றப்பட்டு — D.G.P.–யே ஐந்து பேர் மாற்றப்பட்ட ஒரு சூழ்நிலை அங்கே.

A.D.G.P. 21 பேர் அ.தி.மு.க. ஆட்சியிலே மாற்றப்பட்டிருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சியிலே 15 பேர்தான். I.G. 27 பேர், அ.தி.மு.க. ஆட்சியிலே மாற்றப்பட்டவர்கள்; தி.மு.க. ஆட்சியிலே 20 பேர்தான். S.P. அ.தி.மு.க. ஆட்சியிலே 86 பேர் மாற்றப்பட்டார்கள்; தி.மு.க. ஆட்சியிலே 92 பேர். இதிலே ஒரு 6 பேர்; இந்த 6 பேரை மாற்றியதுகூட, பதவி உயர்வின் காரணமாக இந்த மாற்றம் — transfer ஏற்பட்டது.

D.S.P. 323 பேர் அ.தி.மு.க. ஆட்சியிலே; 332 பேர் தி.மு.க. ஆட்சியிலே மாற்றப்பட்டிருக்கிறார்கள். இதிலே 70 பேர் பதவி உயர்வு காரணமாக மாற்றப்பட்டிருக்கின்றார்கள். Inspectors 309 பேர் அ.தி.மு.க. ஆட்சியிலே; 280 பேர் தி.மு.க. ஆட்சியிலே. இவையெல்லாம் அ.தி.மு.க. ஆட்சியும், தி.மு.க. ஆட்சியும் பதவிப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட முதல் மூன்று மாதங்களில் செய்யப்பட்டவையாகும். ஏதோ தி.மு.க. ஆட்சியிலே வந்ததும், வராததுமாக எல்லோரையும் மாற்றிவிட்டோம், எல்லோரையும் மாற்றிவிட்டோம் என்று சொல்வதும், பத்திரிகைகளிலே அதை வெளியிடுவதும் ஒரு பரபரப்பை ஏற்படுத்துவதும்தான் இவர்களுடைய பிரச்சாரமாக இன்றைக்கு இருக்கிறதே தவிர, வேறொன்றும் இல்லை.

ஒரே மாதத்தில், D.G.P.–யாக இருந்த ஆர். ராஜகோபாலனை மாற்றிவிட்டு, ரவீந்திரநாத் அவர்களை D.G.P.–யாக நியமனம் செய்து, அவரை விட்டு என்னைக் கைது செய்யச் சொல்லி, அந்தக் காரியம் முடிந்ததும், அவரை suspend செய்துவிட்டு, நெயில்வால் அவர்களை D.G.P.–யாக நியமித்து, அதன் பிறகு ராஜகோபாலனை D.G.P.–யாக நியமித்து, 'போன மச்சான் திரும்பி வந்தான்' என்பதைப்போல, போன

அவர், திரும்ப அழைக்கப்பட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு, கோவிந்த் அவர்களை D.G.P.–யாக நியமித்து, பிறகு கோவிந்த் அவர்களையும் மாற்றிவிட்டு, அலெக்சாண்டரை D.G.P.–யாக நியமித்தார்கள் என்றால், அந்த ஹாஸ்ய வெடிகள் எல்லாம், தமிழக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, காவல் துறை நிர்வாகத்திலே வெடிக்கப்பட்டதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அலெக்சாண்டர், பெயருக்கு ஏற்ற உயரம், கம்பீரம், இதெல்லாம் உள்ளவர்தான். ஆனால், ஆட்சி மாறி, அம்மையார் ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், அலெக்சாண்டர் எங்கே போனார்? இராமேசுவரம் கடற்கரைக்கு அனுப்பப்பட்டார். ஒரு நாற்காலிகூட கிடையாது; ஒரு மேசைகூட கிடையாது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே அவர் அங்கே மாற்றப்பட்டார். கடைசியாக அவருக்கு விமோசனம் ஏற்பட்டு, இராமேசுவரத்திலே இருந்த காரணத்தாலோ, என்னவோ, (சிரிப்பு) விமோசனம் ஏற்பட்டு, கடைசியாக வந்து சேர்ந்தார். வந்த பிறகும் அவரை மாற்றிவிட்டார்கள், பிறகு கோவிந்த் அவர்களை அங்கே நியமித்தார்கள். பிறகு அவரும் மாற்றப்பட்டார். இப்படி D.G.P.–யினுடைய நிலைமைகளே இந்தளவுக்கு ஆயிற்று.

*பிற்பகல் 12–55*

நம்முடைய நண்பர் சேகர்பாபு பேசும்போது சொன்னார்; காவல் துறைக்காக, தி.மு.க. ஆட்சியில், 1996–2001 ஆம் ஆண்டுகளில் செலவழிக்கப்பட்டது 3,988 கோடி ரூபாய்தான் என்றும், 2001–2006 ஆம் ஆண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியில் காவல் துறைக்காக 8,000 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டதாகவும் இங்கே கூறினார். கேட்பதற்கு நிரம்ப இனிமையாகத்தான் இருந்தது; பெருமையாகத்தான் இருந்தது. இன்னும்கூட கைதட்டியிருக்கலாம். அது அந்த அளவுக்கு இருந்தது. ஆனால், உண்மை என்னவென்றால், ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை வளர்ந்து கொண்டே வரும்போது, ஒரு ஆட்சி ஐந்து ஆண்டுகளுக்குச் செலவழிப்பதைவிட, அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளில் நிதி ஒதுக்கீடு அதிகமாகத்தான் இருக்கும். அப்படி அது அதிகமாக ஆகியிருக்கலாம். ஆனால், உதாரணமாக 1991–1996–ல் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1,716 கோடி ரூபாய்தான் காவல் துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதை மறந்துவிடக் கூடாது. அதற்கு அடுத்து வந்த ஐந்தாண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், காவல் துறைக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை, 3,988 கோடி ரூபாய். அதற்குப் பிறகு நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியில், 8,000 கோடி ரூபாய் காவல் துறைக்காக



ஒதுக்கப்பட்டது என்று சேகர்பாபு கூறியது எந்த ஆதாரத்தின் அடிப்படையிலே என்று எனக்குத் தெரியவில்லை. நிதித் துறையிலே நான் விசாரித்த வரையில், கடந்த ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் 8,000 கோடி ரூபாய் காவல் துறைக்காக ஒதுக்கப்படவில்லை என்றும், 6,159.20 கோடி ரூபாய்தான் செலவழிக்கப்பட்டது என்றும் நிதித் துறை வாயிலாக எனக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதை சேகர்பாபு அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். எனவே, நிதியொதுக்கீடு உயர்வது, அது அவ்வப்பொழுது இருக்கின்ற நிலைமைகளைப் பொறுத்து, வளர்ச்சியைப் பொறுத்து, பொருளாதார நிலையைப் பொறுத்து. இதை ஒரு பெரிய சாதனையாக ஒப்பிட்டுக் காட்டக் கூடாது என்பதற்காக இதைச் சொல்கின்றேன்.

காவல் துறையின்மீது அம்மையார் அவர்களுக்கு, முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்குள்ள அன்பை, அருளை, இரக்கத்தை, அவர்களுக்காக அவர் காட்டிய, பொழிந்த கருணையைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துக்காட்டப்பட்டது. ஒன்றிரண்டை மாத்திரம், கோப்புகளைச் சான்றாக வைத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா 12–9–2003 அன்று ஓர் அறிக்கையை வெளியிட்டார். அந்த அறிக்கையில், ஈரோடு மாவட்ட ஆயுதப் படைப் பிரிவில் காவலராகப் பணியாற்றிய மயில்சாமி என்பவர், பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும்போது திடீரென்று உடல் சுகவீனமுற்று, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, 11–9–2003 அன்று உயிரிழந்தார். தமக்கு அது மிகுந்த வருத்தம் அளிப்பதாகத் தெரிவித்து, அவரது குடும்பத்திற்கு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள், பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வழங்க உத்தரவிட்டதாகத் தெரிவித்திருந்தார். எப்பொழுது? 12–9–2003–ல். ஒரு இலட்சம் ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளேன் என்று தெரிவித்திருந்தார். இந்த அறிக்கை, 'தினத் தந்தி'–யில் 13–9–2003 அன்று வெளிவந்தது. முதலமைச்சரின் இந்த அறிக்கையில், பாதுகாப்புப் பணியிலே என்று கூறப்பட்டபோதிலும், செல்வி ஜெயலலிதா அவர்களின் பாதுகாப்புப் பணியிலே ஈடுபட்டிருந்தபோதுதான், அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டார். இந்தச் செய்தியும் அதே நாளில் ஏடுகளில் வெளிவந்தது. முதலமைச்சர் அம்மையார் அவர்கள் 12–9–2003 அன்று அறிவித்தவாறு, அந்த ஒரு இலட்சம் ரூபாய் மயில்சாமி குடும்பத்திற்கு வழங்கப்பட்டதா? இல்லை. இதற்கான கோப்பு முதலமைச்சருடைய

அறிவிப்புக்கு, 15 மாதங்களுக்குப் பிறகு, 22–12–2004 அன்று முதலமைச்சர் அலுவலகத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்படுகிறது. 22–12–2004 அன்று அனுப்பப்பட்ட கோப்பு, முதலமைச்சர் அலுவலகத்திலேயிருந்து மீண்டும் திரும்ப வரவில்லை என்றும், இறந்து போன மயில்சாமியின் தாயார் அந்தத் தொகையைக் கேட்டு வலியுறுத்துவதாகவும், கோப்பினைத் திரும்ப அனுப்பக் கேட்டு ஒரு குறிப்பு முதலமைச்சர் அலுவலகத்திற்கு 14–9–2005 அன்று அனுப்பப்படுகிறது. இறந்தது 11–9–2003. முதலமைச்சர் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தது 12–9–2003. இதற்காக ஒப்புதல் கேட்டு, கோப்பு முதலமைச்சர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட தேதி 22–12–2004. அதாவது, 15 மாதங்களுக்குப் பிறகு. இந்தக் கோப்பு, அதற்குப் பிறகு 9 மாத காலம் வரை திரும்பி வராத காரணத்தால், அந்தக் கோப்பை உடனடியாகத் திரும்ப அனுப்பக் கோரி, உள் துறை, முதலமைச்சர் அலுவலகத்திற்குக் குறிப்பு அனுப்பிய தேதி 14–9–2005. அதாவது, 9 மாதத்திற்குப் பிறகு குறிப்பு அனுப்புகிறார்கள்.

இதற்குப் பிறகாவது அந்தத் தொகை வழங்கப்பட்டதா; கோப்பு கையெழுத்திடப்பட்டதா என்றால், இல்லை. 24–1–2006 அன்று மீண்டும் உள் துறையிலேயிருந்து ஒரு கோப்பு தயாரிக்கப்பட்டு, ஒரு இலட்சம் ரூபாய் பாதிக்கப்பட்டவருடைய குடும்பத்திற்கு வழங்க ஒப்புதல் கோரி, முதலமைச்சர் அலுவலகத்திற்கு அனுப்பப்படுகிறது. இறுதியாக அந்தக் கோப்பில் நிதித் துறைச் செயலாளர் 27–1–2006 அன்று கையெழுத்திட்டு, முதலமைச்சர் அலுவலகத்திற்குக் கோப்பு அனுப்பப்பட்டபோதிலும், கடைசி வரை அந்தக் கோப்பில் அப்பொழுது முதலமைச்சராக இருந்த செல்வி ஜெயலலிதா அவர்கள் கையெழுத்திட்டுத் திரும்ப அனுப்பவேயில்லை.

தேர்தல் முடிந்த பிறகு அந்தக் கோப்பு, மீண்டும் ஒப்புதல் பெறாமல் துறைக்குத் திரும்ப அனுப்பப்பட்டது. தற்போது அந்தக் கோப்பு எனக்கு அனுப்பப்பட்டு, 11–6–2006 அன்று கையெழுத்திட்டு அனுப்பியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காவலர்களுக்குக் காட்டப்பட்ட கருணையின் அத்தியாயத்திலே இது ஒரு அத்தியாயம்.

*பிற்பகல் 1–00*

ஜெயலலிதா ஆட்சியில், ஒவ்வொரு நாளும் ஏடுகளில் வரும் புகைப்படங்களைப் பார்த்திருப்பீர்கள். அதாவது, மறைந்த போலீஸ்காரர்



குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வழங்கினார் என்பதற்கான புகைப்படம் அது. தற்போது என்னிடம் ஒரு கோப்பு வந்தது. என்ன கோப்பு தெரியுமா? அவர் முதலமைச்சராக இருந்தபொழுது, 153 காவல் துறையைச் சேர்ந்த நண்பர்களுடைய குடும்பத்தினர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்குவதற்கான அனுமதி வழங்குகின்ற கோப்புத்தான் அது. நான் கேட்டேன்; அந்தக் காவல் துறை நண்பர்களுக்குத்தான் நிதியே வழங்கப்பட்டுவிட்டதே, எதற்காக இப்போது கோப்பு என்று கேட்டேன்.

அதற்கு அதிகாரிகள், முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கோப்பில் கையெழுத்திடாமல், ஆணை பிறப்பிக்காத நிலையிலேயே, 2004–2005 ஆம் ஆண்டுகளில் அத்தனை காலம் காவல் துறை நண்பர்களுக்கு நிதியை வழங்கியிருக்கிறார்கள். அதற்கான கோப்புகள்தான் 153 பேருக்கு நிதியுதவி வழங்குவதற்கான கோப்புகள், என்னிடம் பின்னேற்புக் கையெழுத்துக் கேட்டு வந்துள்ளது. பின்னேற்பு--after issue.

153 கோப்புகளுக்கு பின்னேற்புக் கையெழுத்துக் கேட்டு என்னிடத்திலே வந்தது. இவ்வாறு ஆணையே இல்லாமல், ஒருவருக்கு அல்ல; இருவருக்கு அல்ல; 153 பேருக்கு ஆணையே இல்லாமல் நிதியுதவி செய்யப்பட்டுள்ளது. இதைவிட ஒரு சோகச் சம்பவம் இருக்க முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சருடைய கையெழுத்தே இல்லாமல் நிதியுதவி வழங்கிய அற்புதம், கடந்த ஆட்சியைத் தவிர வேறு எந்த ஆட்சியில் நடைபெற முடியும்?

வீரப்பனைப் பற்றி சாங்கோபாங்கமாகப் பேசி முடித்து விட்டீர்கள். நான் அதற்குமேலே எதுவும் பேச விரும்பவில்லை. ஆனால், அது பற்றிச் சில வழக்குகள் என்மீதும், நம்முடைய 'நக்கீரன்' கோபால்மீதும், வேறு சிலர்மீதும் போடுவதற்காக சில file–கள் தயாரிக்கப்பட்டு, அவற்றிலே முதலமைச்சர் கையெழுத்திட்டு, அந்த வழக்குகளை உடனடியாகத் தொடர வேண்டுமென்று, அது பற்றி விசாரணையெல்லாம் நடைபெற்று, யாரோ ஒருவர், ஒரு போலீஸ் அதிகாரி, கர்நாடகத்திலிருந்து வெளியிட்ட ஒரு புத்தகத்திலே உள்ள ஆதாரங்களையெல்லாம் வைத்து, எனக்குப் பணம் கொடுத்தார்கள் வீரப்பனைக் காப்பாற்றுவதற்காக என்றெல்லாம் சொல்லி, அது அப்பொழுதே, அந்த ஆட்சியிலேயே, அங்குள்ள ஒற்றர்களிடத்திலே அனுப்பப்பட்டு, அவர்கள் நன்கு ஆராய்ந்து, கடைசியாக இதில் எந்த ஆதாரமும் கிடையாது, எந்த சாட்சியமும் கிடையாது, யாரும் இதை ஒத்துக்கொள்ளவில்லை என்று அந்தக் கோப்பு

திருப்பி அனுப்பப்பட்ட கதையையும் நான் உங்களுக்கு மகிழ்ச்சிகரமாக இங்கே சொல்ல விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், பழிவாங்கும் நடவடிக்கைகள் நடைபெறுவதாக நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். எப்படித்தான் இந்த உண்மைக்கு மாறான செய்தியைச் சொல்ல அவருடைய உள்ளம் பண்பட்டதோ என எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

17–5–2001–ல் நீங்கள் ஆட்சிக்கு வந்ததும், தம்பி பரிதி இளம்வழுதி கைது; 26–5–2001–ல் ஆற்காடு வீராசாமியினுடைய தம்பி தேவராஜ் கைது; 27–5–2001–ல் பரசுராமன், முன்னாள் M.P. கைது; ஒரு பாவமும் அறியாதவர் அவர். பார்த்தாலே பசுபோல இருப்பார்; அவர் கைது. 30–5–2001–ல் புரசை ரங்கநாதன் கைது; மறைந்த தாமரைக்கனி கைது. 13–6–2001–ல் வளர்ப்பு மகன் சுதாகரன் கைது; 21–6–2001–ல் திருமாவளவன் கைது; 29–6–2001–ல், நள்ளிரவில், நான் கைது; தொடர்ந்து, அதே நாளில், தம்பி முரசொலி மாறன் கைது; தம்பி பாலு கைது; மு.க. ஸ்டாலின் கைது; மதுரையில் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் கைது; மு.க. அழகிரி கைது; சாலைப் பணியாளர்கள் பணி நீக்கம்; அமைச்சர்கள் வீடுகள் சோதனை; பொன்முடி கைது; 'நக்கீரன்' கோபால் கைது; ESMA சட்டத்தின்படி என்மீதும், எதிர்க்கட்சியினர் மீதும் வழக்கு; இளம் பெண் செரினாமீது வழக்கு. இவ்வளவும், ஆட்சிக்கு வந்த ஒரே மாதத்தில், இரண்டு மாதத்தில் நடைபெற்ற சம்பவங்கள். நாங்கள் இப்பொழுது பழிவாங்குகிறோம் என்று சொல்கின்றீர்களே, எனக்கு என்ன பதில் அளிக்கப் போகின்றீர்கள் என்று எனக்கே தெரியவில்லை.

*பிற்பகல் 1–05*

ஒன்றைச் சொல்ல வேண்டும். ஏதோ நான் பழைய வழக்கை எடுத்துவிட்டேன் என்று கருதக் கூடாது. டான்சி வழக்கு நடைபெற்று, அம்மையார் அவர்கள் அதிலே விடுதலை பெற்றுவிட்டார்கள். அது வேறு விஷயம். விடுதலை பெற்றுவிட்டார்கள். ஆனால், விடுதலை அளித்த நீதிபதி என்ன சொல்லியிருக்கிறார் என்றால், "நீங்கள் உங்கள் மனசாட்சியை நினைத்து, அதற்கேற்ப பரிகாரம் தேடிக்கொள்ளுங்கள்; டான்சி நிலத்தை அரசுக்குத் திரும்ப ஒப்படைத்துவிடுங்கள்", என்று சொல்லியிருக்கிறார்.



இப்பொழுது என்னவாயிற்று? அவர் சொன்னது, 24–11–2003; சொல்லி, அம்மையாரை விடுதலை செய்தார்கள். அவரை விடுதலை செய்த அதே நாளில்தான் என் அருமைக் கண்மணி முரசொலி மாறன் இறந்த நாள். அந்த விடுதலை விழாவைக் கொண்டாட கோபாலபுரத்திலே என்னுடைய வீட்டைச் சுற்றிப் பட்டாசு வெடித்தார்கள். மாறன் அவர்களுடைய சாவு நடக்கும்பொழுதே பட்டாசு வெடித்தார்கள். அதெல்லாம் வேறு விஷயம். அதெல்லாம் அரசியல் நாகரிகத்தினுடைய ஒரு அத்தியாயம். நான் அதற்காகக் கவலைப்படவில்லை.

நான் சொல்ல வருவது, 24–11–2003–ல் தீர்ப்பு. அந்த டான்சி நிலத்தை அரசுக்குத் திரும்ப ஒப்படைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டு, 2003, 2004, 2005 முடிந்து, 2006–ம் வந்துவிட்டது. இதுவரையிலே டான்சி நிலம் திரும்பவும் ஒப்படைக்கப்படவில்லை. அதற்கு இப்போது புதிதாகச் சொல்லப்படுகின்ற காரணம், stamp– 3 கோடி ரூபாய்க்கு ஒட்ட வேண்டுமாம், அதைத் திரும்ப ஒப்படைக்க வேண்டுமென்றால். வாங்கிவிட்டார்கள் அரசாங்கத்திடமிருந்து; திரும்ப ஒப்படைப்பது என்றால், 3 கோடியே 15 இலட்சம் ரூபாய்க்கு stamp ஒட்ட வேண்டும். அதை ஒட்டுவதா, இல்லையா என்று முடிவு எடுக்கவில்லை. File போனால்தான் வராதே! முடிவு எடுத்தால்தானே ஆகும்? ஆகவே, முடிவு எடுக்கவில்லை. இப்போது கடைசியாக நாங்கள் ஒத்துக்கொண்டிருக்கின்றோம். அரசாங்க நிலம் அரசாங்கத்திடம் இருந்தால் போதும்; அதற்காக 3 கோடி ரூபாய் stamp ஒட்டித் தொலைக்கிறோம் என்று (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லியாகிவிட்டது.

ஒன்றே ஒன்று, வீரப்பனைப் பிடித்ததை, பெரிய வீரப்பிரதாபமாகச் சொல்லப்படுகிறது. நான் இல்லையென்று சொல்லவில்லை. வீரப்பனைப் பிடித்தது ஒரு நிகழ்ச்சி; தேவையான நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சிக்கு நானும் மகிழ்ச்சியடைந்தேன் என்பதை, பிடித்த விஜயகுமார் தெரிந்து வைத்திருக்கிறார். விடியற்காலையில் கொடைக்கானலில் உட்கார்ந்து நான் எழுதிக்கொண்டிருக்கின்றேன். எனக்கு telephone call வருகிறது, விஜயகுமார் அவர்களிடமிருந்து. அப்பொழுது அவர் அரசுப் பொறுப்பிலே இருந்தார். நான் அரசுப் பொறுப்பிலே இல்லை. நான் என்னவென்று கேட்டேன். "ஒன்றும் இல்லை Sir, வீரப்பனைப் பிடித்துவிட்டோம், சுட்டுவிட்டோம், கொன்றுவிட்டோம்" என்று சொன்னார்.

செய்தியை எனக்கு முதன்முதலாகச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன வந்தது? நாம் அந்த முயற்சியிலே கடந்த காலத்திலே ஈடுபட்டிருந்தோம் என்பதற்காக, ஒரு வெற்றிச் செய்தியாக அதை என்னிடத்திலே சொன்னார். நான் அதை மறுக்கவில்லை. ஆனால், வீரப்பனை நாங்கள் என்னவோ நண்பராகக் கருதி வைத்திருந்ததைப்போலவும், இங்கே நண்பர்கள் பேசும்போது, அவர் ஏதோ எங்களுடைய கொள்கைப் பரப்புச் செயலாளராக, திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் பிரச்சாரத்திலே ஈடுபட்டவராக எல்லாம் இங்கே பேசினார்கள். திருத்தணி தம்பிகூட மிக வேகமாகத் தலையாட்டுகிறார், 'ஆமாம் பேசினோம்' என்று. தலையாட்டுவீர்கள். இனிமேல் தலையாட்டமாட்டீர்கள். ஆனால், நடந்தது என்ன? எப்படி வீரப்பனை நாங்கள் கருதினோம்? வீரப்பனை நீங்கள் கருதுவதுபோல, நாங்கள் பெரிய கதாநாயகனாகக் கருதினோமா? அவர் பிடிக்கப்பட வேண்டியவர். அவரால் ஏற்படுகின்ற தொல்லைகளிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற நிலையை எடுத்தவர்கள்தான் நாங்கள்.

அப்படி ஒரு நிலை எடுத்து, அவரை உயிரோடு பிடிக்க வேண்டும் என்பதற்காக அவரோடு நக்கீரன் கோபாலைவிட்டுப் பேச்சுவார்த்தை நடத்தச் சொல்லி, பேச்சுவார்த்தை நடத்தி, கடைசியாக வீரப்பன் ஒத்துக்கொண்டான், நான் 2 ஆண்டு காலம், 3 ஆண்டு காலம் சிறைச்சாலையில் இருக்கத் தயார் என்று சொல்லி, இப்போது சொல்கிறேன் உங்களுக்கு; பலருக்குத் தெரிந்திருக்கும். செங்கற்பட்டு பக்கத்திலே உள்ள, மதுராந்தகத்திற்கு அருகிலே உள்ள மரப்பாளையம் கருங்குழி பங்களாவில் அவரைச் சிறை வைப்பது என்றும், வழக்கை நடத்துவது என்றும், அவர்மீது உள்ள கொலை வழக்குகளையெல்லாம் நடத்துவது என்றும், அந்த வழக்குகளுக்கு அவர் ஆஜராவதற்கு ஏற்றபடி அந்தச் சிறையிலே அவரை வைத்திருப்பது என்றும், அதற்கு ஒத்துக்கொண்டு அவர் கைதாவது என்றும், ஒரு குறிப்பிட்ட தேதியிலே அவர் வந்து சரணடைவது என்றும், இவ்வளவு ஏற்பாடுகள் நடந்த பிறகு, என்னவாயிற்று? ஒரு போலீஸ் அதிகாரி வீரப்பனுக்குச் செய்தி அனுப்பினார். 'நீ கருணாநிதியிடத்திலே வந்து சரணடைகிற அன்றைக்குச் சுட்டுக் கொல்லப்படுவாய்! நானே சுடுவேன்' என்று செய்தி அனுப்பிய காரணத்தால், வீரப்பன் அன்றைக்கு வந்து சிக்கவில்லை.

*பிற்பகல் 1–10*

சிக்கியிருந்தால், இன்றைக்கு உயிரோடு இருந்திருப்பார்; தண்டிக்கப்பட்டிருப்பார்; சிறைத் தண்டனை பெற்றிருப்பார்; ஆயுள் தண்டனை பெற்றிருப்பார்; ஒருவேளை மரண தண்டனைகூட



பெற்றிருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால், ஏதோ நாங்கள் அவரைக் காப்பாற்றுவதற்காகவே, எங்களுடைய பிரச்சாரகராக வைத்துக் கொண்டதைப்போலப் பேசுகிறார்களே, என்ன சொன்னார் அவர்?

3–12–1994–ல் துணைக் கண்காணிப்பாளர் சிதம்பரநாதன் என்பவரை வீரப்பன் கடத்திச் சென்றான். 3–12–1994, முதலிலே; முதலிலே இருந்த ஆட்சியிலே. அப்போது, வீரப்பன் போட்ட நிபந்தனை என்ன தெரியுமா? 'அதிரடி போலீஸை வாபஸ் பெற வேண்டும்; என்னைத் தேடும் பணியைக் கைவிட வேண்டும்: என்னுடைய அண்ணன் மாதய்யனை விடுதலை செய்ய வேண்டும்; நான் சரணடைந்தால் என்மீது வழக்கே போடக் கூடாது' என்று அன்றைய நிலையிலே வீரப்பன் அந்தச் சர்க்காரைப் பார்த்துச் சொன்னான்.

கோவை மாவட்ட Collector 4–12–1994–ல் அவர் சொல்கிறார்; எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தது. இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி, தினத்தந்தி, எல்லாப் பத்திரிகைகளிலும் எழுதியதைத்தான், அச்சேற்றியதைத்தான் நான் இங்கே படிக்கிறேன்.

கோவை மாவட்ட Collector 4–12–1994–ல் சொல்கிறார்: 'வீரப்பனால் கடத்தப்பட்டவர்களுடைய உயிரைத்தான் காப்பாற்ற வேண்டும். எனவே, வீரப்பனைத் தேடும் பணி, வீரப்பனுடைய நிபந்தனையின்படி நிறுத்தப்பட்டு விட்டது.' நிறுத்திவிட்டார்கள்; ஏன்? அவர், கொள்கைப் பிரச்சாரகரா அங்கே? அந்தக் கட்சியினுடைய தேர்தல் பிரச்சாரத்திற்காக நிறுத்தினார்களா?

கோவை மாவட்ட Collector 6–12–1994–ல் சொல்கிறார், 'வீரப்பனிடமிருந்து எனக்குச் செய்தி வந்துள்ளது; வீரப்பன் கேட்டுக்கொண்டபடி, வீரப்பனோ, அவரது பிரதிநிதியோ என்னைச் சந்திக்கலாம்.' அவரைச் சந்திக்கலாமாம்! யாரை? Collector–ஐ. 'அவருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது என்ற உறுதி அளிக்கப்படுகிறது; மேலும், பணயமாகப் பிடித்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களைக் கொண்டு செல்லத் தடையும் இருக்காது. அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு விட்டன' என்று கோவை Collector சொல்கிறார்.

திருபர் Collector–ஐ கேட்கிறார்: 'வீரப்பனுடைய தூதுவன் வர அரசுத் தரப்பில் வாகன வசதி செய்து கொடுக்கிறீர்களே! அந்த நிலையிலே, தூதுவன் துப்பாக்கியுடன் வந்து பேசுகிறானே! இது சரியா?'

என்று கேட்கிறார் அந்த நிருபர். Collector சொல்கிறார்: 'அவர் சொந்தப் பாதுகாப்புக்குத் துப்பாக்கியோடு வருகிறார்; காரணம், அவர் காட்டுக்குள் போகிறார், வருகிறார். எனவே, துப்பாக்கி ஏந்துகிறார். அது தவறில்லை' என்று கோவை மாவட்ட Collector சொல்கிறார்.

அவர்தான் அப்படிச் சொன்னார் என்றால், அப்போது தலைமைச் செயலாளர் யார் தெரியுமா? ஹரிபாஸ்கர். அவர் சொல்கிறார்: 'சிறையிலே உள்ள வீரப்பன் கோஷ்டியை, அவருடைய தளபதி பேபி பார்க்க அனுமதிக்கப்பட வேண்டும்; இந்தக் கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்து வருகிறது; இப்போது மிக முக்கியமான முன்னுரிமை, கடத்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களையும் மீட்பதுதான்; விசேஷ அதிரடிப் படைகள் நிறுத்தப்பட்டுவிட்டன; அந்தப் படைகளை அனுப்பினால், வீரப்பன், போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களையும் கொன்றுவிடக்கூடும்; ஆகவே, வீரப்பனைத் தேடும் படலத்தைத் தற்காலிகமாக ஒத்திவைத்திருக்கிறோம்' என்று ஹரிபாஸ்கர், தலைமைச் செயலாளர் சொல்கிறார் என்றால், இதற்கு என்ன பொருள்? ஆகவே, வீரப்பன் பிடிபட்டதிலே யாருக்கும்--இந்த அவையிலே உள்ள யாருக்கும், எந்தவிதமான வருத்தமும் கிடையாது. மகிழ்ச்சியடையமாட்டோம் என்று சொல்கின்ற யாரும் இங்கே இல்லை. ஆனால், இதை வேண்டுமென்றே ஒரு வீரப்பிரதாபமாகக் கருதிக்கொண்டு, மற்றவர்கள்மீது பழி சுமத்துகின்ற காரியத்திலே எதிர்க்கட்சிக்காரர்கள் ஈடுபட வேண்ட ாம் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

நான் முதலிலேயே இங்கே ரகளை நடந்துகொண்டிருக்கும்போதே நம்முடைய பேராசிரியரிடத்திலே சொன்னேன். நான் பேச நேரம் இருக்காது; நேரமும் தேவையில்லை; என்னுடைய அறிவிப்புகளை மாத்திரம் படித்துவிட்டுப் போய்விடுகிறேன் என்றேன். இல்லை, இல்லை. இருந்து, பேசிவிட்டுச் செல்லுங்கள். அறிவிப்புகளை மாத்திரம் படித்துவிட்டுப் போக வேண்டாம் என்று சொன்னார். அவற்றையெல்லாம் இப்போது படிக்கின்றேன்:

தமிழ்நாட்டிலே உள்ள 243 காவல் துறை உட்கோட்டங்களுள் (D.S.P. Office) வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 69 அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட முடிவு செய்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)



*பிற்பகல் 1–15*

முதற்கட்டமாக, இந்த ஆண்டு பத்து அலுவலகமும், குடியிருப்பும் சேர்ந்த கட்டடங்கள், குடியாத்தம், ஆம்பூர், திருப்பத்தூர் (வேலூர் மாவட்டம்) பெண்ணாகரம், அரூர், பொள்ளாச்சி, செய்யாறு, திருவாரூர், சமயநல்லூர், ஆலங்குளம் ஆகிய நகரங்களில் கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறையை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ், ரூபாய் இரண்டு கோடி மதிப்பீட்டில் ஆவடியில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படை இரண்டாம் அணிக்குக் கட்டடம், கிடங்கு, காவலர்கள் தங்குமிடம் ஆகியவற்றைக் கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

திருவள்ளூர், விழுப்புரம், திருவண்ணாமலை, தருமபுரி, கன்னியாகுமரி மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் காவலர்களுக்கான தங்கும் விடுதிகள் கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆண்டு, பின்வரும் 25 காவல் நிலையங்களுக்கான கட்டடங்களின் தரத்தை உயர்த்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. அவையாவன:

வாலாஜாபாத், வேப்பாக்கம், ஆரணி தாலுகா, செய்யாறு, ஒசூர்–சிப்காட், ஒசூர் நகரம், மதிகோண்பாளையம், பி1 பஜார், பல்லடம், பொள்ளாச்சி கிழக்கு, ஆண்டிமடம், வெள்ளியணை, லாலாபேட்டை, சமயபுரம், பி6 அண்ணா நகர், திருவில்லிப்புத்தூர் நகரம், திண்டுக்கல் வடக்கு நகரம், இளையான்குடி, களக்காடு, புதுக்கடை, சின்னமனூர், மூரப்பநாடு, திருமங்கலம் நகரம், இராமநாதபுரம் நகரம், பாளையங்கோட்டை.

இஃதன்னியில், பின்வரும் 12 நகரக் காவல் நிலையங்களுக்கு ரூபாய் 318 இலட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

வந்தவாசி அனைத்து மகளிர் காவல் நிலையம், போளூர் அனைத்து மகளிர் காவல் நிலையம், செங்கம் அனைத்து மகளிர் காவல் நிலையம், பல்லடம் அனைத்து மகளிர் காவல் நிலையம், அம்மையார் ஆரம்பித்தார் என்பதற்காக அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டாமல் விட்டுவிடவில்லை; கட்டுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பீளமேடு, சரவணப்பட்டி, திருவரங்கம் அனைத்து மகளிர் காவல் நிலையம், லால்குடி அனைத்து மகளிர் காவல் நிலையம், திருவாரூர் நகரம், சிலைமான், விக்கிரமங்கலம், எம். பாடுபட்டி.

பின்வரும் 14 ஊரகக் காவல் நிலையங்களுக்கு ரூபாய் 224 இலட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்ட முடிவு:

திருவண்ணாமலை தாலுகா காவல் நிலையம், தூக்கணம்பாக்கம், ஆலங்குடி அனைத்து மகளிர் காவல் நிலையம், ஜெகதாப்பட்டினம், இலுப்பூர், அரும்பாவூர், குன்னம், வடக்காடு, ஆத்தூர், ராதாபுரம், சாத்தான்குளம், களியக்காவிளை, திருப்பூர் ஊரகம், நெகமம்.

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி ஆயுதப் படைப் பிரிவிலுள்ள காவலர்களுக்குத் தங்கும் விடுதி கட்டப்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆயுதங்களை வைக்கும் பாதுகாப்பு அறையும், ஆயுதப் படை வளாகமும் ஒரு கோடி ரூபாய் செல்வில் அமைக்கப்படும்.

சென்னைப் பெருநகரில், வியாசர்பாடி, பழவந்தாங்கல், புழல் ஆகிய காவல் நிலையங்களுக்கு 190 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மருதம் வளாகத்திலுள்ள அதிரடிப் படை பள்ளி, ஆண் மற்றும் பெண் காவல் பணியாளர்களுக்கும், அதிரடிப் படைக்கும், ரூபாய் 144 இலட்சம் மதிப்பீட்டில் தனியான பயிற்சி மையம் ஒன்றும், தங்குமிடங்களும் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு தடய அறிவியல் துறைக்கு ரூபாய் 228 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நவீன உபகரணங்கள் வாங்கப்படும்.

இந்த ஆண்டில் சென்னைப் பெருநகர் உள்ளிட்ட, தமிழ்நாடு காவல் துறையைக் கணினிமயப்படுத்தி, நவீனமயமாக்கும் திட்டத்திற்கு 378 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஊர்க் காவல் படை பற்றி இங்கே பேசப்பட்டது. ஊட்டியிலே உள்ள ஊர்க் காவல் படை பயிற்சி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சிவகங்கை, புதுக்கோட்டை, நாகர்கோவில், உதகமண்டலம் ஆகிய நான்கு நகரங்களில் உள்ள ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 1–20

கடற்கரை காமராஜர் சாலையிலே தற்போதுள்ள காவல் துறை இயக்குநர் அலுவலக வளாகத்திற்குள்ளேயே புதிதாகக் கூடுதல் கட்டடம் கட்டப்படும். அந்த காமராஜர் சாலையிலே உள்ள கட்டடம், D.G.P. Office -- அதை இப்பொழுது பார்த்தாலும் அதற்கு வரவிருந்த ஆபத்தை நாமெல்லாம் மறக்க முடியாது. 1994 ஆம் ஆண்டு அந்தக் கட்டடத்தை இடிப்பதற்கு ஏலமே விட்டுவிட்டார்கள். அப்படி ஏலம் விட்டு, அதை ஏலத்திலே எடுத்து, இடிப்பதற்கும் தொடங்கிவிட்டார்கள். நல்லவேளையாக, அந்த நேரம் பார்த்து, 1996–ல் அவர்கள் அதை இடித்துக்கொண்டிருக்கும்போதே நம்முடைய ஆட்சி வந்தது. நம்முடைய ஆட்சி வந்தபோது, அருள் அவர்களும், இந்த ஆங்கில வேண்டுகோள் ஒன்றை விடுத்து, அந்த ஆங்கில வேண்டுகோளில், C. Subramaniam, former Governor of Maharashtra, Raveendran, former D.G.P., V.R. Lakshminarayanan, former D.G.P., Kamalhassan, Film Artiste, Ramanathan Krishnan, Tennis Player, R.K. Narayan, Author, Semmangudi Srinivasa Iyer, Musician ஆகிய இவர்களெல்லாம் கையெழுத்திட்டு, "அந்த அழகான கட்டடத்தை, உலகத்திலே வேறு எங்கும் இப்படிக் கடற்கரை ஓரத்திலே இல்லாத, எழில் மிகுந்த ஒரு கட்டடத்தை இடிக்கக் கூடாது; அது அப்படியே இருக்க வேண்டும்; அதைப் பழுதுபார்த்து அப்படியே வைத்திருங்கள்" என்று கடிதம் எழுதினார்கள்.

அதற்குப் பிறகு, அதைப் பற்றி விசாரித்தால், அதை ஒருவர் ஏலத்தில் எடுத்து, இடிக்க ஆரம்பித்துவிட்டார். அவரை அழைத்து, கெஞ்சிப் பேசி, அவர் அதைக் கேட்காமல் நீதிமன்றத்திற்குச் சென்று, நாங்கள் நீதிமன்றத்திலே சென்று வாதாடி, அந்த வழக்கை வாபஸ் பெறச் செய்து, அந்த இடத்தை இப்போது காப்பாற்றி வைத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதுதான் இன்றைக்கு சென்னை மாநகரத்தினுடைய தாஜ்மஹாலாகக் காட்சி அளித்துக்கொண்டிருக்கிற அந்த D.G.P.–யினுடைய Office என்பதை உங்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வளவு அழகான கட்டடத்தை மீட்டு, இன்று நீங்களும், இங்கே சுற்றுலா வருகின்ற பயணிகளும் இரசிக்கத்தக்க அளவுக்கு மாற்றிய அந்தப் பெருமை, அதற்கு ஒத்துழைத்த பெருமை காவல் துறை நண்பர்களுக்கும், அதிகாரிகளுக்கும் உண்டு; இந்த விண்ணப்பம் எழுதியவர்களுக்கும் உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

[illegible] Commissioner Office 10 கோடி ரூபாய் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது.

[illegible] அருகில் உள்ள ஊனமாஞ்சேரியில் தமிழ்நாடு காவல் துறை வீட்டு வசதிக் கழகத்தின்மூலம் கட்டப்பட்டு வரும் தமிழ்நாடு காவல் பயிற்சிக் கழகக் கட்டடத்திற்கான முதல் கட்டப் பணி ஜூன் மாதம் முடிவுறும். அதற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

குழல் வாசிக்கும் காவலர்கள் 55 பேர், இரண்டாம் நிலைக் காவலர்களாக இருக்கிறார்கள்; அவர்கள் 1993–1994 ஆம் ஆண்டில் முறையான இரண்டாம் நிலைக் காவலர்களாக மாற்றப்பட்டு, 10 ஆண்டு காலம் பணி முடித்த நிலையில், 31–12–2004 முதல் முதல் நிலைக் காவலர்களாகப் பதவித் தரம் உயர்த்தப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

ஒரு வேறுபாடு பாருங்கள். 1989 ஆம் ஆண்டு—பீட்டர், நீங்களும் கொஞ்சம் சேர்ந்து பாருங்கள், ஒரு வேறுபாட்டை நோக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1989 ஆம் ஆண்டில்—தி.மு.க. ஆட்சியில் இரண்டாம் நிலைக் காவலர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்ட 94 பேர், தரம் உயர்த்தலுக்கு முழுத் தகுதி பெற்றிருந்தும், முன்னர் அளிக்கப்பட்ட கருத்துருவில் இவர்களது பெயர் விடுபட்டதால், அவர்களை முதல் நிலைக் காவலர்களாகத் தரம் உயர்த்துவதோடு, அவர்கள் 15 ஆண்டு காலப் பணியையும் முடித்துள்ளதால், தலைமைக் காவலர்களாக இப்போது உயர்த்தப்படுகிறார்கள். அவர்கள் உயர்த்தப்படவில்லை, அவர்கள் தி.மு.கழக ஆட்சியிலே இடையிலே நிலைக் காவலர்களாகப் பணி நியமனம் பெற்ற இரண்டாம் உயர்த்தப்படவில்லை. இதற்கு மாறாக, 1995 ஆம் ஆண்டு காரணத்தால் ஆட்சியில் பணியமர்த்தப்பட்ட 2,207 இரண்டாம் நிலைக் அ.தி.மு.க. 2005 ஆம் ஆண்டில் 10 ஆண்டு காலப் பணியை முடித்துள்ள காவலர்கள், இவர்கள் அனைவரையும் முதல் நிலைக் காவலர்களாக நிலையில், நாம் முடிவு செய்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) தரம் உயர்த்த படத்தையும் பாருங்கள்; இந்தப் படத்தையும் பாருங்கள்; அந்தப் தட்டும் ஒலி) அதற்காகத்தான் சொல்கிறேன். அதனால், (மேசையைத் என்ன ஆதாயம் வருமென்றால், தற்போது 6,563 ரூபாய் மாத இவர்களுக்கு பெற்று வரும் இந்த இரண்டாம் நிலைக் காவலர்கள், ஊதியம் காவலர்களாகப் பதவி உயர்வு பெற்று, மாத ஊதியமாக 6,842 முதல் நிலைக் பெறுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் ரூபாய் தட்டும் ஒலி)



பிற்பகல் 1–25

ஆயுதப் படையில் தலைமைக் காவலர்களாக 10 ஆண்டு காலம் பணி முடித்ததோடு, மொத்தம் 25 ஆண்டு காலம் பணியாற்றியுள்ள 42 தலைமைக் காவலர்களுக்கு அ.தி.மு.க. ஆட்சி கொடுக்கத் தவறிய பதவி உயர்வினை 1–6–2005 முதலே முன்தேதியிட்டு வழங்கி, அவர்களைச் சிறப்புச் சார்பு ஆய்வாளர்களாகப் பதவி உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தின் தேசிய நெடுஞ்சாலைகளில் விபத்துகளைக் குறைக்கவும், போக்குவரத்தைச் சீர்படுத்தி, விதிகளைச் செயல்படுத்துவதில் சிறப்பான கட்டுப்பாட்டைப் பராமரிக்கவும், பின்வரும் இடங்களில் ஒவ்வொன்றிலும் தலா ஓர் ஆய்வாளர், 2 உதவி ஆய்வாளர்கள், 4 தலைமைக் காவலர்கள், 4 முதுநிலைக் காவலர்கள், 12 இளநிலைக் காவலர்கள் மற்றும் ஓர் இரண்டாம் நிலை வாகன ஓட்டுநர் காவலர்களைக் கொண்ட 20 போக்குவரத்துக் காவல் நிலையங்களை 8.27 கோடி ரூபாய் செலவில் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தப் போக்குவரத்துக் காவல் நிலையங்கள் அமைக்கப்படும் இடங்கள்: கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு, திருப்பெரும்புதூர், உளுந்தூர்பேட்டை, விக்கிரவாண்டி, பெருமாநல்லூர், சமயபுரம், திருமங்கலம், சமயநல்லூர், புதுச்சத்திரம், ஓமலூர், சங்ககிரி, ஆத்தூர், காங்கேயம், பவானி, வேடசந்தூர், ஒட்டன்சத்திரம், வள்ளியூர், சாத்தூர், பெரம்பலூர். (மேசையைத் தட்டும் ஒலி)

தேசிய நெடுஞ்சாலைகள் அமைந்துள்ள காஞ்சிபுரம், விழுப்புரம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, நாமக்கல், சேலம், ஈரோடு, திண்டுக்கல், நெல்லை ஆகிய பத்து மாவட்டத் தலைநகரங்களிலும், சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நடமாடும் நீதிமன்றங்களைப்போல, ஒரு கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் நீதிமன்றங்கள் அமைப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கோவை மாவட்டத்தில், கே.ஜி. சாவடி புறக்காவல் நிலையம், திருச்சி மாவட்டத்தில் கொள்ளிடம், மணிகண்டம் புறக்காவல் நிலையங்கள், விழுப்புரம் மாவட்டத்தில் மூங்கில்துறைப்பட்டு புறக்காவல் நிலையம், கடலூர் மாவட்டத்தில் நடுவீரன்பட்டு புறக்காவல் நிலையம், வேலூர் மாவட்டத்தில் மேல்பட்டி புறக்காவல் நிலையம், மதுரை மாவட்டத்தில் அப்பன் திருப்பதி புறக்காவல் நிலையம், தேனி மாவட்டத்தில்

ஹைவேவிஸ் புறக்காவல் நிலையம், கன்னியாகுமரி மாவட்டத்தில் தொட்டியோடு புறக்காவல் நிலையம், திருச்சி இரயில்வே மண்டலத்தில் திருப்பூர் புறக்காவல் நிலையம் ஆகியவற்றைக் காவல் நிலையங்களாக 2.96 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை நகாத்தில் எம்.எம். காலனியில் உள்ள எம்.2 காவல் நிலையத்தை, 4 ஆம் தரத்திலிருந்து 2 ஆம் தரக் காவல் நிலையமாகவும், மாங்காட்டில் உள்ள டி.14 காவல் நிலையத்தை 4 ஆம் தரத்திலிருந்து இரண்டாம் தரக் காவல் நிலையமாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) குன்றத்தூரில் உள்ள டி.13 காவல் நிலையத்தை 5 ஆம் தரத்திலிருந்து இரண்டாம் தரக் காவல் நிலையமாகவும், முத்தா புதுப்பேட்டையில் உள்ள டி.8 காவல் நிலையத்தை 4 ஆம் தரத்திலிருந்து இரண்டாம் தரக் காவல் நிலையமாகவும், காஞ்சிபுரம் மாவட்டம், கல்பாக்கத்தில் உள்ள 4 ஆம் தரக் காவல் நிலையத்தை இரண்டாம் தரக் காவல் நிலையமாகவும், கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் உள்ள 4 ஆம் தரக் காவல் நிலையத்தை மூன்றாம் தரக் காவல் நிலையமாகவும், தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் உள்ள 4 ஆம் தரக் காவல் நிலையத்தை மூன்றாம் தரக் காவல் நிலையமாகவும், மதுரை மாவட்டம், ஒத்தக்கடையில் உள்ள 5 ஆம் தரக் காவல் நிலையத்தை மூன்றாம் தரக் காவல் நிலையமாகவும், திருப்பரங்குன்றத்தில் உள்ள 4 ஆம் தரக் காவல் நிலையத்தை மூன்றாம் தரக் காவல் நிலையமாகவும், நெல்லை மாவட்டம், கூடன்குளத்தில் உள்ள 5 ஆம் தரக் காவல் நிலையத்தை 4 ஆம் தரக் காவல் நிலையமாகவும், வேலூர் மாவட்டம்—ஞானசேகரன் அவர்களுடைய வேண்டுகோளையேற்று— சத்துவாச்சாரியில் உள்ள 4 ஆம் தரக் காவல் நிலையத்தை 2 ஆம் தரக் காவல் நிலையமாகவும் 4.18 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) சிவபுண்ணியம் சில காவல் நிலையங்கள் கேட்டிருக்கின்றார். அவையும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழ்நாடு காவல் துறையில் மொத்தம்...

*முற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தமிழ்நாடு காவல் துறையில் மொத்தம் 98,897 காவல் பணியாளர்கள் உள்ளனர். ஆனால், தற்போது



42,016 குடியிருப்புகள் உள்ளன. இதன்மூலம் 42.48 சதவிகிதக் காவல் பணியாளர்களுக்கு வீட்டு வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே, 56,881 குடியிருப்புகளைக் கட்டுவது அவசியமாகிறது. தற்போது 5,373 காவல் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. அரசுக் கொள்கையின்படி ஒவ்வொரு ஆண்டும் 3,000 குடியிருப்புகள் கட்டப்படும். அதுபோல் இந்த ஆண்டும் 3,000 குடியிருப்புகள் புதிதாகக் கட்டப்படும். இதற்கு 135 கோடி ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குப் பணம் எங்கே என்று நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டார்கள். நிதிநிலை அறிக்கையிலே எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது: ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அவருக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சில முக்கியமான அறிவிப்புகளாக, காவல் துறை நண்பர்களுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய அறிவிப்புகளாக இப்பொழுது, தலைமைக் காவலர் ஒருவர் காவல் நிலைய உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வுபெற உச்சவரம்பு வயது 53 என்றும், தலைமைக் காவலர் ஆயுதப் படையில் இருந்து உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வுபெற வயது உச்சவரம்பு 55 என்றும், உதவி ஆய்வாளர் பதவியிலிருந்து காவல் நிலைய ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற வயது உச்சவரம்பு 55 என்றும், ஆய்வாளர் பதவியிலிருந்து துணைக் கண்காணிப்பாளராகப் பதவி உயர்வுபெற உச்ச வரம்பு வயது 55 என்றும் தற்போது நிபந்தனைகள் உள்ளதால, பெரும்பாலானவர்கள் பதவி உயர்வு பெற முடியாமல் ஓய்வு பெற வேண்டிய நிலைமை உள்ளது.

அரசுப் பணிகள் பெரும்பாலானவற்றில் இவ்வாறு வயது உச்ச வரம்பு இல்லாத நிலை உள்ளதால், காவல் துறையினர் இந்த நிபந்தனை காரணமாகப் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். எனவே, பதவி உயர்வு பெற, தற்போது இவர்களுக்குள்ள இந்த வயது உச்சவரம்பு அறவே நீக்கப்படுகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முடிவின் காரணமாக, உடனடியாக 450 காவல் துறை அதிகாரிகள் மற்றும் சார்நிலைக் காவலர்கள் பயனடைவார்கள். வரும் ஆண்டுகளில் தொடர்ந்து பல்லாயிரவர் பயனடைவார்கள்.

தமிழ்நாடு காவல் துறை சார்புப் பணி சிறப்பு விதியின்படி, சரகப் பதவி உயர்வுக்கான வாரியம், எழுத்துத் தேர்வையும், எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு உடற்பயிற்சித் தேர்வுகள் உள்ளிட்ட நேரடித் தேர்வுகளையும் நடத்தி, அதில் தேர்ச்சி பெற்ற தலைமைக் காவலர்களை,

உதவி ஆய்வாளர்களாக—உள்ளூர் மற்றும் ஆயுதப் படை—பதவி உயர்வு அளிக்கத் தேர்ந்தெடுக்கும் முறை தற்போது உள்ளது.

காவல் துறையிலே உதவி ஆய்வாளர் பணிக்குக் கீழே உள்ள பதவிகளுக்கோ, உதவி ஆய்வாளர் பணிக்கு மேலுள்ள பதவிகளுக்கோ, இத்தகைய பதவி உயர்வுக்கான தேர்வுகள் நடத்தப்படுவதில்லை. எனவே, தலைமைக் காவலர்கள் மட்டுமே பதவி உயர்வுக்கான தேர்வுகளைத் தற்போது எழுதி வருகின்றார்கள். இத்தகைய போக்கு தலைமைக் காவலர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கிறது. பணிமூப்பு மற்றும் பணிப் பதிவேடுகளை ஆதாரமாகக் கொண்டு இதரப் பதவிகளுக்குப் பதவி உயர்வு அளிப்பதைப்போல, இவர்களுக்கும் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை தலைமைக் காவலர்களிடையே நீண்ட காலமாக இருந்து வருகிறது. இந்த அரசு இதை ஏற்று, இனி தலைமைக் காவலர் பதவியிலிருந்து உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வுக்கு நடைபெறும் தேர்வு முறையை இரத்துச் செய்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பத்தாயிரம் இரண்டாம் நிலைக் காவலர்களைத் தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதிலே முதற்கட்டமாக இந்த ஆண்டு 5,000 பேர் தேர்வு செய்யப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றும் காவலர் குடும்பங்களைச் சார்ந்த பெண்களுக்குப் பொருளாதாரப் பயன்கள் கிடைக்கும் வகையில், அவர்களுக்கு ஏற்கெனவே கழக ஆட்சியிலே நடைமுறையில் இருந்ததுபோல், தமிழ்நாடு சிறப்புக் காவலர் பெண்கள் பனியன் தயாரிப்போர் தொழில் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து நேரடியாக விலைப்புள்ளிகள் பெற்று பனியன்களைத் தயாரித்து வழங்கிட அந்தச் சங்கத்திற்கு ஆணைகள் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–35

இதுவரை தமிழ்நாடு ஆயுதப் படையிலே பணியாற்றும் காவலர்களுக்கு விடுப்புப் பயணச் சலுகை—Leave Travel Concession—கிடையாது. இனி, அவர்களுக்குக் காவல் துறையில் பணியாற்றும் காவலர்களுக்கு இருப்பதைப்போல விடுப்புப் பயணச் சலுகை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



இடர் நிதி என்று அவர்களுக்கு ஒரு சிறப்பு நிதி வழங்கப்படுகிறது. இடர் களையும் நிதி, இடருகிற நேரத்திலே பயன்படுத்திக்கொள்வதற்கான நிதி. அதை இடர்ப் படி என்றும் சொல்வார்கள். இடர்ப் படியோ அல்லது இடரும் படியோ தெரியாது. அந்த இடர்ப் படியை இப்போது 60 ரூபாயாகக் கொடுத்து வருகிறோம். அது இனிமேல் 120 ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, துணைக் கண்காணிப்பாளர்களும், கூடுதல் கண்காணிப்பாளர்களும் தற்போது இடர்ப் படியாகப் பெற்று வரும் ரூபாய் 70 என்பதை இனி 140 ரூபாயாக உயர்த்தியுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உயர்வு 1–9–2006 முதல் நடைமுறைக்கு வரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறையிலே இடர்ப் படியை உயர்த்துவது என்று முடிவெடுக்கப்பட்டதைப்போலவே, தீயணைப்புத் துறையிலும் தீயணைப்போருக்கு—Fireman—தற்போதுள்ள இடர்ப் படி மாதம் ஒன்றுக்கு 40 ரூபாய் என்பதை இனி 120 ரூபாயாக உயர்த்தியுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்ட தீயணைப்புத் துறை அலுவலருக்கு வழங்கப்படும் 60 என்பதை 140 ரூபாயாக உயர்த்துவது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவும் 1–9–2006 முதல் அமலுக்கு வரும்.

முதல் தகவல் அறிக்கைக்கான படிவங்களை அச்சேற்றுவதிலும், விநியோகிப்பதிலும் சரியான நெறிமுறைகள் கையாளப்படாத காரணத்தால், பல்வேறு முறைகேடுகள் ஏற்பட்டுள்ளன. அதைக் கருத்தில் கொண்டு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கான படிவங்களை அரசு அச்சகங்களில் மட்டுமே அச்சேற்ற வேண்டுமென்றும், (மேசையைத் தட்டும் ஒலி) தனியார் அச்சகங்களில் அச்சேற்றும் நடைமுறையை அறவே ஒழிக்க வேண்டுமென்றும், அரசு அச்சகங்களில் படிவங்களை அச்சேற்றும்போதுகூட, பரிசுச் சீட்டுக்களை அச்சேற்றியபோது மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு முறைகள் அனைத்தையும் கையாண்டு அச்சேற்றப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் நிலையங்களில் முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்வது பற்றி ஒரு முக்கியமான அறிவிப்பு. சம்பவம் எந்தக் காவல் நிலைய எல்லையிலே நடைபெற்றது என்பதைக் கணக்கிலே எடுத்துக்கொள்ளாமல் —இப்போது, இங்கிருந்து போய் மயிலாப்பூர் போலீஸ் ஸ்டேஷனிலே

புகார் கொடுத்தால், அதை வாங்கிப் பார்த்துவிட்டு, "இது மயிலாப்பூர் அல்ல: திருவல்லிக்கேணிக்குப் போ" என்று சொல்வார்கள். அது இல்லாமல்—வழக்குப் பதிவு செய்யத்தக்க குற்றம் நிகழ்ந்துள்ளதாகப் பொது மக்களிடமிருந்து புகார்கள் பெறப்படும்போது, நிலைய அதிகாரி முதல் தகவல் அறிக்கையை அங்கேயே பதிவு செய்து, தக்க, சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சம்பவம் தங்கள் எல்லையில் நடைபெறவில்லை என்ற காரணத்தைக் கூறி, புகார் மனுவினை ஏற்க மறுக்கக் கூடாது. பிற காவல் நிலைய எல்லைக்குள் குற்றம் நிகழ்ந்துள்ளதாகப் புகாரில் குறிப்பிடப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு மேல் நடவடிக்கைக்காக அந்த முதல் தகவல் அறிக்கை மாற்றம் செய்யப்படும். வழக்குப் பதிவு செய்ய அவசியமில்லாத புகார்கள் அளிக்கப்படும்போது, அவை விசாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தால் தீர்வு காணப்பட வேண்டும்.

தேர்தல் அறிக்கையிலும், நிதிநிலை அறிக்கையிலும் அறிவிக்கப்பட்டுள்ள மூன்றாவது போலீஸ் கமிஷன் தலைவராக ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. ஆர். பூர்ணலிங்கம் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) போலீஸ் கமிஷன் துணைத் தலைவராக, சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) உறுப்பினர்களாக, ஓய்வுபெற்ற டி.ஜி.பி. திரு. பி. காளிமுத்து அவர்களையும் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் ஓய்வுபெற்ற சிறைத் துறை டி.ஐ.ஜி. திரு. ஜி. இராமச்சந்திரன் அவர்களையும், உறுப்பினர்–செயலாளராக திரு. இராமானுஜம், ஐ.பி.எஸ். அவர்களையும் நியமிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–40

இன்னொரு முக்கிய அறிவிப்பு. வளர்ந்து வரும் சென்னை மாநகரத்தின் தேவைக்கேற்ப போக்குவரத்துப் பிரச்சினைகளைக் கையாளவும், சட்டம்–ஒழுங்கைப் பராமரிக்கவும், வளர்ந்த நாடுகளில் உள்ளதுபோல, சமீபத்திய உயர் தொழில்நுட்பச் சாதனங்களை, Latest Hi–tech Gadgets கொண்ட நடமாடும் கண்காணிப்புப் பிரிவுகளைக் காவல் துறையில் ஏற்படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது. அதையொட்டி, இருங்காட்டுக்கோட்டையில் உள்ள ஹூண்டாய் மோட்டார் நிறுவனம் நல்லெண்ண அடிப்படையில்—as a measure of goodwill—சென்னைப் பெருநகரக் காவல் துறையின் பயன்பாட்டுக்கென குளிர்சாதன வசதியுடன்கூடிய 100 Accent இரகக் கார்களை நன்கொடையாக வழங்க



முன்வந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒரு முன்னோடித் திட்டமாக, சென்னை மாநகரில் அறிமுகப்படுத்தி செயல்படுத்தபபடும். இந்தியாவிலேயே முன்மாதிரியாகச் செயல்படுத்தவிருக்கும் இத்திட்டம் வெற்றி அடைந்த பிறகு, தமிழகத்தின் மற்ற மாநகரப் பகுதிகளிலும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

ஆயத்தீர்வை பற்றி நம்முடைய அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சில கேள்விகளை எழுப்பினார். அதற்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சில விளக்கங்களைத் தந்தார். அந்த விளக்கங்கள் திருப்திகரமானதா, இல்லையா என்பதை விரைவில் தெரிந்துகொள்கின்ற அளவிற்குச் சில ஆய்வுகள் இந்த அரசின் சார்பில் நடத்தப்படும் என்ற உறுதியை பீட்டர் அல்போன்ஸ் போன்றவர்களுக்குத் தெரிவித்து, அந்தப் பணி தொடரும் என்பதையும் கூறி, எங்கே தவறு நடந்தாலும், அந்தத் தவறுகளை—அந்த வீரப்பன் விவகாரத்தில் காவல் துறை அதிகாரி காளிமுத்துவுக்குக் கடந்த ஆட்சியில் மற்றவர்களுக்கு வழங்கப்பட்டதைப்போல வீட்டுமனை, பணமுடிப்பு வழங்கவில்லை என்று செய்திகள் எனக்கு அனுப்பப்படுகின்றன. நேற்றே சொல்லிவிட்டேன். நான் வந்து வழங்க வேண்டும் என்று விட்டுவிட்டார்கள்போல் தெரிகிறது; அது வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நேற்று, நம்முடைய விஜயகாந்த் பேசும்போது, அறிஞர் அண்ணா அவர்களைக் குறிப்பிட்டு, அண்ணா அவர்கள் சொந்தக் கட்சிக்காரனையே, சில அலுவல்களிலே இருந்தவர்கள் தவறு செய்தபோது நடவடிக்கை எடுத்தார் என்று குறிப்பிட்டார்கள். நானும் அண்ணாவின் தம்பிதான். சொந்தக் கட்சிக்காரர்கள் மட்டும் அல்ல; சென்னை மாநகராட்சி மன்றத்தின் மேயரையே கைது செய்தவன் நான். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) Muster roll என்று ஒரு வழக்கு வந்தது. அந்த Muster roll வழக்கில், எல்லாக் கட்சியினரும் இருந்தார்கள். அனைத்துக் கட்சியினரும் இருந்தார்கள். அப்போது, இதே அவையில் எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள், அந்த Muster roll ஊழலைப் பற்றிப் பேசினார்கள். பேசியவுடனேயே எழுந்து, "நடவடிக்கை எடுக்கப்படும்; இப்போதே அறிவிக்கிறேன்; மாநகராட்சி மன்றம் கலைக்கப்படுகிறது; அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மேயராக இருந்தாலும்கூட கலைக்கப்படுகிறது" என்று அறிவித்து, மறுநாளே மேயர் கைது செய்யப்பட்டதும், மாநகராட்சி மன்றத்தினுடைய உறுப்பினர்கள், முக்கியமான உறுப்பினர்கள், யார், யார் சென்னையிலே

மாநகராட்சி மன்றம் உருவாவதற்குப் பாடுபட்டார்களோ, பணியாற்றினார்களோ, அவர்களையெல்லாம் தயவுதாட்சண்யம் இல்லாமல் கைது செய்த ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல தஞ்சையிலே ஒருவர், என்னுடைய ஆருயிர் நண்பர், உயிர் நண்பர், ஒரு வழக்கறிஞர். அவர் வங்கியில் செய்த தவறுக்காக, அவர் கைது செய்யப்பட்டு—வக்கீல் அவர்—அவருடைய வக்கீல் பதவி 'சன்னத்' எல்லாம் பிடுங்கப்படுகிற அளவுக்குத் தண்டிக்கப்பட்டார் என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். ஆகவே, யாராக இருந்தாலும், எவராக இருந்தாலும் அவர்கள்மீது சட்டம் பாய்வதற்கு அஞ்சாது, தயங்காது, நீதி நிலைநாட்டப்படும் என்பதை இந்த மாமன்றத்திலே, இந்த மானியக் கோரிக்கையிலே என்னுடைய முடிவுரையாக எடுத்துக் கூறி, உங்களுடைய அன்பான கருத்துகளுக்கெல்லாம் என்னுடைய பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்து, நன்றி தெரிவித்ததை ஏற்றுக்கொள்வதற்கு அடையாளமாக வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மன நிறைவான பதிலுரையை நம்முடைய மாண்புமிகு முதல்வர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த மாமன்றத்திற்குத் தந்திருக்கின்றார்கள். மூன்றாவது போலீஸ் ஆணையத்தினுடைய துணைத் தலைவராக, சட்டமன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவரான, அன்பிற்கும், மரியாதைக்கும் உரிய அருமை அண்ணன் திரு. சுதர்சனம் அவர்களை நியமித்ததற்காக, சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றி சொல்லி, அமைகின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பனைத் தேடுகின்ற பணியில் ஈடுபட்ட மூத்த காவல் துறை அதிகாரி திரு. காளிமுத்து அவர்களுக்கு அந்தச் சலுகைகள்—சலுகைகள்



அல்ல; அவர் பணியாற்றிய அந்தக் காலத்தைக் குறித்து, அவருக்கு வீட்டுமனை, பணமுடிப்பு போன்றவை எல்லாம் வழங்குவதாக அறிவித்த முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல இன்னும் சில பேர் இருக்கிறார்கள். அவரோடு சேர்ந்து பணியாற்றியவர்கள் சில பேர் இருக்கிறார்கள், விடுபட்டவர்கள். மாதக் கணக்கிலே, வருடக் கணக்கிலே பணியாற்றிவர்கள், அவர்களுக்கும் அந்தச் சலுகைகளை வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையின் நிறைவாக, நீண்ட காலமாகக் காவல் துறையில் இருந்தவர்கள் பதவி உயர்வு பெற முடியாத பலருக்கு ஒரு நல்ல வாய்ப்பை உருவாக்கித் தருகிற வகையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையிலே தெரிவித்திருக்கிற அந்தச் செய்திகளுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல 'டாஸ்மாக்' துறையில் பணியாற்றக்கூடிய ஊழியர்கள், அவர்கள் எந்தப் பணி உத்தரவாதமும் இல்லாமல் சற்றேறக்குறைய 33,000 பேர் இன்றைக்குப் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுடைய எதிர்காலத்திற்கும் ஒரு நல்ல வழிகாட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையிலே, சிறப்பான பதிலுரையைத் தந்திருக்கிறார்கள். நல்ல விமர்சனத்தைக் கொடுத்திருக்கிறார்கள். எதிர்காலத்திலே ஆக்கபூர்வமான செயல்பாடுகளுக்குரிய நல்ல அறிவிப்புகளையும் இங்கே தந்திருக்கிறார்கள். காவல் துறைக்கான ஆணையம் அமைக்கப்பட்டு, அதிலே நமது சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மரியாதைக்குரிய சுதர்சனம் அவர்கள் நியமிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று என்பதால் இந்த அவையினுடைய உறுப்பினர்கள் அனைவரின் சார்பாக வாழ்த்துதலைத்

[திரு. வை. சிவபுண்ணியம்] [2006 ஆகஸ்ட் 30

தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்கே பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டன காவலர்களுக்காக. அவற்றையெல்லாம் மிகச் சிறப்பான முறையிலே, நாங்கள் எதிர்பார்த்ததைவிடக் கூடுதலான சலுகைகளை வழங்கியிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மேலும், காவல் துறை துணை ஆய்வாளர்களுக்குரிய சில கோரிக்கைகளும் வைக்கப்பட்டன. அவர்களுடைய வயது வரம்பைத் தளர்த்த வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதைப் பரிசீலிப்பார்கள். 'டாஸ்மாக்' பணியாளர்களுடைய கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தீயணைப்புத் துறையினுடைய பணியாளர்களும் தங்களுடைய சம்பளத்தைப் பற்றிக் கோரியிருக்கிறார்கள். அதையும் பரிசீலிக்க வேண்டும். காவல் துறையிலே பணியாற்றக்கூடியவர்களுக்குக் கூடுதலாக ஊதியம் கிடைக்கிறது. அதைக் கிடைக்கச் செய்த பெருமை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. காலச் சூழ்நிலை, வளர்ந்து வருகிற நிலைமை, பொருளாதாரத்தினுடைய சூழ்நிலைகளைக் கருதி, அவர்களுக்கும் சம்பள உயர்வு வழங்குவதற்கான முயற்சிகளை எதிர்காலத்திலே மாண்புமிகு கலைஞர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்ற என்னுடைய பணிவான வேண்டுகோளையும் வைத்து நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் உதவி ஆய்வாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்; ஆயிரத்து சொச்சம் பேர். அதிலே 98 காவலர்களுக்கு, சட்டம்–ஒழுங்கைப் பார்க்கின்ற தாலுகா காவல் நிலையத்தில் பணியமர்த்துவதற்கான வாய்ப்பு வழங்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு முத்தமிழறிஞர் முதல்வர் அவர்கள், அந்த 98 உதவி ஆய்வாளர்களையும் தாலுகா காவல் நிலையத்தில் பணியமர்த்துவதற்கு ஆவன செய்வார்களா என்பதோடு, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் தலைவர் அவர்களிடத்தில் ஆளுநர் உரையின்போதும், நிதிநிலை அறிக்கையின்போதும் தொடர்ந்து ஒரு வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.



2006 ஆகஸ்ட் 30] [திரு. தி. வேல்முருகன்]

சிறைச்சாலைகளில் கடந்த 15, 20 ஆண்டு காலமாக விடுதலை பெறாமல் இருந்து வருகிறார்கள். கடந்த மாதம்கூட பக்கத்து மாநிலமான ஆந்திர மாநிலத்தில் 309 நபர்களை விடுதலை செய்திருக்கிறார்கள். நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் அவர்கள், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் வருகின்ற காரணத்தினால் அந்த அப்பாவிகளை, சிறைச்சாலையில் வாடுகின்றவர்களை, 10 ஆண்டுகளைச் சிறைச்சாலையில் நல்ல முறையில் முடித்தவர்களை விடுதலை செய்வார்களா என்பதை ஆவலோடு எதிர்பார்ப்பதோடு, அவர்கள் பரோலில் வெளியில் வருகின்றதையும் தண்டனைக் காலமாக எடுத்துக்கொண்டு விடுதலை செய்வதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 1–50

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** வேல்முருகன் எங்களை எல்லாம் விடுதலை செய்ய வேண்டும் என்ற நிபந்தனையோடு, 10 ஆண்டு சிறைவாசம் முடித்த கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள், அண்ணா பிறந்த நாளில் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல நல்ல அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள். என்மேல் போட்ட பொய் வழக்குகளையும் மத்திய அரசை, மத்தியப் புலனாய்வுத் துறையை, நியாயம், நீதி கொண்டு வர வலியுறுத்துவேன் என்று அறிவித்திருக்கிறார். என் சார்பாகவும், எங்கள் கட்சியின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமல்லாமல், பல காலக்கட்டங்களிலே எங்களுடைய பொதுச் செயலாளர்மீது பல அவதூறு வழக்குகளும், பஸ் எரிப்பு வழக்குகளும் பொய் வழக்குகளாகப் புனையப்பட்டிருக்கின்றன. எங்கள் கட்சியைச் சார்ந்த நிர்வாகிகள்மீதும், தொண்டர்கள்மீதும் பல பொய் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அவற்றையும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலித்து, அவர்களை அந்த வழக்கிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 22–உள் துறை–காவல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 22–உள் துறை–காவல். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர். இருக்கையில் இல்லை.

திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.க. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள், இருக்கையில் இல்லை.

